1270

No. M. 2210 வருஷ சந்தா 1-8-0.

ஆசிரியர் : வை. மு. கோதைநாயகி அம்மாள்.

# JAGANMOHINI

மலர் V.] [இதழ் 2.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 FEB 1928
MADRAS

தனிப் பிரதி அணா 3.

JC
M41,N22JM
N28.5.2.
182842

ஜகன்மோகினி ஆபீஸ்.
26, கோடித் தெரு, :: திருவல்லிக்கேணி, மதராஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித் தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

ஐந்தாவது ஆண்டு. ஐந்தாவது ஆண்டு.

## ஜகன்மோகினி

இது ஒரு சிறந்த மாதாந்த நாவல் பத்திரிகை. இதன் 5-வது ஆண்டு 1927 டிசம்பர்மீ முதல் ஆரம்பம். இவ்வாண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாளால் இயற்றப்பட்ட "ராதாமணி" என்னும் அருமையான துப்பறியும் நாவலும், ஹாஸ்யவிநோதங்களும், வேறு சில விஷயங்களும், காவியங்களும் வெளிவருகின்றன. இதன் வருடச்சந்தா உள்நாடு, வெளிநாடு இரண்டிற்கும் ரூபாய 1—8—0.

## பத்மசுந்தரன்

இதில் மேனாட்டு நாகரிகத்தின் ஆடம்பரமும், முடிவில் அதனாலடையும் துன்பங்களும், பண்டைக்கால பழக்கத்தின் பெருமையும், கதாநாயக நாயகியின் ஒவ்வொரு அம்சத்தின் உயர்ந்த நோக்கமும், காதலின் திறமையும், துப்பறிபவரின் விசித்திரமான செய்கைகளும, செல்லப்பாவின் துயரமும், அவன் தன் தீயொழுக்கத்திலிருந்து உடனே திருந்துவதும், அவனது பெற்றோரின் நிலைமையும், மணத்தக்காளியம்மாள், சுண்டைக்காயம்மாள், அழுமூஞ்சி அண்ணாவி இவர்களின் ஹாஸ்ய ரஸப் பிரதானமான செய்கைகளும் இன்னுமற்ற ரஸபாவங்களும் படிக்கப் படிக்க சலிப்பென்பதே தோமல் ஆநந்திக்கச்செய்யும். சித்திரப் படங்களுடன் கூடியது.

விலை ரூபாய் 2—8—0.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

திருவல்லிக்கேணி, சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 FEB 1928
MADRAS

உ

ஓம்

# ஜகன் மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மேய்யுணர் வில்லா தவர்க்கு
ஜகன்மோ கினியேன்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

| மலர் V | ப்ரபவ௵ தை௴<br>January 1927. | இதழ் 2 |
|---|---|---|

## கடவுள் வணக்கம்

ஆநந்தக் களிப்பு மெட்டு.

11. இச்சகம் போற்றும் மருந்து—எழில்
பச்சைமாமேனி படைத்த மருந்து
மச்சாவதார மருந்து—எங்கும்
அர்ச்சாவதாரத் தொளிரும் மருந்து

12. ஆமைபோல் வந்த மருந்து—அது
பூமியை மீட்டுக்கொடுத்த மருந்து
வாம வராக மருந்து—யாரும்
தாமோதரா வெனத் தாழும் மருந்து

13. அரக்கனை யழித்த மருந்து—பக்தன்
பிரகலாதனழைத்திட வந்தமருந்து
மரக்கம்பத் துதித்த மருந்து—யாரும்
நரசிங்க வென்றேத்து நாமமருந்து

14. வாமன மாயமருந்து—கெடும்
பூமியும் வானையும் போர்த்தமருந்து
சாமளரூப மருந்து—போற்றும்
பாமரமக்களைக் காக்கும் மருந்து

15. வில்லை வளைத்த மருந்து—தெய்வ
மெல்லியல் சீதைக்குகந்த மருந்து
சொல்லவரிதாம் மருந்து—தந்தை
சொற் பரிபாலித்த சுகுண மருந்து

16. ஆடைவளர்த்த மருந்து—அன்னப்
        பேடு த்ரௌபதி விளித்தமருந்து
    ஈடயெர்வற்ற மருந்து—தனிப்
        பீடேன் எங்கும் பிறங்கும்மருந்து
17. தேவர்கள் போற்றும் மருந்து—திருப்
        பாவையை மார்பினில் கொண்ட மருந்து
    பூவிதழ்ப் பாதமருந்து—ஜகம்
        யாவையும் குட்சியிலேவைத்த மருந்து
18. பாகத்தில் சிறந்த மருந்து—ஜகன்
        மோகினி ரூபமும் கொண்ட மருந்து
    நாகசயன மருந்து—க்ரூரக்
        காகத்தின் கண்ணைப் பெயர்த்த மருந்து
19. பாண்டவநேய மருந்து—தன்னை
        வேண்டியவர்களைக் காக்கும் மருந்து
    காண்டற்கரிய மருந்து—எழில்
        தாண்டவங்காட்டும் தனித்த மருந்து
20. ஆனிரை மேய்க்கும் மருந்து—கூனி
        கூனை நிமிர்த்த குணமா மருந்து
    மானிலம் போற்றும் மருந்து—எங்கும்
        தானாகி நின்ற தயாள மருந்து.

(தொடரும்)

வை. மு. கோ.

---

## அநுபவ நீதிசாரம்.

### கடிதத்தின் வலிமை.

(1) சினேகத்தை விருத்தியடையச் செய்வதற்கும், அளவற்ற ஆநந்தத்தை உண்டாக்குவதற்கும் கடிதத்தினிடமுள்ள சாமார்த்தியம் வேறெதற்குமில்லை. மனிதர்களின் உயிருக்கு எமனாக நிற்பதற்கும் அக்கடிதத்தினிடத்தில் அபரிமிதமான சக்தியுண்டு. தேனுமதுவே! தீயுமதுவே!

### அறிந்தபின் செய்வன.

(2) உனது சினேகிதர்மீது நீ உன் உயிரையே வைத்துச் சினேகம் செய்யலாம். அவர்கள் உன்னிடம் அவ்விதமில்லாது உன்னைப்பற்றிப் புறங்கூறத் தலைப்பட்டு அதை நீ அறிந்தபின்னர், பழைய மாதிரி இருப்பது உனது [illegible] பகையும் வேண்டாம்; பகைமையும் வேண்டாம். உன்னை நீ காப்பதற்கு இதுதான் வழி.

(2) உன் கணவனை மகிழ்விப்பதைவிட இன்பம் உனக்கு வேறில்லை. உனது முதல் கடமையாக அதைச் செய்தால் அதன் வழியாகச் சகலமும் அறியலாம், பெறலாம். அதுவே உனது பிறவியின் சாதகம்!

182842



கோமளவல்லிநாச்சியார், சுந்தரபாண்டியன். (24—வது பக்கம்.)

8- JUL 1922

8- JUL 1922

# காளிங்கராயன் கோட்டை ரகசியம்.

## 1-வது அதிகாரம்

### காற்றும் மழையும், களவும், காட்டேறியும்.

ஐப்பசி மாதம் தொடங்கி ஐந்து நாட்களே ஆயின; இரவு கரிக்குழம்பாக இருண்டு கிடந்தது. மேகங்கள் அடர்ந்து களங்கனிபோலக் கருத்துக் குமுறிக் கொண்டிருந்தன. இடையிடையே மின்னல்கள் பளீர் பளீரென விரிந்து கண்ணைப் பறித்தன. மகா பயங்கரமாக எழுந்த பேரிடி முழக்கத்தினால் மனிதர் முதல் காடி புலி சிங்கம் யானை பறவை பூச்சி புழுக்கள் ஈறாகவுள்ள சகலமான ஆன்மாக்களும் குடல் நடுக்க மடைந்து கூக்குரலிட்டு மூலை முடுக்குகளிற்போ யொளிந்தன. சண்டமாருதம் போல வெழுந்த புயற்காற்றும் மழையும் ஒன்றுகூடி, உலகத்தையே அழித்து விடுமோவென ஐயுறும்படி ஆரவாரம் செய்து வீடுகளைத் தகர்த்து மரங்களைப் பெயர்த்து மகாகொடூரமான சமர் தொடுத்துக் கொண்டிருந்தன.

அந்த நிலைமையில், மலையாள தேசத்திலே, மகா உன்னதமாகப் பரவிக் கிடக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையினடிவாரத்திலுள்ள பிரம்மாண்டமான ஆரணியமொன்றில், ஆகாயத்தை அளாவி நின்ற தேக்கு, வேங்கை, நமை, கல்வாகை முதலிய விருக்ஷங்களெல்லாம் சடசடவென முறிந்து தலைசாய்ந்து வீழ்ந்தன. அதுகாறும் பளிங்கு போலத் தெளிந்து சலசலவென இன்னொலி தொனிக்கச் சென்று கொண்டிருந்த நீரோடைகளும், சிற்றாறுகளும் கலங்கி வீங்கி யெழுந்து பெரும் பெரும் காட்டாறுகளாக நிறைந்து அண்டம் செவிடுபட அதிமுழக்கம் செய்து, யாவற்றையும் சூறையாடிக் கொண்டு, காட்டகத்தைவிட்டு நாட்டகத்தை நோக்கி ஓடின. ஊதலும் சாரலும், பேய் பிசாசுகள் ஓலமிடுவது போல, விர்விர்றென்று வீசிச்சாடின. நரிகளும் புலிகளும், ஏனைய விலங்குகளும் அத்தகைய

பெருந்துன்பத்தின் முன்னர் நிற்க ஆற்றுமல், எங்கே ஓடுவோம், எங்கே மறைவோம் என்ற ஆவலும் போச்சமும் கொண்டு ஊளை யிட்டோடின.

அப்படிப்பட்ட மகா பயங்காமான பிரளய காலத்திலே, அந்த ஆரணியத்திற்கு வெளியில், அதன் ஓரமாக இருந்த ஒரு கற்பாறை யின்மீது காணப்பட்ட ஒரு சிறிய குடிசையில், ஒரு மனிதன் மிக வும் துக்ககாமாக அழுதுகொண்டிருந்த ரோதனக் குரலும் கேட்டது; அந்தக்குரல் மாணவேதனைப் படுவோனது குரல்போல வெழுந்து, கேட்போர்மனம் இளகி உருகி வேதனையடையச் செய்வதாக இருந்தது; மிகவும் சிறியதாகத் தோன்றிய அந்தக் குடிசைக்குள் படுத்துப் புரண்டழுதுகொண்டிருந்த அந்த மனிதனது வயது எண்பதிற்குமேலிருக்கலாம்; அவனது சிரம் முழுதும் வழுக்கையாக விருந்தது; வாயில் பற்களே காணப்படவில்லை; தும்பைமலர்போல வெளுத்திருந்த அவனது தாடி மிகவும் நீண்டிருந்தது; உடம்பு முழுதும், காடியின் உடம்புபோல, நீண்ட உரோமங்களும் நீண்டு வளைந்த நகங்களும் உடையதாக இருந்தது. இரத்தமும் தசைப்பிடிப்பு மற்று, எலும்பும் தோலுமே எஞ்சி இருந்தமையால், அதி முதிர்ச்சி யடைந்த அவனது சரீர அங்கங்கள் யாவும்மெலிந்து தளர்ந்து இப்பொழுதோ அடுத்த நொடியிலோ ஓய்ந்து மடிந்து விடுமென்னலாம் படி இருந்தன.

மிகுந்த விருத்தாப்பிய நிலைமையை அடைந்திருந்த அந்த மனிதனுக்கு ஒரே ஒரு பேர்த்தியைத் தவிர, மனைவி மக்கள் சுற்றத்தார் நட்பினர் முதலிய எவரும் இல்லை யாதலால், அவன் இவ்வுலகத்தில் ஏகாங்கியாகவே இருந்துவந்தான்.

அந்தப் பேர்த்தியோ மகா ரூப லாவணியம் பொருந்திய அற்புத வடிவழகியாகவும், தெய்வ கன்னிகையோ, வனமங்கையோ, நாககன்னிகையோ என மன்னுதி மன்னரும் ஐயமுற்று, மயங்கி அவள்மீது மையல் கொள்ளத் தகுந்த உன்னத வசிகாத்தோற்றம் வாய்ந்தவளாகப் பதினைந்து வயதுவரையில் வளர்ந்திருந்து, அந்த வயோதிகனுக்கு உணவு தேடி உண்பித்து போஷித்து, கண்களை இமைகள் காப்பதுபோல, அவனைக் காப்பாற்றி அவனுக்கு ஜீவாதாரமாக இருந்து வந்தவள், அன்றைய காலைப்பொழு

தில் கனிகிழங்குகள் சேகரித்துவர வெளியிலே சென்று, அது காறும் திரும்பி வாராமையே அந்த வயோதிகனது துன்பத்திற்கும் துயரத்திற்கும் காரணமாக விருந்தது. அதிகாலையி லெழுந்து வெளியே சென்று, அவளால் பயிரிடப்பட்டிருந்த தினையையும், மரங்களில் காணப்படும் காட்டுத்தேனையும், பலாக் கனிகளையும், கிழங்குகளையும் கொணர்ந்து உணவு தயாரித்துப் பகல் பத்து நாழிகைக்குமுன் எப்போதும் தவருது அவனை உண்பிப்பவள், அன்றிரவு அவ்வளவு நேரம் வரையில் வாராமலிருந்தது, விருத்தாப்பியனது மனதில் பெருத்த அச்சத்தையும், சந்தேகத்தையும், பலவிதமான யூகங்களையும், சகிக்க இயலாத துயரத்தையும் உண்டாக்கி விட்டது.

அவள் ஒருகால் துஷ்டமிருகங்களால் கொல்லப்பட்டிருப்பாளோ, அல்லது, பாம்பு முதலிய விஷ ஜெந்துக்களின் தீண்டலினுல் உயிர் துறந்திருப்பாளோ, அல்லது, பாறையிலோ மலையிலோ வழுக்கி வீழ்ந்து மாண்டிருப்பாளோ என்ற பலவகையான எண்ணங்களுதித்தன. அவனது பார்வை பஞ்சடைந்து மங்கலாகப் போயிருந்ததானுலும், அவன், அந்தப் பிரிவை சகிக்கமாட்டாதவனுக எழுந்து தட்டித்தடுமாறி மெல்ல நடந்து, அந்த ஆரணியத்திலும் அண்டையிலுள்ள நீரோடை தினைவயல் காய்கறித் தோட்டம் ஆகிய அவள் போகக்கூடிய இடங்களிற் கெல்லாம் சென்று பார்த்து அவளைக் காணுமல், வாடி வதங்கி அபாரமான விசனத்திலுைம் பசிதாகத்தின் களைப்பினுலும் மேற்கொள்ளப் பட்டவனுகத் திரும்பிவந்து குடிசையை யடைந்து, தனது ஜீவாதாரப் பொருளான பேர்த்தி எப்படியும் வந்து சேருவாள் சேருவாளென்று கோடிக்கு நூறுமுறை நினைத்து நினைத்து ஏங்கிய வண்ணம் சோர்ந்து கிடந்தான். அவனிருந்த குடிசைக்கு நான்குமயில் தூரத்திற்கு அப்பால் ஒரு சிறிய ஊரிருந்தது. அந்தப் பெண்மணி உப்பு, எண்ணெய் முதலிய அவசியமான சிலவஸ்துக்கள் தேவையாகும் போது, அந்த ஊருக்குப் போய்வருவது வழக்கம்; ஆனல் அவள் அந்த ஊருக்குப் போகும்போது, தான் அங்கேபோவதாகக்கூறித், தனது பாட்டனது அநுமதி பெற்றுக்கொண்டே போவது முறைமையாதலாலும், அன்றைய காலையில் அவள் அவ்வாறு கேட்டு

அநுமதி பெறவில்லை யாதலாலும், அவள் அங்கே போகவில்லையென்ற உறுதிமாத்திரம் உண்டாயிற்று.

ஆகவே, அவள் தன்னை மனதாரக் கைவிட்டு, எங்கே யாகிலும் போய் விட்டாளோ என்ற நினைவே அவனது மனதில் எழுந்தெழுந்து போராடியது. பொழுதேற ஏற அவனது அங்கங்களும், மனதும் தளர்வும் ஓய்வும் அடைந்துகொண்டு வந்தன. அவன் அந்த விசனத்தை சகிக்கமாட்டாதவனாய், முக்கிமுனகி ஓலமிட்டழுத வண்ணம் கிடந்தான்.

அந்தப் பெண்மணியின் சவரக்ஷணையின்றித் தான் ஒருநொடி நேரம் பிழைத்திருக்க இயலாதென்ற நினைவு மனதில் ஊன்ற,ஊன்ற அவனது உயிரும் உடலைவிட்டுப் போய்க் கொண்டே இருந்தது. இனித்தனது ஆடுமாடுகளைப் பட்டியிலடைத்துப் பாதுகாப்பதுயார்? காய்ந்த சுள்ளிகளை ஒடித்துக் கொணர்ந்து நெருப்பு மூட்டுவது யார்? தனது சிறிய கொல்லையில் தினையையும், காய்கறிகளையும் பயிரிடுவது யார்? அவைகளைச் சேகரித்து உணவு தயாரித்துத் தனக்குக் கொடுப்பது யார்? தனக்கு வேண்டிய உடைகளை நெய்து கொடுப்பது யார்? "ஆ! என் ஆருயிர்ச் செல்வமே! என் உயிர் நிலையே! ஒரு நொடி நேரம் நான் பசித்திருக்க சகிக்காத உன் மனம், இப்படி என்னை விட்டுப் பிரிந்து போகவும் நினைத்ததா? ஆ! என் கண்மணியே! என்னுடைய இருதயம் வெடித்து விடும்போலிருக்கிறதே! எவ்வளவு காலம் இந்தக் கிழவனோடிருந்து இளமையைப் பாழாக்குவதென்று நினைத்து, உனக்குத் தகுந்த பக்குவகாலப் புருஷனைத்தேடிப் போய்விட்டாயோ! உன் மனம் அவ்வித நாட்டங் கொண்டிருந்தால், அதை என்னிடத்தில் தெரிவிக்கலாதா? நானும் உன்னோடு வந்திருந்து,நீ புருஷனைக் கட்டிக்கொண்டு சந்தோஷமாக வாழ்வதைக்கண்டு ஆநந்த மடையேனோ! ஐயோ! மகாபாவியாகிய நான் அன்னந் தண்ணீரின்றி உன்னையே நினைத்து உயிர் விடும்படி செய்துவிட்டுப்போவது முறையாகுமா? ஆ!ஜானகி!ஜானகி! ஐயோ! என் உயிர் துடிக்கிறதே! உடல் தள்ளாடுகிறதே! என் கண்ணே! என் கண்மணியே! ஆ! கண் இருளுகிறதே! நெஞ்சடைக்கிறதே! ஐயோ தெய்வமே! என்னசெய்வேன்!" என்று கூக்குரலிட்டுப் பிரலாபித்து அழுதுகொண்டு அன்றிரவு நெடுநேரம் வரையில் கிடந்த

அந்த மகாபரிதாபகரமான விருத்தாப்பியன், தான், அதற்குமேல் உயிரோடிருப்பதை விட, ஏதாவது முயற்சி செய்து, தனது உயிரை நீத்து விடுவதே உசிதமென நினைத்து, சிறிது தூரத்திலிருந்த ஒரு மடுவில் வீழ்ந்து மடிவதெனத் தீர்மானித்துக்கொண்டு, மெதுவாக நகர்ந்து நகர்ந்து வெளியிலேவந்து மடுவை நோக்கிச் சென்ருன். புயலும் மழையும் நிற்காமல், அபரிமிதமாக அடித்துக் கொண்டிருந்தன வாளுலும், கிழவன், தான் இறந்துவிட வேண்டுமென்ற உறுதியினுல் ஊக்கப்பட்டவனுய் நெடுந்தூரம் சென்ருன்.

மழையும் காற்றும் அவனது உடம்பில் வலுவாகத் தாக்கின வாளுலும், அந்தத் தாக்கல் அவனது உயிரை ஒழிக்கக்கூடியதாக இருக்கவில்லே. ஆகவே, பாதிதூரம்வரையில், அந்தத் துன்பத்தினுல் அலட்டப்பட்ட கிழவன், அங்கே காணப்பட்ட ஓர் ஆலமரத்தடியில் தங்கி இருந்து, மழையின் வேகம் தணிந்தபிறகு போய் மடுவில் வீழ்ந்து உயிர் துறக்கலாமென எண்ணி, அந்த ஆலமரத்தடியில் மறைந்தான்.

அந்த ஆலவிருக்ஷம் அரைக்கால்மயில் அகலம் பரவி எண்ணிறந்த, விழுதுகளே ஆயிரக்கால் மண்டபம் போல விடுத்து, ஒரு பெருத்த மாளிகையோவெனக் கோடாநுகோடி பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் பேய் பிசாசங்களுக்கும் இருக்க இடமாகஅமைந்திருந்தது.

மரத்தடிக்குச் சென்ற கிழவன் அப்போதும் கரைந்துருகிப் பிரலாபித்தழுது "ஐயோ! ஜானகி! மோசம் செய்து விட்டாயே! இனி எனக்கு யார்துணேயம்மா! ஐயோ! இந்தப்பாழும் உயிர் நீங்கமாட்டேனென்கிறதே! இவ்வளவு கொடிய அரணியத்தில் என்னேக் கடித்துக் கொல்ல, ஒரு பாம்புக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டதா! இத்தனே இடிகளில் ஓர் இடியாகிலும் என்மேல் விழமாட்டேனென்கிறதே! ஐயோ தெய்வமே! இவ்வளவு பெரிய உலகத்தில் நீ சதிசெய்வதற்கு எண்பது வயதான ஓர் அநாதைக் கிழவன்தானு உன் கண்ணில் பட்டான்? ஐயோ! அப்பா! அம்மா! கண்ணே! ஜானகி! இந்த சதிகார மழையும் நிற்கமாட்டேனென்கிறதே!" என்று கூறிப் பிரலாபித்திருந்த சமயத்தில் அந்தக் காரிருளில் அவனது கண்ணிற் கெதிரில் பளிச்சென்ற ஒரு ஜோதி காணப்பட்டது. யாரோ தனது கையால் அவனது முது

கில் தட்டுவதுபோல இருந்தது. அதைக் கண்ட கிழவன் திடுக்கிட்டு நடுங்கித் திக்பிரமை கொண்டு அந்த வெளிச்சத்தை நோக்கினன். பெருத்த பீதியினல், அவனது தேகம் வியர்த்து மயிர்க்குச் செறிந்தது. அது உண்மைக் காட்சியோ, அல்லது, தனது மனத்தின் பிராந்தியோ என்ற சந்தேகமும் தோன்றியது. அப்போது அவனுக் கருகில் தோன்றிய ஜோதியின் நடுவில், உயரமான ஒரு புருஷன் நின்று கொண்டிருந்தான். அவனது முகத்தில் கருத்து அடர்ந்த மீசைகள் கொம்புகள் போல நீண்டு மகாபயங்கரமாக இருந்தன. உடம்பு பனைமரம்போலத் தடித்துக் கருத்து ஆஜாநுபாகுவாகக் காணப்பட்டது. அவனது கண்களிரண்டும் கோவைப் பழம்போலச் சிவந்து பளபளவென மின்னிக் கொண்டிருந்தன. செம்பட்டை மயிரும், செறிந்த உதடும், குட்டை வடிவமும், அகன்ற மார்பும், பெருத்த இறுகிய புஜங்களும் இலங்க வந்துநின்ற அந்த பயங்கரமான புருஷனைக் கண்ட கிழவன் சடக்கென்று நிமிர்ந்தான். அவனது கைகால்களும், மற்ற எல்லா அங்கங்களும் கிடுகிடென்று ஆடின. கிழவன் பேசமாட்டாமல் நெஞ்சடைத்து தனது இரண்டு கைகளையும் கூப்பியவண்ணம் மருளமருள விழித்தவனுய் அசைவற்றுக் கல்லாகச் சமைந்திருந்தான்.

அவனுக்கெதிரே நின்ற அந்த பயங்கரமான மனிதன் "அடே கிழவா! நீ யாரென்பதும், உனக்கு நேரிட்ட துன்பம் இன்னதென்பதும், நீ இப்போது என்ன செய்ய நினைத்திருக்கிருயென்பதும் எனக்குத் தெரியும். உனக்கு ஏற்படுத்தப்பட்ட ஆயிசுகாலத்தில் இன்னமும் மூன்று வருஷகாலம் மிகுதியிருக்கிறது. அதற்கு முன்பாக நீ இப்போது தற்கொலை செய்துகொண்டு, அகாலமரணம் உண்டாக்கிக்கொள்ளப்போகிருய்; நீ அப்படிச் செய்து கொள்ளாமல் உயிரோடிருந்தால், ஆகாரமில்லாமல், பரமவேதனைப்பட்டு இறக்க நேரிடும். ஆகவே, நீ எப்படியும் இறந்து போகவேண்டிய நிலைமையிலிருக்கிருய்; ஆனல் நான் சொல்லும் ஓர் ஏற்பாட்டின்படி நீ நடந்துகொள்வாயானல், உனக்கு மிகுதியாக இருக்கும் அந்த மூன்று வருஷ காலத்தையும் நீ ஆநந்தமாகக் கழிக்கலாம்; நீ நல்ல யௌவனப் பருவமும், மன்மத ரூபமும், அபரிமிதமான தேகபலமும், புத்திதீக்ஷண்யமும், கல்வியழகும், எவ்விதம் அழித்தாலும்

குறையாத திரவியமும் பெறுவதோடு, நீ உன்னுடைய பேர்த்தியையும் அந்தக் காலத்திற்குள் காணலாம். உனக்கு எது விருப்பமானது? இத்தனை நன்மைகளையும் சுகங்களையும் அடைவதை விரும்புகிறாயா? அல்லது, அகாலமரணமாக இறந்துவிட எண்ணுகிறாயா?'' என்று அதட்டிக் கேட்டது.

அந்த வார்த்தைகளைக் கேட்ட கிழவன் ஒரு விதத் துணிவை அடைந்தானாலும், பயபக்தி வணக்கம் திகில் முதலிய உணர்ச்சிகளைக் கொண்டவனாய், எழுந்து கைகட்டி வாய்புதைத்து நின்று "நான் எவ்வித நம்பிக்கையையும் இழந்து தற்கொலை செய்துகொள்ள நினைத்திருந்த தருணத்தில் சமய சஞ்சீவிபோல வந்து இத்தனை நன்மைகளையும் செய்ய எண்ணுகிற தாங்கள் யாரென்பதை முதலில் அறிந்து கொள்ளவேண்டுமென்று என் மனம் ஆசைப்படுகிறது; தாங்கள் யார் என்பதைத் தெரிவிக்கவேண்டுகிறேன்'' என்றான். அதைக்கேட்ட அந்த பயங்கரமான மனிதன் "அந்த விவரத்தை யெல்லாம் நீ இப்போது கேட்பது தகாது; அவைகளை யெல்லாம் நானே பின்னால் தெரிவிக்கிறேன். இப்போது நீ சொல்லவேண்டியது ஒரே வார்த்தை; நான் சொல்லுகிறபடி நீ நடந்து கொள்வாயா? மாட்டாயா? அப்படி நடந்துகொண்டால், நான் இப்போது சொன்ன நன்மைகளெல்லாம் உனக்கு ஏற்படும். அந்த வல்லமை என்னிடத்தில் இருக்கிறதென்பதை நீ உறுதியாக நம்பலாம்.'' என்றான்.

உடனே கிழவன் சிறிது தயங்கி "தாங்கள் சொல்வதைப் பார்த்தால் என்னுடைய பேர்த்தி ஜானகி இப்போது உயிரோடிருக்கிறாளெனத் தோன்றுகிறது. அவள் இப்போது எங்கே இருக்கிறாள், யாரிடத்தில் இருக்கிறாள், என்ன நிலைமையி லிருக்கிறாள் என்ற விவரங்களையெல்லாம் தாங்கள் தெரிவித்தருள வேண்டும்.'' என்றான்.

அதைக் கேட்ட அந்த மனிதன் சிறிது கோபமடைந்து "அடே முட்டாளே! நான் கேட்பதற்கு மாத்திரம் நீ பதில் சொல்ல வேண்டுமேயன்றி, நீ என்னிடத்தில் எவ்விதமான கேள்வியையும் கேட்கக்கூடாது. உன்னுடைய பேர்த்தியை நீ காணும்படியாகச் செய்ய எனக்கு வல்லமை உண்டு என்பதை மாத்திரம் நான் உனக்

குச் சொல்லக்கூடும். என்ன சொல்லுகிருய்? எனக்கு நேரமாகிறது. நான் சொல்லுகிற நிபந்தனைகளின்படி நீ நடந்து கொள்வதாகப் பிரமாணம் செய்து கொடு. இல்லையானல், நான் போகிறேன்'' என்ருன்.

அதைக்கேட்ட கிழவன் சொற்பநேரம் சிந்தனையிலாழ்ந்திருந்த பிறகு அந்த மனிதனை நோக்கி, "சரி; தங்களுடைய பிரியப்படி நடந்துகொள்ள நான் சம்மதிக்கிறேன். இது சத்தியம்; தாங்கள் இனி விஷயத்தைத் தெரிவிக்கலாம்'' என்ருன். உடனே அந்த மனிதன் கிழவனை நோக்கி "நான் நெடுங்காலமாக இந்த ஆல மரத்தில் இருந்து வருகிறவன். ஜனங்கள் என்னை காட்டேறி என்றும் சுடலைமாடனென்றும் சொல்லி, அப்போதைக்கப்போது பூஜை போடுவார்கள். நல்ல யௌவனப் பெண்களாகப் பார்த்து அவர்களைப் பிடித்து ஆட்டி வைப்பதிலேயே எனக்கு நிரம்பவும் பிரியம். ஆனல், சுத்தமான நடத்தையும் ஆசாரமுமுள்ள பதிவிரதை களுக்கு சமீபத்திலும் நான் போனல் என்னுடைய உடம்பு நெருப் பினல் கொளுத்தப்படுவது போல இருக்கும். ஆகையால் அப்படிப் பட்ட உத்தம ஸ்திரீகளைப் பிடிக்க என்னல் முடிகிறதில்லை. நல்ல யௌவனகாலத்துப் பெண்களுள், எவர்கள் அநாசாரமாக நடந்து அன்னிய புருஷரைக் கண்டு காமுறுகிருர்களோ அவர்களைத்தான் நான் பிடித்துக்கொள்ள சாத்தியப் படுகிறது. இந்த தேசத்தில் அப்படிப்பட்ட துர்நடத்தையுள்ள ஸ்திரீகளிருப்பது மிகவும் அரி தாக இருப்பதால், எனக்கு சரியான அலுவலில்லாமல் சங்கடப் பட்டுக்கொண்டிருக்கிறேன். அதற்காக எனக்கு ஒரு சிநேகிதன் தேவையாக இருக்கிறது. அவன் பெண்டுபிள்ளைகள் முதலிய எவ்விதப் பற்றுமில்லாத ஏகாங்கி மனிதனக இருக்க வேண் டும். அவனை நான் என்னுடைய வல்லமையால், யௌவனப் பருவ முள்ள ஒரு மன்மத புருஷனக மாற்றி அவனுக்கு சகலமான செல் வமும் இதர சிறப்புகளும் உண்டாக்கி வைத்து, அவனை முக்கிய மான பெருத்த பட்டணங்களில் சொற்பகாலம் இருக்கச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட மகா சிறப்பு வாய்ந்த வடிவழகனைக் கண்டு, யௌவன ஸ்திரீகள் நிச்சயமாக மயங்குவார்கள். அப்படி மயங்கும் ஸ்திரீகளை நான் உடனே பிடித்துக் கொள்ளுவேன். இந்த

அநுகூலத்தைக் கருதியே, நான் எனக்குத் தக்க ஒரு சிநேகிதனைத் தேடி யலைந்து கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீ வந்து வாய்த்தாய். உன்னை நான் ஒரு யௌவனப் புருஷனாக மாற்றி என்னுடைய துணைவனாக வைத்துக் கொள்ளத் தடையில்லை. ஆனால் உன்னுடைய ஆயிசு காலத்தில் மூன்று வருஷ காலமே மிகுதியிருப்பதால், அதை ஆளுக்குப் பாதியாகப் பங்கு போட்டுக் கொள்வோம். இன்று முதல் ஒன்றரை வருஷகாலம் வரையில் நீ என்னையே எஜமானனாக மதித்து நீ ஓர் அடிமை போல இருந்து, என்னுடைய பிரியப்படியே நடந்து வரவேண்டும். அதன் பிறகு நீ உன்னுடைய பேர்த்தியைக் காணும்படி நான் செய்கிறேன். நீ யௌவனத்தோடும் சகலவித செல்வங்களோடும் இருந்து மிகுதியிருக்கும் ஒன்றரை வருஷ காலத்தையும் உன்னுடைய பிரியப்படி கடத்தலாம். இந்த ஏற்பாடு உனக்குச் சம்மதமானது தானா? யோசிக்காமற் சொல்'' என்றான்.

அதைக் கேட்ட கிழவன் மிகுந்த பதைப்பும் ஆவலும் மகிழ்ச்சியும் கொண்டவனாய் "சம்மதம்; அப்படியே நடந்து கொள்ளுகிறேன். எந்த விதத்திலாவது நான் என்னுடைய பேர்த்தியை இன்னொரு முறை என் கண்ணாரக் கண்டு மனதார சந்தோஷப்பட்டால், அதுவே போதுமானது. இந்த நொடியிலிருந்தே தாங்கள் என்னைத் தங்களுடைய அடிமையாக ஏற்றுக் கொள்ளலாம்'' என்று கூறினான். அதைக் கேட்ட அந்தக் காட்டேறி "அடே, மாதவா! அவசரப் படாதே; நன்றாக யோசித்து ஒப்புக் கொள். இதில் இன்னொரு முக்கியமான விஷயமிருக்கிறது'' என்றது.

உடனே கிழவன் திடுக்கிட்டு "என்ன ஆச்சரியம்! தங்களுக்கு என்னுடைய பெயர் கூடத் தெரிந்திருக்கிறதே! இப்படிப்பட்ட அபாரசக்தியையுடைய தெய்வத்தின் கருணைகடாக்ஷத்துக்குப் பாத்திரனாவதைக் கருதி நான் எப்படிப்பட்ட கொடிய நிபந்தனைக்கும் உடன்படுவேனென்பதை நிச்சயமாக எண்ணிக் கொள்ளலாம்.'' என்றான்.

காட்டேறி "நீ மிகவும் விருத்தாப்பிய நிலைமையிலுள்ள கிழவனாக இருப்பதால், உனக்கு இளமைப் பருவமுண்டாக்கி, அது மாறாமல் இந்த மூன்று வருஷகாலமும் நிலைத்திருப்பதற்கு, நீ ஒரு

காரியம் செய்யவேண்டும். மாசத்திற்கு ஒரு முறை நீ நல்ல கொழுத்த மனிதரான பலரைப் பார்த்துப் பிடித்து, அவர்களுடைய இரத்தத்தை உறிஞ்சி விடவேண்டும். அம்மாதிரி நீ மாதமொரு முறை நரமாமிச பக்ஷணம் செய்தாலன்றி உன்னுடைய யௌவனப் பருவம் மாறிப் போய் உன்னுடைய சுயரூபம் ஏற்பட்டுவிடும்'' என்றது.

அதைக் கேட்ட கிழவன் மிகவும் நடுநடுங்கிப் போய்ச் சிறிது நேரம் தயங்கியபின் "இதை நான் எப்படி நிறைவேற்றுவேன்? நான் யௌவனப் பருவமுள்ள சாதாரண மனிதனாக இருந்து கொண்டே பிறமனிதரை எப்படி அடித்துத் தின்ன முடியும்? அதற்குத் தேவையான பலம் வேண்டாமா? பலமிருந்தாலும், அந்த அருவருப்பான காரியத்தைச் செய்ய மனம் கூசாமலிருக்க வேண்டாமா ?'' என்றான்.

காட்டேறி "ஆம்; நீ சொல்வது சரியான வார்த்தைதான். அதற்கும் நான் ஒரு தந்திரம் கண்டுபிடிக்காமலிருப்பேனா? ஒவ்வொரு மாசத்திலும் அமாவாசை யன்றையதினம் மாலை ஆறுமணி சமயத்தில், உன்னுடைய மனிதஉருவம் மாறி, ஒரு வேங்கைப் புலியின் உருவமாக ஆகிவிடும். அன்றிரவு முழுதும் நீ வேங்கைப் புலியாகவே இருந்து, வேண்டிய அளவு மனித உதிரத்தைக் குடித்துத் திரிந்து கொண்டிருந்து, மறுநாட்காலை ஆறுமணிக்கு, மனிதஉருவம் பெற்றுவிடுவாய். இடைநடுவில் உன்னுடைய தேகபலம் குறைவதாக உனக்குத் தோன்றினால், நீ என்னை நினைத்து ஸ்தோத்திரம் செய்தால், அந்த வேங்கை வடிவம் உனக்கு உண்டாகும்படி நான் செய்வேன். அப்படி வேங்கையாக மாறி நரமாமிச போஜனம் செய்வதில் உனக்கு எவ்விதத்துன்பமாவது, பலஹீனமாவது, அருவருப்பாவது ஏற்படாதல்லவா ?'' என்றது.

அதைக் கேட்ட கிழவன் மிகுந்த சஞ்சலமடைந்தவனாய் யோசிக்கலானான். அதைக் கண்ட காட்டேறி "அடே! எனக்கு நேரமாகிறது; நீ இந்த நிபந்தனையை ஏற்றுக்கொண்டால், இன்னம் கால் நாழிகைக்குள், நீ இருபது வயசுக் குமாரனாக மாறி உன்னைக் காணும் பெண்பாலார் யாவரும் சித்தங்கலங்கி உன்மேல் கடுமோகம் கொள்ளக்கூடிய மன்மதனாக மாறி நிற்பாய், இல்லையானால்,

தற்கொலையும் அகாலமரணமுமே சம்பவிக்கும்; உன்னுடைய தீர்மானத்தை உடனே வெளியிடு" என்று அதட்டி வினவியது.

அதைக் கேட்ட கிழவன் "சரி; தங்களுடைய நிபந்தனையை நான் ஏற்றுக்கொண்டு விட்டேன். இந்த விநாடி முதல் நான் தங்களுடைய அடிமை; இனி தங்களுடைய விருப்பம்போல என்னை நடத்திக் கொள்ளலாம்" என்று மிகுந்த ஆவலோடும், களிப்போடும் கூறினன்.

உடனே அந்தக் காட்டேறி "சரி; நிரம்பவும் சந்தோஷம். நீ இவ்விடத்திலேயே இரு; நான் இதோ மறுபடியும் வருகிறேன்" என்று கூறிய வண்ணம், அவ்விடத்தைவிட்டுத் திடீரென்றுமறைந்து விட்டது. அதுகாறும் அங்கே காணப்பட்ட ஜோதியும் உடனே மறைந்து போக, எங்கும் இருள் சூழ்ந்து கொண்டது. புயற்காற்றினும் மழையினும் அந்த வயோதிகனை மாதவன் வதைக்கப்பட்டவனய் அந்தக் காட்டேறி எப்போது திரும்பி வருமோவென்று மிகுந்த ஆவலோடு காத்திருந்தான்.

அவ்வாறு கால் நாழிகை நேரம் கழிந்தது. அந்த அற்ப காலம் அவனுக்கு ஒரு பெருத்த கற்பகாலம் போலத் தோன்றி அவனைச் சித்திரவதை செய்தது. தனக்கு ஏற்படப்போகும் யௌவனப் பருவத்தையும், அழகையும், செல்வத்தையும், சுகபோகங்களையும் அந்த வயோதிகன் அப்போதே தனது அகக்கண்ணில் கண்டு, பூரித்துப் புளகாங்கித மடைந்து தன்னையும் உலகையும் மறந்து, மானஸீகக் கோட்டை கட்டி மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்து கிடந்தான். தான் அதுகாறும் பூச்சி புழுக்களினும் கடையாக இருந்து தனக்கென எதையும் செய்துகொள்ளும் திறனற்று, எப்போது தனது உயிர் விலகுமோ என்ற ஆவலோடு, தனது குடிசையில் கற்பாறையாகிய தரையில் படுத்துப் புரண்டு ஓயாமல் வேதனை யநுபவித்து, தேனையும் தினை மாவையும் சுனைத்தண்ணீரையும் தவிர, வேறு எவ்வித உணவையும் காணுதிருந்த காலத்தையும், தான் இனி ஒரு யௌவனப் புருஷனுக மாறி மகா உன்னதமான மாளிகையில் பஞ்சுமெத்தைகளின்மீதே நடந்து, அறுசுவை உணவருந்தி சகல விதமான சிற்றின்ப சுகங்களையும் தெவிட்டத் தெவிட்ட அநுபவித்திருக்கப் போகும் காலத்தையும் ஒத்திட்டுப்

பார்த்து இன்பக்கனவு கண்டிருந்த அந்தக் கிழவன், அந்த ஆலமரத்தின் கிளைகளிற் சில சடசட வென முறிந்த ஓசையைக் கேட்டு திடுக்கிட்டு நடுநடுங்கித் தனது சுய உணர்வைப் பெற்று, ஓசையுண்டான திக்கை நோக்க, அவ்விடத்தில், முதலில் தோன்றியது போலவே மறுபடியும் ஒரு ஜோதி விரிந்தது. அடுத்த நொடியில் அந்தக் காட்டேறியும் அவனுக் கெதிரில் பிரசன்னமாகி நின்றது. கிழவன் கரைகடந்த ஆவலோடு அதன் முகத்தை உற்று நோக்கவே, அந்தக் காட்டேறி, தனது கையிலிருந்த ஒரு மூலிகையை அவனுக்கெதிரில் நீட்டி "அடே மாதவா! இந்த மூலிகையை வாயில் போட்டுக்கொண்டு மென்று தின்றுவிடு" என்றது. கிழவன் அதை உடனே வாங்கி வாயில் போட்டு மென்று விழுங்கினான். அடுத்த நொடியில் அவன் மயங்கி உணர்வற்று அப்படியே சாய்ந்துவிட்டான். அவ்வாறு சாய்ந்தவன் கால்நாழிகை நேரத்திற்குப் பிறகு தனது சுய உணர்வைப் பெற்றுத் திரும்பத் தனது கண்களை விழித்தான். விழிக்கவே, தனது தேகத்தில் அபாரமான மாறுதலும் அற்புதமான உணர்ச்சிகளும் உண்டாயிருந்ததை அவன் உடனே உணர்ந்தான். அவனது அங்கங்கள் யாவும் திடகாத்திரமும் சுறுசுறுப்பும் பெற்றிருந்தன. கூனிக் குறுகி இருந்த அவனது உடம்பு அம்புபோல நிமிர்ந்து நின்றது; பல ஆண்டுகளாகக் குழிந்து பஞ்சடைந்திருந்த கண்களிரண்டும் கயல்விழிகளாக மாறி, கழுகின் நோக்கிலும் வலிய நோக்கை யடைந்து நெடுந்தூரத்திலுள்ள பொருட்களையெல்லாம் அந்த இருளிலேயே கண்டன; வழுக்கையாக விருந்த சிரம் முழுதும் கருத்தடர்ந்து நீண்ட அழகிய உரோமங்களால் மறைபட்டிருந்தது. அவனது உச்சிமுதல் உள்ளங்கால் வரையிலுள்ள எந்தப் பாகத்திலும், சதையின் மடிப்பென்பதே காணப்படவில்லை; வாய்நிறையப் பளபளப்பான புதிய பற்கள் காணப்பட்டன; யௌவனப் பருவத்தின் முறுக்கும், வனப்பும், புத்தி தீக்ஷணியமும், கல்வியறிவும் நிறைந்து நின்ற அந்த மாதவன் தனது கண்களையும், பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியையும் நம்பாதவனாய், அது கனவோ நனவோ வென மயங்கி அரைநாழிகை நேரம் பிரமித்துத் திகைத்து ஸ்தம்பித்து நின்றான்.

---

## 2-வது அதிகாரம்.

### தந்தையின் மந்திரம்.

நமது கதை நிகழ்ந்த காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் காளிங்கராயன்கோட்டை என்ற ஒரு பெருத்த பட்டணமிருந்தது; அது சங்கரபாண்டியதேவரேன்ற ஒரு பெருத்த ஜெமீந்தாரது சமஸ்தானத்தின் தலைமை நகரமாக இருந்து வந்தது; அந்த ஊரிலிருந்த ஜெமீந்தாரது அரண்மனையில் ஒரு சிறந்த சயனமாளிகைக்குள் போடப்பட்டிருந்த சொகுஸான கட்டிலின்மேல் சங்கரபாண்டிய தேவர் முக்கி முனகிக்கொண்டு படுத்திருந்தார். அப்போது இராக் காலமாகையால், அந்த மாளிகை முழுதும் மணிவிளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. கட்டிலின்மீது சயனித்திருந்த சங்கரபாண்டிய தேவருக்கு அப்போது வயது நாற்பத்தெட்டிற்குமேலிராதாயினும் அவர் க்ஷயரோகத்தினல் பீடிக்கப்பட்டு, அதனல் உருகி இளைத்து எலும்பும் தோலுமாகக் கிடந்தார். அப்படியிருந்தாலும், இராஜக்களை அவரது முகத்தில் நன்ருக வழிந்ததன்றி, அவர் நல்ல அழகான மனிதரென்பதும் தெளிவாக விளங்கியது; ஆறுமாத காலத்திற்கு முன்னர் அவரைப் பீடித்த அந்தக் கொடிய நோயை விலக்க, அவர் தமது பொருளையெல்லாம் வாரிச் செலவு செய்தும், மகா நிபுணர்களான எத்தனையோ வைத்தியர்களைக் கொண்டு நல்ல நல்ல மருந்துகள் உட்கொண்டும், அந்தக் கொடிய பிணி விலகாமல், அதிகரித்து அவரது உயிரைக் குடித்து வந்து, கடைசியாக நாம் குறிக்கும் இரவில், அவர் தமக்கு மரணகாலம் நெருங்கிவிட்டதென்பதை உணர்ந்து, அதற்கு வேண்டிய சகலமான ஏற்பாடுகளையும் செய்துவிட்டுத், தமது புத்திரனையும், புத்திரியையும் அழைத்துத் தமது அந்தியக் காலத்தில் படுக்கைக் கருகில் இருக்கும்படி செய்திருந்தார். அவர்களிருவரும் தங்களது தந்தைக் கருகில் உட்கார்ந்திருந்த விசனத்தோடும், ஆவலோடும் இமைகொட்டாமல் அவரது முகத்தையே பார்த்த வண்ணம் இருந்தனர். அவர்களில் மூத்தவளான மங்கைக்கு இருபத்திரண்டு வயதிருக்கலாம். அவள் கந்தருவ ஸ்திரீ போன்ற கட்டழகும், கண்டோர் மயங்கிக் கலங்கும் முகவசிகரமும், சுவர்ண நிறமும், உருட்சி திரட்சியான அங்கங்களும் கல்வித்திறமையும், புத்தி தீக்ஷண்யமும் பெற்று ஒரு சக்கர

வர்த்தினி போலக் காணப்பட்டாள். அவள் அவ்வளவு அபரிமித மான அழகையும் ஏனைய சிறப்புகளையும் நிரம்பப் பெற்றிருந்தா ளானாலும், அவளது முகம் ஸ்திரீகளுக்குரிய இனிமையையும் மென் மையையும் காட்டாமல் ஒரு வகையான கடுமையையும், கருவத்தை யும் காண்பித்தது. அதற்கு எட்டு வருஷ காலத்திற்கு முன்னர் அவ ளது தாயான சங்கர பாண்டிய தேவரது பட்ட மகிஷி உயிர் துறந்த போது, இன்ன காரணத்தினால் என்பது எவருக்கும் தெரியாதபடி அவள் மண்ணுலகை நீத்தாளாதலால், அதன் உண்மைக் காரணம் இன்னதென அவளது புதல்வியான இந்த மங்கையே அறிந்து கொண்டவளாதலால், இவள் அந்தத் துயரத்தைப் பொறுக்கமாட் டாது கரைகடந்த விசனத்திலாழ்ந்து, நோயிற்பட்டு,படுத்தபடுக்கை யாக ஆறுமாதகாலம் வரையிலிருந்து, கடைசியாகத் தேறிப் பிழைத் தெழுந்தாள். ஆனால், அது முதல் அந்த யௌவனச்சிறுமியின் உடம் பில் ஒரு பெருத்த ஊனம் ஏற்பட்டுவிட்டது. அவளதுவாயும், செவி களும் அடைபட்டுப் போய் விடவே, அவள் ஊமையாகவும், செவி டாகவும் மாறிவிட்டாள். ஆகவே, அவளுக்கு வயது இருபத்தி ரண்டாகியிருந்தும், அவள் உயர்தரக் கட்டழகு வாய்ந்தவளாக இருந்தும், அவளை மணந்து கொள்வதற்கு எந்த சமஸ்தானத்து ஜெமீந்தாரும் விரும்பி முன்வரவில்லை. அதற்கு முன் மகா இனிமை யான சரஸகுணங்களும், மிருதுவான வார்த்தைகளும் பெற்றிருந்த அந்த வடிவழகி ஊமையாக மாறியபின்னர் தனது முகத்தின் குளிர்ச்சியையும் வார்த்தைகளின் இனிமையையும் இழந்துவிட் டாள். ஆகவே, அந்த அரண்மனையின் சிப்பந்திகள் எவ்வித அற்ப மான தவறும் செய்து விட்டதை அவள் காண்பாளாயின், அவள் தனது கடுங்கோபத்தை வார்த்தைகளின்மூலமாகக் காட்ட இயலாத வளாக இருந்தாளானாலும், அவள் தனது கண்களால் ஒரு விழி விழிப்பாளானால், அது மின்னல்கள்போல, எதிரில் இருப்போரை யெல்லாம் தகித்துவிடக் கூடியதாக இருக்கும்; மிகுந்தகோபத்தினால் அவளது உதடுகள் துடிப்பதைக் காணும் சிப்பந்திகள் யாவரும் நடு நடுங்கி மறைந்து கொள்வார்கள். அதோடு, அவள் தனது தந்தை யான சங்கரபாண்டிய தேவரிடத்தில் பெருத்த வருமம் பாராட்டி வந்ததன்றி, அவர் அவளது விருப்பத்திற்கு மாறாக ஏதாவது காரி

யம் செய்துவிட்டால், அவள் உக்கிர நரசிம்ம மூர்த்திபோலச்சீறி விழுவாள். அவள் அவ்வளவு அதிகமான முன் கோபமுடையவளாக இருந்தாலும் அவளது தந்தை தனது புதல்வியான கோமளவல்லி நாச்சியாரிடத்தில் கரைகடந்த வாஞ்சை வைத்திருந்ததன்றி, அவளை இன்னமும் கலியாணம் செய்து கொடுக்காமல் வைத்திருக்க நேர்ந்ததைப் பற்றித் தமது மனத்திற்குள்ளாகவே மிகுந்த கவலையும் விசனமும் அடைந்திருந்தார்.

அந்த மங்கையின் தம்பியான சுந்தரபாண்டிய தேவனுக்கு வயது பத்தொன்பதாயிருந்தது. அவன் தனது பெயருக்குத் தகுந்தபடி மகா சுந்தரமான ரூபமும், உயர்ந்த கல்வியறிவும், நற்குண நல்லொழுக்கமுமுடைய அழகுள்ள நல்ல யௌவனப் புருஷனாக இருந்தான். அவன் அப்படி இருந்தும், அவனது தந்தை எவ்வளவிற்கெவ்வளவு தனது புத்திரியின்மீது வாத்சல்யம் வைத்திருந்தாரோ அவ்வளவிற்கவ்வளவு புத்திரன்மீது வெறுப்பை வளர்த்து வந்தார். அவ்வாறு தந்தைக்கு மகனிடத்தில் அன்பில்லாதிருந்ததற்கு அவர்களது குணவேறுபாடே காரணமாகவிருந்தது. மகன் கபடமின்மை, இரக்கம், தயாளம், சாஸகுணம் முதலிய சிறப்புகளுடையவனாக இருந்தான். தந்தையோ கபடம், கருவம், அட்டகாசம், கொடுமை முதலிய குணங்களைப் பெற்றவராக இருந்தார். அவர்களது குண அமைப்பில் வேறுபாடிருந்தது போல, அவர்களது தேக அமைப்பிலும் வேறுபாடு காணப்பட்டது. இருவரும் அழகுடையவர்களாக இருந்தாலும், தந்தையின் அழகு பெரும்பாலும் செல்வத்தின் செழுமைபாகவே இருந்ததன்றி, அது ஒரு முரட்டு அழகாகவும் இருந்தது. மைந்தனது அழகோ இயற்கையாகவே உண்டான உத்தமவனப்பாகவும், மிருதுத் தன்மையுடையதாகவு மிருந்தது. இத்தகைய வேறுபாடே, தந்தை மகனை வெறுப்பதற்குக் காரணமாக அமைந்திருந்தது. ஆனால், கோமளவல்லி நாச்சியாரோ தந்தையைப் போல ஒருவித முன்கோபமுடையவளாக இருந்தும், தனது தம்பியிடத்தில் அளவிலடங்காத அன்பும் வாஞ்சையும் வைத்து, ஈன்ற தாயினும் அதிக அபிமானத்தோடு அவனைப் போற்றி அவனுக்குத் தேவையான சகல சுகங்களையும் எள்ளளவும் குறைவின்றி அவனுக்குக் கொடுத்து அவன் எப்போதும் சந்தோஷமாக இருக்கும்படி

செய்துவந்தாள். சுந்தர பாண்டியனது விஷயத்திலெவராவது சிறிது அஜாக்கிரதையாக நடந்துவிட்டால், அவளுக்கு உடனே ரௌத்திராகாரமான கோபமும் அருவருப்பும் உண்டாகிவிடும். அவ்வாறே, அவர்களது தந்தை அதிருப்தியான பார்வையாகத்,தமது புத்திரனை எப்போதாகிலும் பார்த்துவிட்டதை கோமளவல்லி நாச்சியார் கண்டு விடுவாளானால் உடனே அவளது கருவிழிகளிரண்டும் கோவைப் பழங்களாகச் சிவந்து தீப்பொறி கக்கும். அப்படிப்பட்ட குண முடைய கோமளவல்லி நாச்சியாரும், கபட மற்ற சிறியோனான சுந்தரபாண்டியனும் தங்களது தந்தையின் சயன அறையில் விசனமே வடிவாக உட்கார்ந்திருந்தனர்.

சயனத்தில் முக்கி முனகி அலங்கோலமாகப் புரண்டு தமது பிராணனை விடுத்துக்கொண்டிருந்த பெரிய ஜெமீந்தார் திண்டில் சார்த்தப்பட்டிருந்த தமது சிரத்தைத் திடீரென நிமிர்த்திக் கண்களைத்திறந்து தமது குமாரனான சுந்தரபாண்டியனைப் பார்த்துத் தமக்கருகில் நெருங்கி வரும்படி சைகைசெய்ய, அந்த நற்குணச் சிறியோன் மிகுந்த பயபக்தி விசுவாசத்தோடு அவருக்கருகில்நெருங்கிநின்றான். அவர் அதுகாறும் தன்னை மிகவும் கொடுமையாக நடத்திய தந்தையாயிற்றே என்ற அருவருப்பையாகிலும் பகைமையையாகிலும், மனதாலும் நினைத்தறியாத அந்த சற்புத்திரன், தான் அநியாயமாகத் தனது தந்தையை இழக்க நேர்ந்துவிட்டதே என்ற உண்மையான துக்கமும் சஞ்சலமு மடைந்தவனாய், அவரது அந்தியக் காலத்து விருப்பம் எதுவானாலும், அதைத்தான் சரிவர நிறைவேற்றி வைக்கவேண்டு மென்ற உறுதியும் சிரத்தையும் கொண்டவனாக அண்டையில் வந்து நின்றான்.

அவ்வாறு நிமிர்ந்து பார்த்து அவனை அழைத்த அலுப்பினால் சோர்ந்து இரண்டொரு விநாடி நேரம் கண்ணயர்ந்திருந்த ஜெமீந்தார் மறுபடியும் தமது கண்களைத் திறந்து மிக உருக்கமாகவும், அன்பாகவும் தமது புதல்வனை நோக்கி "அப்பா! குழந்தாய்! என்னுடைய பிராணன் அநேகமாய் நீங்கிவிட்டது. இன்னம் கொஞ்ச நேரத்தில் முழுதும் தீர்ந்து போய்விடும். இந்த ஆறு மாச காலத்துக்குள் இந்த வியாதி என்னைக் கொன்று விடுமென்று நான் கனவிலும் நினைக்கவே இல்லை. நான் இது வரையில் உன்னை

மிகவும் கொடுமையாக நடத்தி வந்தேன். இனிமேல் உனக்கும் விடிவு காலம் வந்து விட்டது. இனிமேல் உன்னைக் கண்டிப்பதற்கு எவரும் இல்லை. நீ சுயேச்சையாக இருந்து வாழலாம்'' என்றார்.

அதைக் கேட்ட சுந்தரபாண்டியன் கரைகடந்த விசனத்தினால் கலங்கித் தனது கண்களிலிருந்து பொங்கி வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "அப்பா! நீங்கள் என்னைக் கொடுமையாக நடத்தினீர்களென்று நான் என்னுடைய கனவில்கூட நினைத்தறியேன். இவ்வளவு சிறிய வயசில், என்னையும், அக்காளையும் விட்டு, நீங்கள் போய்விடுகிறீர்களே யென்ற விசனமும், இந்த சமஸ்தானத்தைப் பாதுகாப்பதான பெருத்த பாரத்தை நான் எப்படித் தாங்கப் போகிறேன் என்ற அச்சமுமே என் மனசில் நிறைந்து வதைக்கின்றன. நாம் நம்முடைய வைத்தியரை அழைத்து இன்னமும் தக்க முயற்சி செய்து பார்ப்போமே; நீங்கள்தான் தெளிவாகப் பேசுகிறீர்களே; நீங்கள் எங்களை விட்டு இதற்குள் போகவே கூடாது,'' என்று அந்தரங்கமான வாத்சல்யத்தோடு மொழிந்தான்.

அதைக் கேட்ட ஜெமீந்தார் சிறிது நேரம் உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தபின், அவனை நோக்கி "தம்பி! நீ நல்ல சற்புத்திரனென்பது நன்றாகத் தெரிகிறது. ஆனாலும், என்ன செய்கிறது! என்னுடைய பிராணன் இன்னம் ஒரு நாழிகை நேரத்துக்கு மேல் நிற்காதென்பது நிச்சயம்; ஆகையால் நான் கடைசியாக ஒரு ரகசியமான சங்கதியை இப்போது உனக்குச் சொல்லி உன்னிடத்தில் ஒரு பிரமாணம் வாங்கிக் கொள்ளப் போகிறேன். நீ உண்மையிலேயே சற்புத்திரனாக இருந்தால், நான் இப்போது உனக்கு இடும் கட்டளையை நீ நிறைவேற்றி வைக்கவேண்டும். எங்கே? என்னுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைப்பாயென்பதற்கு அறிகுறியாக என்னுடைய கையிலடித்துப் பிரமாணம் செய்'' என்றார். அதைக் கேட்ட புதல்வன், அவர் எவ்விதமான ரகசியத்தை வெளியிடப்போகிறாரோ என்ற ஆவலும் ஆச்சரியமும் அடைந்தவனாய், அவர் விரும்பியபடி அவரது கைமீது தனது கையை மெதுவாக வைத்துப் பிரமாணம் செய்தான். உடனே தந்தை மைந்தனை நோக்கி "அதோ தெரியும் என்னுடைய பொக்கிஷ அறைக்குப் பக்கத்தில் இன்னொரு சிறிய அறை இருக்கிறதல்லவா. அந்த அறையின் கதவு எப்போதும்

மூடிப் பூட்டப் பட்டிருப்பது உனக்குத் தெரிந்த விஷயம். ஆனால், என்ன காரணத்தினால், அது அவ்வாறு திறக்கப்படாமல் பந்தோபஸ்தாக வைக்கப்பட்டிருக்கிறதென்பது எவருக்கும் தெரியாது. அந்த ரகசியத்தை நான் இப்போது உன்னிடத்தில் வெளியிடவும் நினைக்கவில்லை. நான் இப்போது இறந்து போவேனாகில் நாளைய தினம் நீ அந்த அறையைத் திறந்து அதற்குள் என்ன இருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டுமென்று ஆவல் கொள்ளலாம். ஆனால், நீ அந்த ஆவலுக்கு மாத்திரம் இடம் கொடுக்கக்கூடாது. அந்த அறையின் திறவுகோல் இதோ இருக்கிறது. இதை இனிமேல் பத்திரமாக வைத்துக்கொள்ள வேண்டியவன் நீயே யாகையால். இதை உன்னிடத்தில் இப்போது கொடுக்கப் போகிறேன்; இதை நீ எவரிடத்திலும் கொடுக்காமல் இரவிலும் பகலிலும் எந்த நேரத்திலும் இதை நீயே வைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், நீ அந்த அறையை மாத்திரம் திறந்து பார்க்கக்கூடாது. உனக்கு என்றைய தினம் கலியாணம் ஆகிறதோ அன்றைய இரவில் நீ உன்னுடைய சம்சாரத்தையும் உன்னோடுகூட அழைத்துக்கொண்டு மற்ற எவருக்கும் தெரியாதபடி அந்த அறைக்குள் போகவேண்டும். அந்த அறைக்குள் ஒரு பெட்டி யிருக்கிறது. அதற்குள்ளிருக்கும் ரகசியத்தை நீயும், உன்னுடைய சம்சாரமும் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ரகசியம் எனக்கும் உனக்கும் நம்முடைய குடும்பத்துக்கும் மிகவும் சம்பந்தமானதாகையால், அதை நீங்கள் அறிந்து கொண்டால், அதனால், உங்கள் இருவருக்கும் அபரிமிதமான நன்மைகள் உண்டாகும். ஆனால், நீ கலியாணம் செய்து கொள்ளாமல் பிரம்மசாரியாகவே இருந்து விட்டதாக வைத்துக் கொள்வோம். அப்படி இருந்தால், உன்னுடைய ஆயிசுகால பரியந்தம் நீ அந்த அறையைத் திறக்கவேகூடாது. உன் காலத்துக்குப் பின்னால் இந்த அரண்மனைக்கு சொந்தக்காரர்களாக வருவோர் இந்த ரகசியத்தைக் கண்டுகொள்வார்களே என்ற கவலையும் உனக்கு வேண்டியதில்லை. நான் இப்போது உன்னிடத்தில் சொன்ன வார்த்தைகளில் ஒன்றையாகிலும் நீ உன்னுடைய அக்காளிடத்தில் வெளியிடக் கூடாது. ஐயோ! பாவம்! குழந்தை கோமளநாச்சியார் விசனப்பட்டுக் கீழே குனிந்து கொண்டிருக்கிறாள். நாம்

பேசுகிறேமென்பது இவளுக்குத் தெரிகிறதோ இல்லையோ! ஒருவேளை இவள் சந்தேகப்பட்டு, நான் உன்னிடத்தில் பேசியது எதைப்பற்றி என்று கேட்பாளாகில் நீ மிகவும் எச்சரிக்கையாக நடந்துகொண்டு, இவளிடத்தில் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் மறைத்துவிட வேண்டும்; நான் சொன்னதை யெல்லாம் ஜாக்கிரதையாகக் கேட்டுக்கொண்டாயா? இந்தப்படியே எல்லாவற்றையும் நடத்திவைப்பாயா? எங்கே? பிரமாணமாகச் சொல்; நீ இப்போது ஒப்புக்கொண்டு பிறகு கொஞ்சமாவது தவறினால், நான் இறந்துவிட்டாலும், என்னுடைய வதை உன்னை விடாது. நீ மகாபாபியாக நரகத்துக்கேபோய்ச் சேருவாய். நீ நீதி நூல்களை நன்றாகப் படித்தவனாகையால், பிதிர்வாக்கிய பரிபாலனம் செய்யாவிடில் ஏற்படும் பலாபலன்களை நான் உனக்கு விவரித்துச் சொல்ல வேண்டுவது அநாவசியம்" என்றார். அவர் மொழிந்த சொற்களை யெல்லாம் மிகுந்த வியப்போடு நன்றாகக் கவனித்துக் கேட்ட சிறியோன் "அப்பா! தந்தை சொன் மிக்க மந்திரமில்லை என்ற வாக்கியத்தை நான் எந்த நாளிலும் மறந்தவனுமல்ல; இனி மறப்பவனுமல்ல. ஆகையால், உங்களுடைய கோபத்துக்குப் பாத்திரனாகும்படி நான் என்றைக்கும் நடவேனென்பது சத்தியம். ஆகையால் நீங்கள் சொன்னபடியே, இந்த விஷயத்தில் நான் நடந்துகொண்டு உங்களுடைய ஆக்ஞையை ஓர் அக்ஷரம் பிசகாமல் நடத்திவைக்கிறேன். இது உறுதி" என்று அழுத்தமாகவும் கனிவாகவும் கூறினன்.

அந்த உறுதிமொழியைக் கேட்ட தந்தை ஒருவாறு திருப்தியடைந்தவராய் தமது சட்டையின் உட்புறப் பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த திறவுகோலை எடுத்துத் தமது குமாரனிடத்தில் கொடுத்த வண்ணம் "தம்பீ! நீ மகாபுத்திசாலி யென்பதை இப்போதே நான் நன்றாக உணர்ந்தேன். நான் மாணுந்த சாஸனமொன்று தயாரித்து என்னுடைய பொக்கிஷ அறையிலுள்ள இரும்புப்பெட்டிக்குள் வைத்திருக்கிறேன். நீ முக்கியமான சிலமனிதரை வைத்துக்கொண்டு, அந்த சாஸனத்தை எடுத்து அதன்படி நடந்து கொள். இந்த சமஸ்தானமும் இதரசொத்துகளும் என்னுடைய சுயார்ஜிதமானவை என்பது உனக்குத் தெரியும். என்னுடைய

சொத்துகளை யெல்லாம் நான் உனக்கே எழுதி வைத்திருக்கிறேன். ஆனால் உன்னுடைய அக்காளான கோமளவல்லி நாச்சியார் விஷயத்தில் நான் உனக்குச் சில நிபந்தனைகள் ஏற்படுத்தி இருக்கிறேன். அவளுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த ஊமைத்தனம் நீங்கினால் மாத்திரம் அந்த நிபந்தனைகள் உன்னை பாதிக்கும்.'' என்று கூறி மேலும் ஏதோ வார்த்தைகள் சொல்ல முயன்றார்.

அதற்குள் புத்திரன் அவரை நோக்கி "அப்பா! அம்மாள் இறந்து போனபிறகு நான் அக்காளைத்தானே என்னுடைய சொந்தத்தாயைக் காட்டிலும் மேலான தாயாக மதித்து வருகிறேன். அவளை நான் என்னுடைய ஹிருதய கமலத்தில் வைத்துக் காப்பாற்றுவேன் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்'' என்றான்.

மிகுந்த உருக்கமும் பெருந்தன்மையும் பொருந்திய அவனது வார்த்தைகளைக் கேட்ட தந்தைதமது மனதின் பூரிப்பையும் எழுச்சியையும் தாங்கமாட்டாமல், அப்படியே சாய்ந்து விட்டார். அவரது மார்பும் அடைத்து விட்டது. ஹிருதயமும் சடக்கென்று நின்று விட்டது, உயிரும் உடலை விட்டுப் பிரிந்து விட்டது.

அதைக் கண்டு, தங்களது தந்தை இறந்துவிட்டார் என்பதை யூகித்துக்கொண்ட கோமளவல்லிநாச்சியார் பக்கத்து அறையிலிருந்த அரண்மனை வைத்தியரை அழைக்கும்படி தம்பியிடத்தில் கூறிவிட்டுத் தனது தந்தையின் பக்கத்தில் உட்கார்ந்து ஓலமிட்டு அழத்தொடங்கினாள். அடுத்த நிமிஷத்தில் அரண்மனை வைத்தியன் தருவிக்கப்பட்டான். அவன் ஜெமீந்தாரது கையைப் பிடித்து நாடியைப் பார்த்து, அவர் இறந்து போய்விட்டாரென்ற செய்தியை மிகுந்த விசனத்தோடு தெரிவிக்க, உடனே சகோதரனும் சகோதரியும் சவத்தின்மீது விழுந்து அடித்துக் கொண்டு புலம்பி அழத்தொடங்கினர். அந்த அழுகைக்குரலைக் கேட்ட அரண்மனைத் தாதியரும் வேலைக்காரர்களும் ஓடோடியும் வந்து, அடித்துக்கொண்டு ஒப்பாரி வைத்தழுவோரும், புத்திரியையும், புத்திரனையும் சாந்தப்படுத்தி அப்பால் அழைத்துச்செல்ல முயல்வோருமாகப் பெருத்த முழக்கம் செய்ய தொடங்கினர். அவ்வாறு அவர்கள் யாவரும் இரண்டு மூன்று நாழிகைநேரம் வரையில் ஓலமிட்டழுது கூக்குரல் செய்தபின் களைத்து ஒருவ ரொருவராக

ஓய்ந்தனர். அந்த மரணம் நேர்ந்தபோது இரவு ஒன்பதுமணி சமய மிருக்கலாமாதலால், அவர்கள் அழுது ஓய்வதற்குப் பத்தரைமணி வரையில் பிடித்தது; ஜெமீந்தாரது தகனக்கிரியைகளை யெல்லாம் மறு நாள்தான் நடத்தவேண்டுமென்றும், அரண்மனைக்கு வெளியிலிருந்த உறவினர்களுக்கும் நட்பினருக்கும் பொழுதுவிடிந்த பிறகே செய்தி சொல்லியனுப்ப வேண்டுமென்றும், தீர்மானித்துக்கொண்டு சிப் பந்திகள் யாவரும் தத்தம் அறைகளுக்குச் சென்றனர்; சிலர் கோமளவல்லிநாச்சியாரையும், சுந்தரபாண்டியனையும் நயந்து வேண்டி வற்புறுத்தி அழைத்துப்போய் அவரவர்களது விடுதியில் விடுத்து, அநுமதிபெற்றுக்கொண்டு வெளியே சென்றனர்.

கோமளவல்லிநாச்சியார் இருந்த அந்தப்புரத்தில் மூன்று அழ கிய அறைகளிருந்தன. அவைகளுள் கடைசியான அறைக்குள்ளே தான் கோமளவல்லிநாச்சியார் இருப்பது வழக்கம். அதற்குமுன்னு விருந்த நடு அறையில் அவளது பணிப்பெண்ணான குமுதவல்லியம் மாள் தனது எஜமானியின் ஏவலை எதிர்பார்த்த வண்ணம் காத்திருப் பாள். சங்கரபாண்டியதேவன் இறந்துபோன பிறகு கோமளவல்லி நாச்சியார் தனது அந்தப்புரத்திற்குள் போய் சயனித்துக்கொண்ட போது, அவளுக்குத் துணையாகத் தானும் இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடும் அவளிடத்தில் துக்கம் விசாரிக்க வேண்டுமென்ற கருத்தோடும் அந்தப் பணிப்பெண்ணான குமுதவல்லியம்மாள் தனது எஜமானிக் கருகில் வந்து மெதுவாக நின்று கவனிக்க, அவள் தனது தந்தை இறந்துபோனதுபற்றி எள்ளளவும் விசனப் படுபவளாகக் காணப்படாமலிருந்ததை உணர்ந்து தனக்குள் மிகுந்த வியப்படைந்தாள்; அந்தப் பணிப்பெண் தனது தாழ்ந்த நிலைமைக் குத் தக்கபடி சாதாரணமான ஆடையாபரணங்களை யணிந்திருந்தா ளானாலும், அவள் தனது எஜமானியைவிட அதியௌவனமும், மகா உன்னதமான சுந்தர ரூபமும் நற்குணங்களும் வாய்ந்த பதி னைந்து வயது மடந்தையாக இருந்தாள். அவர்களது ஆடையாபா ணங்களின் பெருமை சிறுமை இருந்தாலும், அவர்களது முகவிலாசத்தையும் உத்தம அமைப்பையும் கவனிக்கும் அன்னி யருக்கு, குமுதவல்லிதான் எஜமானியோ, கோமளவல்லி நாச்சியார் தான் பணிப்பெண்ணோ என்ற ஓர் ஐயம் உதிக்கக்கூடியதாக இருந்

தது; அப்படிப்பட்ட மேம்பாடு வாய்ந்த அந்தப் பணிப்பெண் தனது எஜமானியிடத்தில் துக்கம் விசாரிக்கவேண்டுமென்ற விருப்பம் கொண்டு அருகில் வந்தவள், எஜமானி சிறிதும் விசனக் குறியே இல்லாமல் சாதாரணமாக இருந்ததைக் கண்டு ஒருவாறு வியப்புற்றிருக்க, அவள் வந்திருந்ததை உணர்ந்த கோமளவல்லி நாச்சியார் அவளை நோக்கி, அவளது விடுதியிற்போய்ப் படுத்துக்கொள்ளும் படி மிகுந்த அதிகாரத்தோடு சைகைசெய்ய, அவள் எவ்வித சம்பாஷணையும் செய்யமாட்டாமல் அவ்விடத்தைவிட்டுத் தனது அறைக்குட் போய்விட்டாள்.

அவ்வாறு தனிமையில் விடப்பட்ட கோமளவல்லி நாச்சியார் ஒரு சாய்மான நாற்காலியிற் சாய்ந்திருந்த வண்ணம் சிந்தனையிலாழ்ந்தாள். ஆழ்ந்தவள் அப்போதைக் கப்போது தனது கண்களைத் திறந்து, சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தைப் பார்ப்பதும் தனது அந்தப்புரத்திற்கு வெளியிலிருந்த பணிமக்கள் தூங்கி விட்டார்களா அல்லது அப்போதும் விழித்துக்கொண் டிருக்கிறார்களா என்பதை உணரும் பொருட்டு, வெளியில் ஏதேனும் ஓசையுண்டாகிறதா என்பதை உற்றுக் கவனிப்பதுமாக, ஏதோ ஒரு ரகசியமான காரியத்தைச் செய்ய எண்ணுபவள்போல, மிகுந்த ஆவலும் சஞ்சலமு மடைந்தவளாக உட்கார்ந்திருந்தாள்.

---

## 3-வது அதிகாரம்.

### ஊமையின் சாகஸம்.

அவள் அவ்வாறு நடு இரவிற்கு மேலும் விழித்திருந்தவள் சடக்கென்று தனது கண்களைத் திறந்துகொண்டெழுந்தாள்; எழுந்தவள் மிகுந்த மனோதிடமும் துணிபும் கொண்டவளாய், ஓசை செய்யாமல் தனது பாதத்தின் விரல்களை ஊன்றி மெல்ல நடந்தவளாய் அவ்விடத்தைவிட்டு வெளியே வந்தாள். அவளது அந்தப்புரத்தின் வாசற்படிக்குமேல் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு படத்தின்மீது அவளது பார்வை சென்றது; அந்தப் படத்தில் சற்றேறக்குறைய முப்பது வயதடைந்த ஓர் அழகிய ஸ்திரீயின் வடிவம் எழுதப்பட்டிருந்தது. அந்த ஸ்திரீயின் வடிவத்திற்கும் கோமளவல்லி நாச்சியாரது வடிவத்திற்கும் அதிக ஒற்றுமை இருந்ததாலு

லும், அதன்முகம் கொடூரமான பார்வையையுடையதாகக்காணப்பட வில்லை. ஆனால் அந்த முகம் புன்சிரிப்பையும், உள்ளடக்கிய விசனத்தையும் காட்டிய இனிய வசீகர முகமாக இருந்தது. அவ்வாறு தனது திருஷ்டியில் பட்ட தாயின் வடிவத்தை மிகுந்த பய பக்தி விசுவாசத்தோடு சிறிதுநேரம் உற்றுப் பார்த்து ஒருவித மன நெகிழ்வும் இரக்கமும் கொண்ட கோமளவல்லி நாச்சியார், தனது கண்களில் பொங்கி யெழுந்த கண்ணீரை நகங்களால் வழித்தெறிந்தவளாய் தனது அறையைவிட்டு விரைவாக வெளியே செல்லத் தொடங்கினாள். அவ்வாறு சென்றவள் தனது பணிப்பெண்ணிருந்த அறையையும் அதற்கடுத்த அறையையும் கடந்து அப்பாற்சென்று நாற்புறங்களிலும் திரும்பி உற்று நோக்கி, பணிமக்கள் எல்லோரும் படுத்து அயர்ந்து நித்திரை செய்வதாக நிச்சயித்துக் கொண்டு மேலும் நடந்து சென்று, தனது சகோதரனான சுந்தர பாண்டியன் சயனித்திருந்த அறையை அடைந்து தாளிடாமல் மூடி வைக்கப் பட்டிருந்த கதவைச் சிறிதளவு திறந்து உட்புறத்தில் நோக்கி, அவன் கடுமையான நித்திரையி லாழ்ந்து கிடக்கிறானென்பதை சந்தேகமற உணர்ந்து கொண்டாள்.

சுந்தர பாண்டியன் என்ற யௌவனப் புருஷனிருந்த விடுதி சகலவித சௌகரியங்களும் நிறைந்த மகா அலங்காரமான ஓர் அறை. அதற்குள் அந்தச் சிறியோன் ஒரு கட்டிலின்மீது படுத்திருந்தான். சென்ற பல இரவுகளாகக் கண் விழித்துத் தனது தந்தைக் கருகில் உட்கார்ந்து அவருக்குரிய பணிவிடைகளைச் செய்து மிகவும் களைப்படைந்திருந்தமையாலும், அவர் இறந்த தருணத்தில் வெளியிட்ட ரகசியத்தைப் பற்றி அவனது மனத்தி லெழுந்த கோடாநுகோடி எண்ணங்களால் உலப்பப்பட்டு அலுத்திருந்தமையாலும், அந்த யௌவனப்புருஷன் கடுந்துயிலில் ஆழ்ந்து கிடந்தான். அந்த அறையில், விளக்கின் பிரகாசம் பளிச்சென்று அடித்துக் கொண்டிருந்தது. அதன் உதவியால், கோமளவல்லி நாச்சியார், அவனது நிலைமையை நன்றாக உணர்ந்து கொள்ளவே, தான் கோரி வந்த காரியம் நிறைவேறிவிடும் என்ற எண்ணம் தலையெடுத்தது. உடனே அவளது வதனம் வெற்றியை எதிர்பார்த்த மகிழ்ச்சியாலும் புன்னகையாலும் மலர்ந்து பிரகாசித்தது. அவள்

ஒரு நொடி நேரமும் தயங்காமலும், தாமதியாமலும் கதவை இன்ன மும் அதிகமாகத் திறந்துகொண்டு, பூனைபோலப் பதுங்கி விரல்க ளால் நடந்து, கட்டிலண்டை சென்று, அவன் அணிந்திருந்த சட் டையில் மார்பின்மீதிருந்த ஒற்றைப் பையினுள் கிடந்த திறவு கோலே, மெதுவாக வெளியில் எடுத்தாள். எடுத்தவள் அதை ஊன் றிப் பார்த்து அது தனது தந்தையால் கொடுக்கப்பட்ட திறவுகோல் தானு வென்பதை நிச்சயித்துக் கொண்டு மான்கன்று ஓசையின்றித் துள்ளிப் பாய்வதுப்போல இரண்டோரடியில்அந்த அறையைவிட்டு வெளியிலே வந்து, வாசற்கதவை முன்போல மூடிவைத்து விட்டு இன்னமும் மேலே நடந்து, தனது தந்தையின் சவம் கிடத்தப் பட்டிருந்ததான பெருத்த அந்தப்புரத்தின் வாசலேயடைந் தாள். அடைந்தவள் விரைவாக உள்ளே நுழையாமல் சிறிது நேரம் தயங்கி வாசற்படியண்டையிலேயே நின்றாள். எவ்வித ஓசையுமின்றி நிச்சப்தமாக இருந்த அந்த நடு இரவில், வேறே எவ ரும் இல்லாமல், பிரேதம் கிடத்தப் பெற்றிருந்த தனிமையான அந்த விடுதிக்குள் போவது மகாபயங்கரமானதாகத் தோன்றியது. தனது தந்தையின் விருப்பத்திற்குமாறுன காரியத்தைத் தான் செய் யப் போவதால், ஒருகால் அந்தப் பிரேதம் உயிர்பெற்றுத் தனக்கு ஏதேனும் துன்பம் இழைக்குமோ என்ற ஒருவித மூடநம்பிக்கை யும் பேரச்சமும் எழுந்து அவளது கால்களேச் சிறிதுநேரம் பின்னுக் கிழுத்தன. அவளது மனதில் ஒருவித திகிலும் கலக்கமும் உண் டாயின. அவ்வாறு அரைக்கால் நாழிகை நேரம் அஞ்சி நின்ற அந்த ஊமைச் சிறுமி, தனது மனதை தைரியப் படுத்திக் கொண்டு "சே! நான் எதற்காக இப்படிப் பயப்படவேண்டும்! உயிரில்லாத பிணம் என்ன செய்யக் கிடக்கிறது! நான் இவ்வளவு கால தாம தம் செய்தது முட்டாள் தனம்" என்று தனக்குத்தானே எண் ணிக் கொண்டு, அந்த விடுதியின் கதவைத் திறந்து உள்ளே நுழைந் தாள். வெளியிலிருப்போரில் எவரேனும் தற்செயலாக அங்கே வந்து கதவு திறந்து வைக்கப் பட்டிருப்பதைக் கண்டு, சந்தேகங் கொண்டு தன்னேக் கவனிப்பார்களோ என்ற நினேவு அவளது மனத்திலெழுந்த தாகையால், அவள் அந்த வாசற்கதவை முன்போல மூடிவைத்துவிட்டு விரைவாக நடந்து சென்று பொக்கிஷ அறை

யின் பக்கத்திலிருந்த ரகசிய அறையை அடைந்தாள். அவள் மிகுந்த துணிபோடு அங்கே சென்றாளானாலும், அவளது முகம் மாத்திரம் திரும்பித் திரும்பி அவளது தந்தையின் சவம் கிடந்த இடத்தை அடிக்கடி பார்த்த வண்ணமாக இருந்தது. அவளது கைகால்களெல்லாம் அடிக்கடி கிடுகிடென நடுங்கின. உரோமம் சிலிர்த்துச் சிலிர்த்து அடங்கியது. அப்படிப்பட்ட பயங்கரமான நிலைமையிலிருந்தும் அந்த மடந்தை தனது மனோ திடத்தைக் கைவிடாமல் துணிபோடு சென்று, ரகசிய அறையின் பூட்டை விலக்கிக் கதவைத்திறந்து உள்ளே எட்டிப் பார்த்தாள். உட்புறம் முழுதும் அந்தகாரமே நிறைந்திருந்தது; ஆகவே, தான் என்ன செய்வதென்பதை உணரமாட்டாமல் தயங்கிச் சிறிதும் அசைவற்று நின்று, தனது தந்தையின் சவம் கிடந்த இடத்திற்கருகில் வைக்கப்பட்டிருந்த விளக்கை எடுத்து வந்தாலன்றி, தனது கருத்து நிறைவேறாதென நினைத்தவளாய், மிகுந்த துணிபோடு சவத்தண்டையில் நடந்தாள். மிகவும் இளைத்து எலும்பும் தோலுமாகப் போயிருந்த தனது தந்தை, முகத்தைச் சுளித்துப் பல்லை இளித்து மகாபயங்கரமாகக் கிடந்ததைக் கண்ட அந்த மடந்தையின் குடல் நடுங்கியது. கைகால்களெல்லாம் வெடவெடவென நடுங்கின. உடம்பு முழுதும் வியர்வை வெள்ளம் பெருக்கெடுத்து வழிந்தது. அந்தப் பிணம் எந்த நிமிஷத்தில் எழுந்து தனது கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுமோ என்ற மூட நினைவும் அச்சமும் அடிக்கடி அவளது மனதில் எழுந்தன. அவளது கால்கள் முன்னால் நடக்க அஞ்சிப் பின்வாங்கின. அவள் பிணத்தண்டையில் நெருங்கவும் மாட்டாமல், திரும்பிப் போய்விடவும் விரும்பாமல் இருதலைக்கொள்ளி எறும்பு போல அரைக்கால் நாழிகை நேரம் வரையில் அப்படியே ஓய்ந்து நின்று திரும்பவும் துணிபடைந்து, பிணத்தை யணுகி, அதைப் பார்க்காமல், விளக்கை எடுத்துக்கொண்டு விரைவாக நடந்து, ரகசிய அறையின் வாசலை யடைந்தாள்; அடைந்தவள் ஒரு கையில் விளக்கை வைத்துக் கொண்டு, மறுகையால் பூட்டைத் திறந்தாள். அவ்வாறு, அவள் திறந்த போதே அவளது கைகள் வெடவெடவென நடுங்கின. அடுத்த நிமிஷத்தில்தான் அந்த அறைக்குள்ளே போய், பெட்டியைத் திறந்து மகா பயங்கா

மான ஏதோ ஒரு வஸ்துவைப் பார்க்கப் போகிறோமென்ற நினைவினால் அவளது மனம் சகிக்கமாட்டாத வேதனை யடைந்திருந்தது; வதனம் பெருத்த அச்சத்தைக் காட்டியதானாலும், கண்கள் மாத்திரம் அதிகப் பிரகாசத்தினால் ஜ்வலித்தன. அந்தத் துணிகரமான மடந்தை கதவின் பூட்டை விலக்கிக் கதவை மெதுவாகத் திறந்து, விளக்கை முன்புறத்தில் நீட்டிப் பிடித்துக்கொண்டு உள்ளே நுழைந்தாள். அளவிலடங்காத கிலியினால் அந்த ஒரு நிமிஷ நேரத்தில், அவளது தேகம் மண்ணிலிருந்ததோ விண்ணில் பறந்ததோ என அவளே ஐயுறும்படியான மெய்ம்மறந்த நிலைமையிலிருந்தது. ஆனால், அவளது பார்வை மாத்திரம், அந்த அறையின்நாற் புறங்களிலும் சென்று என்னென்ன பொருட்களிருக்கின்றனவென்பதைஒரு விநாடி நேரத்திற்குள் ஆராய்ச்சி செய்து விட்டது. அங்கே ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு பெருத்த பெட்டியை அவள் உடனே கண்டு, அதுவே தனது தந்தையினால் குறிக்கப்பட்ட ரகசியப்பெட்டியென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டவளாய், ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்தப் பெட்டியண்டை போய்ச் சேர்ந்தாள், அது பூட்டப்படாமல் சாதாரணமாக மூடித் தாளிடப் பட்டிருந்ததைக் கண்ட கோமளவல்லி நாச்சியார் ஒருவாறு இன்பமுற்று, அதன் மூடியைப் பிடித்துத் திறந்தாள். அவளது உச்சி முதல் உள்ளங்கால் வரையிலுள்ள அங்கங்கள் யாவும் கலகலத்து ஆடிப் போய்விட்டன. வியர்வை வெள்ளமாகப் பெருகி வழிந்தபடியே இருந்தது. அந்த நிலைமையில் அவளது பார்வை பெட்டிக்குள்ளே சென்றது. ஆகா! அந்தப் பெட்டிக்குள் மகா கொடிய பயங்கரமான பொருட்களெல்லாம் காணப்பட்டன! அவற்றைக் காண அவளுக்குக் குடல் நடுக்க மெடுத்தது. அவற்றை இன்னொரு முறை பார்க்கக் கண்கள் கூசின. விளக்கைக் கீழே போட்டு விட்டு அந்த மகா கொடிய காட்சியை விட்டு ஓடிப்போய் விடலாமா வென்ற நினைவே அவளது மனதில் எழுந்தது. ஆனால் அந்தப் பெட்டிக்குள் இன்னொரு வஸ்துவைக் கண்டு, அவளது நாட்டம் அதன் மேற் சென்றது. அவள் தனது கண்களை இறுக மூடிக் கொண்டபடியே மிகுந்த துணிபோடு தனது கையை உள்ளே நுழைத்து, அவள் விரும்பிய ஒரு பொருளை மாத்திரம் விரைவாக எடுத்துத் தனது மடி

யில் சொருகிக்கொண்டு, பெட்டியை விசையாக மூடித் தாளிட்டு விட்டு, அவ்விடத்தை விட்டு வெளியே ஓடினாள். அப்படி அவள் ஓடியபோது, பெட்டிக்குள்ளிருந்த வஸ்து எழுந்து பின்னால் வந்து தன்னைப் பிடித்துக்கொள்ளுமோ என அஞ்சியவள் போல, அவள் பின்புறம் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டவளாய், வாசற் படிக்கு வெளியிற் போய்க் கதவை மூடி முன்போலப் பூட்டியபின் பிணத்தண்டை போய், விளக்கை வைத்துவிட்டு, அந்த அந்தப் புரத்தைவிட்டு வெளியில் போய், ஒரே நிமிஷநேரத்தில் தனது அந் தப்புரத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். அவள் சிறிது நேரத்திற்குமுன் அங்கே இருந்து புறப்பட்டுப் போய்த் திரும்பிவந்த அந்தக் கால் நாழிகை நேரத்திற்குள் அவளடைந்த வேதனைகளையும் பெரும் பீதி யையும் பட்டபாட்டையும் நாகவேதனைக்கே ஒப்பிடவேண்டும். அவளது சரீரம் வெலவெலத்து ஓய்ந்து போய்விட்டது. அவள் அப்படிப்பட்ட மகா கேவலமான நிலைமையிலிருந்தாளானாலும், தான் தனது சயனத்திற் படுத்து இளைப்பாறி, மனதைத் திடப்படுத் திக் கொள்ளவேண்டுமென்பதை நினையாமல் தனது அந்தப்புரத் தின் வாசற் கதவை மூடி உட்புறத்தில் தாளிட்டுக்கொண்டவளாய், உள்ளே சென்று விளக்கிருந்த இடத்திற் சருகில் நெருங்கி நின்று, தனது மடியில் சொருகி வைக்கப்பட்டிருந்த வஸ்துவை விரைவாக எடுத்துப் பார்த்தாள்.

அது பளபளப்பான பட்டுக்கயிறுகளால் ஜாக்கிரதையாகக் கட்டிவைக்கப்பட்டிருந்த ஓர் ஓலைச்சுவடியாக இருக்கக்கண்டு, அதை பிரித்துப் படிக்க வேண்டுமென்ற ஆவல் கொண்டவளாய், அந்த மடந்தை அதன்பட்டுக் கயிற்றை யெல்லாம் விரைவாக அவிழ்த்து அதன்மேலிருந்த முதற் பக்கத்தை உற்றுப்பார்த்தாள். அதன்மேல் காணப்பட்ட எழுத்து தனது தாயின் எழுத்தாக இருந்ததைக் காண, அவளது ஆவலும் துடிதுடிப்பும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருகின. அந்தச் சுவடியின் எல்லா ஏடுகளிலும் எழுத்துகள் இருக்கின்ற னவா, அல்லது, சில ஏடுகளில் மாத்திரம் இருக்கின்றனவா என் பதை அவள் சோதனைசெய்து பார்த்தாள். சில ஏடுகளில்மாத்திரம் நெருக்கமாக எழுதப்பட் பட்டிருந்த எழுத்துக ளிருந்ததைக் காணவே, தான் அதை உடனே படித்துவிட வேண்டுமென்ற

உறுதிசெய்து கொண்டவளாய், கோமளவல்லி நாச்சியார் சுவடியை எடுத்து விளக்கி னண்டையில் பிடித்துக்கொண்டு படிக்கலானாள். ஆகா! அதை மேன்மேலும் படிக்கப்படிக்க அதன் விஷயங்கள் மகாபயங்கரமாகவும் கொடூரமாகவும் இருந்தமையால், அவளது உடம்பு ரௌத்திராகாரமான கோபத்தினால் பதைபடைத்தது. மனதோ கட்டிலங்காமல் கொதித்தது. கைகள் பதறின. மார்பு வீங்கிவீங்கித் தணிந்தது. சிற்சில இடங்களில், அவள் மூச்சுவிடுத்தாளோ இல்லையோ என ஐயுறும்படி உயிரற்ற சித்திரப்பதுமைபோல நின்றாள். அவ்வாறு, அந்தச் சுவடியில் எழுதப்பட்டிருந்த சங்கதி முழுதும் படித்து முடிக்கப்பட்டபோது அவளது கோபம் உச்சநிலையை அடைந்திருந்தது. அவள் வெறி கொண்டவள்போலத் தன்னை மறந்து பற்களை நறநறவென்று கடித்துத் தனது கையிலிருந்த சுவடியை ஓங்கித் தரையில் விட்டெறிந்தாள். அது அலங்கோலமாகப் போய்ச் சிதறி விழுந்தது. அதன் ஏடுகள் பலவருஷங்களுக்கு முன்னால் தயாரிக்கப்பட்டவையாகையால், சில முறிபட்டும், சில ஓடிபட்டும் மூலைக்கொன்றாகப் போய் விழுந்தன. கோமளவல்லி நாச்சியார் அப்படிப்பட்ட மூர்க்கமான நிலைமையிலிருந்த போது, அவளது பார்வை தற்செயலாகத் தனது தாயின் படத்தின்மீது சென்றது. அந்த வடிவத்தின் வதனத்தைக் காணவே, அதன் சாந்தமும் மிருதுத் தன்மையும் தயாளகுணமும் பசுமரத் தாணிபோலக் கோமளவல்லி நாச்சியாரது மனதில் பதிந்ததனால் அவளது வீராவேசம் முழுதும் பெருத்த விசனமாக உடனே மாறியது; அவளது கண்களிலிருந்து கண்ணீர் ஆறாகப் பெருகி வழிந்தது. மகா பயங்கரமான பேய்போலக் காணப்பட்ட அந்த மடந்தை பெட்டிப் பாம்பாக அடங்கி சாதாரண ஸ்திரீபோல மாறினாள்.

அவள் உடனே கீழே குனிந்து தாறுமாறாகக் கிடந்த ஏடுகளையெல்லாம் பொறுக்கி யெடுக்க வாரம்பித்தாள். ஆனால், அவளது கண்கள் அந்த ஏடுகளைப் பார்ப்பதற்கும் கூசினவாகையால், அவள் தனது முகத்தை வேறு பக்கமாகத் திருப்பி வைத்துக்கொண்டபடியே ஏடுகளை எடுத்தாளாகையால், அவற்றில் சிறிது தூரத்திற் கப்பால் மறைவாகக் கிடந்த ஓர் ஏட்டைக் கவனிக்காமல் விட்டுவிட்டு

மற்றவைகளை எடுத்து அடுக்கிவைத்தான். அவள் வெளிப்பார்வைக்கு முன்கோபிபோலவும் மூர்க்க குணமுடையவள் போலவும் காணப்பட்டாலும், அவள் எந்த விஷயத்தையும் அதி நுட்பமாகவும் தீவிரமாகவும் கிரகித்துக்கொண்டு, வெகு துரிதத்தில் விஷயங்களைத் தீர்மானித்துக்கொள்ளக்கூடிய அபாரமான மனோசக்தியை உடையவளாதலால், அவள் உடனே அந்தச் சுவடியைத் தனது இடையில் முன்போலச் சொருகிக்கொண்டு, தனது அந்தப்புரத்தை விட்டு வெளியேசென்று, தந்தையின் அந்தப்புரத்திற்குள் நுழைந்து, ரகசிய அறையை யடைந்து, அதற்குள்ளே இருந்த பெட்டிக்குள் சுவடியை முன்போல வைத்துவிட்டு, அதன் மூடியைச் சாத்திவைத்துவிட்டு, வெளியேவந்து அறைகளை முன்போல மூடிப் பத்திரப்படுத்திக்கொண்டு, அவ்விடத்தைவிட்டுத் தனது தம்பியின் அறைக்குள் ஓசையின்றி மெல்ல நுழைந்தாள். அப்போதும் அவன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தமையால், அவள், தனது கையிலிருந்த திறவுகோலை அவனது சட்டைப் பைக்குள் முன்போல வைத்துவிட்டு, மிகவும் ஜாக்கிரதையாக வெளியில்போய், தனது அந்தப்புரத்தை அடைந்துவிட்டாள். அடைந்தவள் தனது சயனத்திற் படுத்துக்கொண்டு மிகுந்த சஞ்சல மடைந்தவளாய் அன்றைய இரவைப் போக்கினாள்.

பொழுது விடியவே, பணிப்பெண்ணான குமுதவல்லி தனது இயற்கைப்படி எஜமானியின் அந்தப்புரத்திற்கு வந்து சேர்ந்து, அவள் நன்றாக அயர்ந்து துயின்று கொண்டிருந்ததைக் கண்டு, அவளை எழுப்பக்கூடாதென நினைத்து ஒரு புறமாகப்போய் உட்கார்ந்து கொண்டிருக்கலாமென வெண்ணி அப்பால் நடந்தாள். அப்போது அவளது காலில் தட்டுப் பட்ட ஓர் ஏட்டைக் கண்டு திடுக்கிட்டு அது என்ன என்று குனிந்து பார்த்தாள். ஏதோ ஒரு சுவடியின் ஏடு அங்கே கிடந்ததைக் கண்டவுடனே, அவள் ஒருவகையான வியப்புற்றாள். முதல் நாளிரவு சுத்தமாக வைக்கப்பட்டிருந்த அந்த இடத்தில், பழைமை யடைந்திருந்த அந்த ஓர் ஏடு எப்படி வந்தது என்ற சந்தேகம் அவளது மனதில் எழுந்தது. அந்த அந்தப்புரத்திற்குள் அதுகாறும் ஓலைச் சுவடிகளும் வைக்கப்பட்டிருந்ததில்லை யாகையால், அந்த ஓலையில் எழுதப்பட்டி

ருந்த தென்னவென்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஓர் ஆவல் எழுந்து அவளது மனதைத் தூண்டியது. ஆகவே, அந்தப் பெண்பாவை அந்த ஏட்டைக் கையிலெடுத்துக்கொண்டு ஒரு பக்கமாகப்போய் உட்கார்ந்துகொண்டு, அதன்மேல் காணப் பட்ட வரிகளைப் படிக்க வாரம்பித்தாள். அவை அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தன:— பலாக்காயைக் கொத்துவதுபோலக் கத்தியால் உடம்பு முழுதும் குத்திக்குத்திச் சித்திரவதை செய்து, மார்பில் கத்தியைச் சொருகிப் படுகொலை செய்த மனிதர், இரத்தங் குடித்த புலிபோல வெறியும் ஆநந்தமும் கொண்டு, அந்த பயங்கரமான பிணத்தைப் பார்த்து பார்த்து சந்தோஷமும் தற் பெருமையு மடைந்ததான அந்த மகாகொடிய அட்டூழியத்தை என்னவென்று சொல்வது!— என்று மேலும் ஏதேதோ விஷயங்கள் எழுதப்பட்டிருந்த அந்த ஓலையின் வரிகள் யாவற்றையும் படிக்கமாட்டாதவளாய், நான்கு வரிகளைமாத்திரம் படித்து அவ்வளவோடு நிறுத்திவிட்டாள். அவள் இரண்டொரு நிமிஷநேரம் வரையில் பெருத்த திகைப்பும் வியப்பு மடைந்தவளாய், அது இன்ன விஷயமென்பதை அறிந்துகொள்ள மாட்டாதவளாய் ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்து விட்டாள். அந்த ஓலையி லிருந்த எழுத்து அவளுக்குப் பழக்கமான எழுத்தாக இருந்த தாலும், அது இன்னாருடைய தென்பது நினைவிற்கு வரவில்லை. ஆனால், அது தனது எஜமானியின் எழுத்தல்ல வென்பது மாத்திரம் நிச்சயமாகத் தெரிந்தது. அந்த ஓலையில் எழுதப்பட்டிருந்த பயங்கரமான சங்கதியைக் குறித்து அந்த மடந்தை சிந்தனை செய்தவண்ண மிருக்க, கோமளவல்லி நாச்சியார் விழித்துக் கண்களைத் திறந்து கொண்டு தனது சயனத்தை விட்டெழுந்தாள். அவ்வாறு, தனது எஜமானி எழுந்ததைக் கண்ட பணிமகள் தனது கையிலிருந்த ஏட்டை ஒரு மூலையில் எறிந்துவிட்டு, விரைவாக எழுந்து, அவளண்டையில் நெருங்கினாள். அவள் உட்கார்ந்திருந்ததையும், தனது கையில் வைத்துக்கொண்டிருந்த ஓலையை அப்பால் போட்டுவிட்டு எழுந்துவந்ததையும் உணர்ந்துகொண்ட கோமளவல்லி நாச்சியார் அவளை நோக்கி கைஜாடையினால் பேசத் தொடங்கி "நீ கையில் வைத்திருந்து, நான் எழுந்தவுடனே அங்கே போட்டாயே, அது

என்ன?'' என்று மிகவும் கடுமையாக வினவ, அதைக்கேட்ட பணிப் பெண் பயபக்தி விசுவாசத்தோடு தனது எஜமானியை நோக்கி "நான் படுக்கையை விட்டெழுந்து வழக்கப்படி இங்கே வந்தபோது இங்கே கிடந்த ஓர் ஓலை என் காலில் தட்டுபட்டது. அது நேற்றிரவு இல் லாமல் இப்போது இவ்விடத்தில் எப்படி வந்தது என்ற சந்தேகம் உண்டாயிற்று. ஆகைபால், நான் அதை எடுத்துப் பார்த்தேன். அதுமுழுதும் ஏதோ சங்கதி எழுதப்பெற்றதாக இருந்தது. நான் இரண்டு மூன்று வரிகள் வரையில் படித்தேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆகையால் அதை மூலையில் எறிந்து விட்டேன்'' என்று ஜாடைகளாலும், அபிநயங்களாலும் மறுமொழி தெரிவித்தாள். உடனே கோமளவல்லிநாச்சியார் ஆச்சரியமடைந்தவளாய் "எங்கே? அதை இப்படி எடுத்துக்கொண்டுவா'' என்று ஊமைஜாடையாக அதட்டிக் கூற, குமுதவல்லி உடனே விரைவாகச் சென்று அந்த ஓலையை எடுத்துக்கொண்டுவந்து மிகவும் பணிவாகத் தனது எஜ மானியிடத்தில் நீட்டினுள்.

அதை வாங்கிப் பார்த்த கோமளவல்லி நாச்சியாருக்கு உண்மை இன்ன தென்பது உடனே விளங்கிவிட்டது. முதல் நாளிரவில் தான் ஓலைச்சுவடியை வீசி எறிந்த போது, அந்த ஏடு விலகிப் போயிருக்க வேண்டுமென்று யூகித்துக் கொண் டவளாய், மிகுந்த கோபத்தோடு பணிமகளை நோக்கி "ஏனடி குமுதா! உனக்கு அறிவிக்கிறதா, இல்லையா? நேற்று ராத் திரி நீ இங்கே வந்தபோது இந்த ஓலை இங்கே இல்லை யென்று நீயே சொல்லுகிருய்; ஆகையால், இதை நானே போட் டிருக்கவேண்டுமென்பது நிச்சய மாகிறதல்லவா? அப்படி இருக்க, நீ என்னசெய் திருக்கவேண்டியது? இதை நான் தவறிப்போட்டு விட்டதாகவோ, அல்லது, நான் வைத்த இடத்திலிருந்து இது பறந்து வந்து விழுந்துகிடந்ததாகவோ எண்ணி, இதை எடுத்து பத் திரமாக என்னிடத்தில் சேர்க்கிறதா?, அல்லது, இதை எடுத்துவைத் துக்கொண்டு படித்துவிட்டு, என்னைக் கண்டவுடனே எறிந்துவிடு கிறதா? இந்த நடத்தை உனக்கு எப்போது முதல் பழகியது? இப் படிச்செய்யும் நீ நாளையதினம் என்னுடைய வைர ஆபரணம் ஏதா வது கிடந்தாலும் அதையும் இப்படித்தான் என்னிடத்தில் காட்டா

மல் வைத்துக்கொள்வாய். நீ இவ்வளவு கெட்டவளென்பது எனக்கு இதுவரையில் தெரியாமல் போய்விட்டது; இப்படிப்பட்ட தவறை நீ ஏன் செய்தாய்?'' என்று ஊமை ஜாடையாகக் காட்டி மிகவும் அதட்டி அட்டகாசமாகக் கேட்டாள்; தான் எதிர்பாராத அந்தத் துன்பத்தை உணர்ந்த குமுதவல்லி மிகவும்பயந்து நடுநடுங்கிவணங்கி ஒடுங்கி நின்று "அம்மணீ! நான் செய்தது தவறுதான். மன்னித்துக்கொள்ளவேண்டும்; இது எங்கே இருந்தாகிலும் காற்றில் பறந்து வந்த உபயோகமற்ற ஓலையென்று அலட்சியமாக மதித்து எடுத்துப் பார்த்துவிட்டு எறிந்தேன்; விலை பெற்றதாக இருக்கும் மற்ற வஸ்துக்களாக இருந்தால், நான் எடுத்து உங்களிடத்திலேதான் கொடுத்திருப்பேன். இந்தவிஷயத்தில் ஏதோ தெரியாத்தனத்தில் ஏமாறிப் போய் விட்டேன். பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்று மிகவும் இறைஞ்சி ஊமை ஜாடையாக வேண்ட, அதை உணர்ந்த கோமளவல்லிநாச்சியார் அப்போதும் கடுங்கோபமடைந்தவளாகவே பேசத் தொடங்கி "நீ இதைப் படிக்கவில்லை என்பது உறுதிதானா?'' என்று ஜாடையினால் கேட்க, குமுதவல்லி, இரண்டு மூன்று வரிகளுக்கு மேல் தான் படிக்கவே இல்லையென்று உறுதிப் படுத்திக் கூறினாள். அதை உணர்ந்த கோமளவல்லி நாச்சியார் அந்த விஷயத்தை வேறே எவரிடத்திலும் குமுதவல்லி வெளியிடக் கூடாதென்றும் தவறி வெளியிடுவாளானால் அவளைக் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்குவதாகவும் ஊமைஜாடையால் தெரிவித்துவிட்டு, அந்த ஓலையை வாங்கித் தனது ஆபரணப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டினாள்.

அந்த சமயத்தில் வேறே சில தாதிகள் உள்ளே வந்து, ஜெமீந்தாரது உறவினர்களான சில பெண்பாலார் துக்கம் விசாரிப்பதற்காக வந்து வெளியில் காத்திருப்பதாக அறிவிக்க, அதை உணர்ந்த கோமளவல்லி நாச்சியார், தனது தந்தையின் சவம் கிடத்தப் பெற்றிருந்த அந்தப்புரத்திற்குத் தான் போவதாகவும், எல்லோரையும் அங்கே அழைத்து வரும்படியாகவும் கட்டளையிட்டு அவர்களை அனுப்பிவிட்டு, தானும் தனது அந்தப்புரத்தை விட்டுத் தனது தந்தையின் அந்தப்புரத்திற்குச் சென்றாள்.

---

## 4-வது அதிகாரம்.

### ஆசைநாயகியும் வேங்கைப் புலியும்.

**கா**ளிங்காராயன் கோட்டை ஜெமீந்தார் சங்கரபாண்டியதேவர் இறந்துபோய் விட்டாரென்ற செய்தி அன்றைய காலை எட்டு மணிக்குள் அந்த ஊர் முழுதும் பரவியதன்றி, அந்த சமஸ்தானத்தைச் சேர்ந்த எண்ணிறந்த ஊர்களுக்கெல்லாம் எட்டியது. அவரது பந்துக்களும், சிநேகிதர்களும், குடியானவர்களும் கும்பல் கும்பலாகக்கூடிவந்து துக்கம் விசாரிக்கும்பொருட்டு அவரது அரண்மனைக்குள் ஆயிரக் கணக்கில் நிறைந்து விட்டனர். ஏராளமாக வந்திருந்த கொம்பு தப்பட்டை முதலிய வாத்தியக்காரர்கள் யாவரும் கள்ளைக் குடங்குடமாகக் குடித்து வெறிகொண்டு மயங்கித் தலைகால் தெரியாமல் பேய்க் கூத்தாடி அந்த வாத்தியங்களை வைத்துக் கொண்டு அண்டம் செவிடுபடும்படி அபாரமாகக் கொட்டி முழக்கிக் கூக்குர லிட்டுக்கொண் டிருந்தனர். ஒவ்வோர் ஊரிலிருந்தும் மிராசுதார்கள் வாய்க்கரிசி, எண்ணெய், மோவாசை முதலிய மரியாதைப் பொருட்களை எடுத்துக் கொண்டு, கொம்பு, தப்பட்டை, எக்காளம் முதலிய வாத்தியங்கள் முழங்க, பறையர்கள் பாணத்தடிகள் கொண்டு சிலம்பம் பழக, வந்துகொண்டிருந்தனர். அவ்வாறு, அன்றைய பகல் முழுதும் வெளியூர்களிலிருந்து ஆற்றுவெள்ளம்போல ஜனங்கள் வந்து அரண்மனைக்குள்ளும், அதற்கு வெளியிலும் சமுத்திரம்போல நிறைந்துவிட்டனர். அவ்வாறு கூடிய ஜனங்களின் தொகை சற்றேறக்குறையப் பதினாயிரத்திற்குமேலிருக்கலாம். மாலை 7மணிக்குத் தண்ணீர் கொணர்ந்து ஜெமீந்தாருக்குக் கழுவிக் குளிப்பாட்டும் சடங்கு ஆரம்பிக்கப் பட்டது. மாலைநேரத்திலிருந்தே பூப்பல்லக்கு சிங்காரிக்கப்பட்டது. ஜனங்களில் எவரும் பசி, தாகம் ஆகிய தேகத்துன்பத்தையே பொருட்படுத்தாமல், அது பெருத்த சாவு என்பதைக் கருதி, அதற்குத் தகுந்தபடி சகலமான காரியங்களையும் நிதானமாகவும் சிறப்பாகவும் மேன்மையாகவும் நடத்தத் தலைப்பட்டனர். இரவு பத்து மணிக்கு, தீப்பந்தகள், மத்தாப்புகள், பாணவேடிக்கைகள், சின்ன மேளம், பெரியமேளம், பாண்டுவாத்தியம், கொம்பு, தப்பட்டை, எக்காளம், நகார் முதலிய ஆடம்பரங்களோடு ஜெமீந்தாரது பூப்பல்லக்கு சுடலையை நோக்கி எழுந்தது. ஜனங்களின் கூட்

டம் கால்மயில்தூரம் வரையில் நீண்டிருந்தது. சுந்தரபாண்டியன் சிறிய புதிய சல்லாத் துணி யணிந்து அமங்கலக் கோலமான சின்னங்களோடு நெருப்புச்சட்டி எடுத்து, சவப்பல்லக்கின் முன்னுல் நடந்து விசனமே வடிவாகச் சென்றுன். உள்ளூர் ஜனங்கள் யாவரும் ஜெமீந்தாரது சவக்கோலத்தைக் காண ஆவல்கொண்டு தெருக்களிலெல்லாம் நிறைந்து நின்றனர். சிலர் "ஐயோ பாவம்! ஜெமீந்தாருக்கு நாற்பது வயசுக்குமேலிராது! அநியாயமாகப் போய் விட்டார்." என்றனர். வேறு சிலர் "ஜெமீந்தார் முன்கோபியானுலும் மிகவும் தயாளமான மனசையுடையர்; அவர் இன்னம் கொஞ்ச காலம் உயிரோ டிருந்தால், கோமளவல்லிநாச்சியாருக்கு எப்படியும் கலியாணம் செய்து வைத்துவிடுவார்" என்றனர். மற்றும் சிலர் "ஆனுல், சுந்தரபாண்டியனைப்போல நல்லகுணமுடைய பிள்ளை இதுவரையில் இந்த உலகத்தில் எவருக்கும் பிறந்திருக்கவே மாட்டான்; அவன் தன்னுடைய தமக்கையைத் தன் தாய்போலவே மதித்துப் பாதுகாத்து வருகிறுன்; அவளும் அவனை மிகுந்த வாஞ்சையோடு ஆதரித்து வருகிறுள். அவனுடைய நற்குணத்தைக் கருதியாவது இனி எவராகிலும் கோமளவல்லி நாச்சியாரைக் கலியாணம் செய்து கொள்ளலாம். சுந்தர பாண்டியனுக்குக் கலியாணம் செய்ய இதுதான் சரியானகாலம். அவனுக்கு ஏதாவது நல்ல வரன் கிடைக்கலாம்" என்றனர். இன்னம் சிலர் "ஜெமீந்தார் மின்னற்கொடி போன்ற மகா ரூபவதியான ஒரு பெண்ணை எங்கே இருந்தோ கொண்டு வந்து, பதினைந்து மயிலுக்கப்பாலுள்ள கந்திருவ கோட்டையில் ஒரு பத்திரமான இடத்தில் வைத்துக்கொண்டிருந்தாராம். அவர் அவளை அப்படி வைத்துக்கொண் டிருப்பது கூட சங்கர பாண்டியனுக்கும் கோமளவல்லி நாச்சியாருக்கும் தெரியாதாம். இனி அவளுடைய கதி என்ன ஆகுமோ தெரியவில்லை. இந்த சங்கதி இந்நேரம் அவளுக்கும் எட்டியிருக்கலாம். அவள் வாாமலே இருந்து விட்டாள்போ லிருக்கிறது" என்றனர். அதைக் கேட்ட வேறு சிலர் " ஆம்! மெய்தான். அவள் இங்கே வருவதால், அவளுக்கு இழிவுதான் ஏற்படுமன்றி, நன்மை யொன்றும் உண்டாகப் போகிறதில்லை. அவள் இது வரையில் இவரிடத்திலிருந்து எத்தனையோ லக்ஷம் ரூபாய் பறித்துச் சேர்த்துவிட்டாள். இனி

மேல் அவளுக்கு இவரைப் பற்றிய கவலை எதற்காக. வேசைகளுடைய நட்பெல்லாம் இப்படித்தான் இருக்கும். மனிதனிடத்தில் உண்மையான பிரியம் வைத்தவளாக இருந்தாலல்லவா அவள் இந்த மனிதன் போய்விட்டானே என்று விசனப் பட்டு ஓடிவருவாள். பணத்தின் மேல் ஆசைவைத்தவள் என்ன செய்வாள். இந்த ஜெமீந்தாருடைய பணம் இனி வாராதென்பதை யுணர்ந்து, பணம் கிடைக்கக் கூடிய வேறே இடத்தைப் பிடிக்க முயன்று கொண்டிருப்பாள்'' என்றனர்.

அவ்வாறு ஜனங்கள் பலவாறு வம்பு வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்க, சவப்பல்லக்கு, இரவு பத்தரை மணிக்கு அந்த ஊருக்கு வெளியில் கால் மயில் தூரத்திற்கப்பாலிருந்த சுடலையையடைந்தது. பெண்பாலார் எவரும் சுடலைக்கு வருவது வழக்கமில்லையாகையால், அங்கிருந்தோர் யாவரும் ஆண்பாலாராகவே இருந்தனர்; அவர்கள் யாவரும் மிகுந்த விசனத்தோடு நின்றுகொண் டிருந்தனர். முன்னாகவே பறைபர்கள் அவ்விடத்தில் ஜதைபடுக்கி ஆயத்தமாக வைத்திருந்தனர். சவப்பல்லக்கு கீழே வைக்கப்பட்டவுடனே அங்கே வந்திருந்த புரோகிதர்கள் மந்திரம் சொல்லி, அந்தப் பிரேதத்திற்கு அவ்விடத்தில் செய்ய வேண்டிய கிரியைகளை யெல்லாம் சுந்தா பாண்டியனை வைத்துக் கொண்டு நடத்த அரை நாழிகை நேரம் பிடித்தது. அதன் பிறகு நாலைந்து மனிதர்கள் கூடி, ஜெமீந்தாரது பிரேதத்தைப் பல்லக்கிலிருந்து எடுத்துக் காஷ்டத்தின்மீது வளர்த்தினர்கள். அவரது உடம்பின்மீ திருந்த ஆடையாபரணங்கள் யாவும் விலக்கப்பட்டுப் போகவே, அவர் பிறந்த மேனியாக இருந்தார். கடைசியாக சுந்தர பாண்டியன் என்னும் நற்குணச் சிறுவன் தனது தந்தையின் மார்பின்மேல் கொள்ளி வைக்க வேண்டிய தருணம் வந்தது. அவன் தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்து "ஐயோ! அப்பா! உங்களுடைய முகத்தை நான் இனிமேல் எப்போது காணப்போகிறேன்! நீங்கள் என்னை ஊட்டி வளர்த்து ஆளாக்கியது, நான் நெருப்பை வைத்து உங்களுடைய உடம்பைக் கொளுத்துவதற்குத் தானா! ஆகா! என்ன உலகம்! என்ன வாழ்வு! நான் இந்தக்கொடிய செய்கைக்கு இணங்கவேமாட்டேன். என்னையும் இதன்மேல்வைத்துக் கொளுத்திவிடுங்கள்'' என்று கூறி அழுதவண்ணம் தீயைக் கையால் எடுக்காமல் நிற்க, புரோகிதர்களும் மற்றப்பெரியோர்களும், அவனுக்கு

182842

வேதாந்த மார்க்கமான ஆறுதல் கூறி அவனைத்தேற்றிக் கொண்டிருந்த சமயத்தில், அந்த ஜனக்கும்பலுக்குள் ஏதோ குழப்பமும் கூக்குரலும் உண்டாவதாகத் தோன்றியது. "வழிவிடுங்கள் வழி விடுங்கள்" என்ற ஓசை நன்றாகக் கேட்டது. அது என்ன விபரீதமோ என்ற வியப்பும் திகைப்புமடைந்தவர்களாகப் புரோகிதர்களும் அவர்களுக் கருகிலிருந்த மற்றவர்களும், அந்தக் கூக்குரல் உண்டான இடத்தை நோக்கி அப்படியே நின்றார்கள். "வழிவிடுங்கள் வழிவிடுங்கள்" என்ற குரல் சவத்தண்டை நெருங்கி வந்ததாகத் தோன்றியது. ஜனங்கள் யாவரும் இருபக்கங்களிலும் விலகி வழியுண்டாக்கிவிட்டனர். அடுத்த நிமிஷத்தில் ஒரு யௌவன ஸ்திரீ தலைவிரி கோலமாக ஓடிவந்து காஷ்டத்தின்மேல் கிடத்தப்பட்டிருந்த சவத்தின்மீது விழுந்து "ஐயோ! என்துரையே! என்னை இப்படித்தானு மோசம் செய்துவிட்டுப் போகிறது! இந்த ஆறு மாசகாலமாக உடம்பு சௌக்கியப்பட்டுக் கொண்டு வருகிறதென்று எழுதி அனுப்பி அனுப்பிக் கடைசிவரையில் ஏமாற்றி விட்டீர்களே! ஐயோ! என் ராஜாவே! தாங்கள் உயிரோடிருக்கும்போது எனக்கு முகவிழிப்பாவது கொடுத்திருக்கக் கூடாதா! ஆகா! இனிநான் என்ன செய்யப்போகிறேன்! உங்களைவிட்டு நான் ஒருநொடியாகிலும் உயிர்தரித்திருப்பே னென்று நினைக்கவேண்டாம். நானும் இப்படியே நெருப்பில் விழுந்து மடிந்துபோகிறேன்" என்று கூறிப் புலம்பியழுது புரண்டு ஓலமிட்டுக் கதறி அலங்கோலமாகக் கிடந்து கரைகடந்த விசனத்தினால் கரைந்துருகி அழுது கண்ணீரால் காஷ்டத்தை யெல்லாம் நனைக்க, அந்த மகாபரிதாப கரமான காட்சியைக் கண்டு அங்கிருந்தோர் யாவரும் சகிக்கமாட்டாது விம்மி விம்மியழுதனர். சங்கரபாண்டியனும் "ஐயோ! அப்பா!" என்று வாய்விட்டுக்கதறி மார்பிலும் முகத்திலும் அறைந்து கொள்ளத் தொடங்கினான். அதற்குள் சிலர் "இவள்தான் ஜெமீந்தாருடைய வைப்பாட்டி! அடாடா இவள் கந்தருவ ஸ்திரீபோல,எவ்வளவு சொகுஸாக இருக்கிறாள்! ஜெமீந்தாரிடத்தில் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறாள்! இப்போதே இவளுடைய ஊருக்கு சங்கதி கிடைத்து உடனே வந்திருக்கிறாள்போ லிருக்கிறது." என்று பலவாறு பேசிக் கொண்டனர். ஜெமீந்தார் ஒரு யௌவன ஸ்திரீயை வைப்பாட்டி

யாகக் கொணர்ந்து கந்தருவகோட்டையில் வைத்திருந்தானென் பதை மாத்திரம் சங்கரபாண்டியன் கேள்வியுற்றிருந்தானே யன்றி, அவளை நேரில் பார்த்தவ னன்றாதலால், தனது தந்தையின் ஆசை நாயகியும் தனக்குச் சிறியதாயுமான அந்தப் பெண்ணைக் கண்டு மிகுந்த மரியாதையும், கரைகடந்த இரக்கமும், தயாளமும் கொண்ட வனாய், அவள் உருகியழுத போதெல்லாம், அவனும் குழந்தைபோல வாய்விட்டுக் கதறியழுதான்.

அவ்வாறு அரைநாழிகை நேரம் கழிந்தது. அதிககாலதாமதம் ஆவதைக் கருதி அங்கே இருந்த புரோகிதர்களும் உறவினர் களும் அவர்களை சாந்தப்படுத்த முயன்றனர்; ஆனால் அந்தப் பெண் பாவை, தனக்கு இந்த உலகில் அதற்குமேல் எவ்விதமான புகலிடமு மில்லை யெனவும் தன்னையும் தனது ஆசைநாயகனோடு வைத்துக் கொளுத்தினாலன்றி தான் அந்தக் காஷ்டத்தை விட்டு விலகுவதில்லை எனவும் உறுதியாகக் கூறி அடம்பிடித்தாள். அவளது உருக்கமான மொழியைக் கேட்ட சுந்தரபாண்டியன் "அம்மா! நீங்கள் உங்க ளுக்கு எவ்விதப் புகலிடமு மில்லையென்று நினைக்க வேண்டாம். உங் களுக்கு நான் ஒரு புத்திரனிருக்கிறேன்; அப்பாவினால் தேடிவைக் கப்பட்ட ஏராளமான செல்வமிருக்கிறது. நீங்கள் இனிமேலும் எங்க ளுக்குத் தாயாக இருந்து அப்பாவுடைய செல்வங்களையெல்லாம், எப்போதும்போல அநுபவித்திருக்கலாம்; நீங்கள் அதைப்பற்றிக் கொஞ்சமும் மன்த்தளர்வடைய வேண்டாம்" என்றான். அவள் அவனது வார்த்தைகளைச் சிறிதும் செவியில் வாங்காமல் முன் போலவே பிரலாபித் தழுதுகொண்டிருந்தாள். அப்போது அங்கே பதினாயிரக் கணக்கில் கூடியிருந்த ஜனக்கும்பலுக்குள் முன்னிலும் அதிகரித்த ஆரவாரமும் ஆ! ஊ! என்ற கூக்குரலும் உண்டாயிற்று. அன்று அமாவாசைதின மாதலால், அந்த நடு இரவு இருளடர்ந்து மிகவும் பயங்கரமானதாக இருந்தது. அரைகளிருந்த இடமானது மூன்று பக்கங்களில் காடுகளால் சூழப்பட்ட இடமாக இருந் தது. அந்தக் காட்டிற்குள்ளே இருந்து வெளிப்பட்ட ஒரு பதின றடி வேங்கைப்புலியைக் கண்டே அந்த ஜனங்கள் அவ்வாறு பெருந் திகிலடைந்து கூக்குரலிட்டனர்; அந்தப் புலி ஒரே பாய்ச்சலில் அந்த ஜனக் கும்பலுக்குள் புகுந்து பெருத்த நாசம்செய்யத் தலைப்பட்டது.

அத்தனை ஜனங்களும் "ஐயோ! புலி! புலி!" என்று அலறிக்கொண்டு மூலைக்கொருவராக விழுந்து ஓடத் தலைப்பட்டனர். கொம்புக்காரர்கள், தப்பட்டைக்காரர்கள், பாணத்தடிக்காரர்கள் முதலியோர் யாவரும் தங்களது கருவிகளையெல்லாம் போட்டுவிட்டு செத்தோம் பிழைத்தோமென்று ஓட்டம் பிடித்தனர். தீப்பந்தங்களை வைத்திருந்தவர்கள் அவைகளை எடுத்துக்கொண்டபடியே காற்றாகப் பறந்துபோய் விட்டனர். மற்ற ஜனங்களும் புரோகிதர்களும் தாறுமாறாகத் தலை தெறிக்க ஓடினார்கள். அவ்வளவு பெருத்த கும்பலிற்குள் புகுந்த வேங்கை மனிதர்களில் பலரைப் பிடித்து அடித்துச் சின்னாபின்னமாகக் குடலைப் பிடுங்கி இரத்தத்தை உறிஞ்சி எறிந்துவிட்டு ஜெமீந்தாரது பிணத்தண்டைபோய், அதை எடுத்துத் தனது கூரிய நகங்களால் நார்நாராகக் கிழித்து மூலைக்குமூலை எறிந்துவிட்டுக் காஷ்டத்திற் கருகில் மூர்ச்சித்து வீழ்ந்துகிடந்த, ஜெமீந்தாரது வைப்பாட்டியான யௌவன மங்கையைத் தூக்கித் தனது முதுகின்மேல் போட்டுக் கொண்டு காட்டிற்குள் ஓடிப்போய்விட்டது. அதற்குள் அந்த இடத்தில் இறந்தோர் தவிர மற்ற யாவரும் சங்கரபாண்டிய தேவாது ஆசைநாயகியை வேங்கைப் புலி தூக்கிக்கொண்டு ஓடியதற்கு முன்பாகவே அங்கேயிருந்து தப்பியோடி நெடுந் தூரத்திற்கப்பால் போய்விட்டனர். ஒவ்வொருவரும் தமது உயிர் தப்பினால் அதுவே போதுமானதென்ற ஆவலினால் ஊக்கப்பட்டவராய் அந்தச் சுடலைப் பக்கத்தைத் திரும்பிக்கூட நோக்காமல் மேடுபள்ளம் பாராமல் தாறுமாறாக விழுந்து ஊரை நோக்கி ஓடினர்.

ஆனால் சுந்தரபாண்டியன் ஒருவனே அவ்வாறு ஓடாமல் சுடலைக் கருகிலிருந்த ஒரு மரத்தின் பக்கத்தில் மறைந்து அந்தப் புலியை கவனித்துக் கொண்டே நின்றான். தனது தந்தையின் தகனம் சரிவர நிறைவேறாமல் போய்விட்டதே என்ற விசனமே நிறைந்து அவனது மனதை அறுத்துக்கொண்டிருந்தது. தகனத்தின் பொருட்டுவந்த சில மனிதர் கொல்லப்பட்டதையும் கடைசியாக அந்த வேங்கைப் புலி தனது தந்தையின் ஆசைநாயகியான யௌவனச் சிறுமியைத் தூக்கிக் கொண்டு போனதையும் கண்ட சுந்தரபாண்டியன் விவரிக்கவொண்ணாத துயரக்கடலி லாழ்ந்து கண்ணீர் விடுத்துப் பதைபதைத்து நின்றான். அந்த வேங்கைப்புலி மறைந்தபின் அரை

நாழிகை நேரமாயிற்று. அந்த நடு இரவில் அமாவாசை இருளில் தான் மாத்திரம் தனிமையில் அந்தச் சுடலையில் இருந்தது அவனுக்கு மிகுந்த பீதியை உண்டாக்கியது. அங்கே கொல்லப்பட்டுக் கிடந்த மனிதரின் சவங்களைத் தின்னும் பொருட்டு அதற்குள் நரிகள் வந்து கூடி ஆநந்தங்கொண்டு மகாபயங்கரமாக ஊளையிடத் தொடங்கின. அந்தக் கூக்குரலைக் கேட்ட, சுந்தரபாண்டியனுக்குக் குலை நடுக்கமெடுத்தது. தான் அதற்குமேல் அங்கே நின்றுகொண்டிருப்பதில் எவ்விதமான பயனுமில்லையென எண்ணிய அந்த யௌவனப்புருஷன் தான் மறைந்திருந்த இடத்தைவிட்டு இருளில் மெல்ல நடந்து ஓசைசெய்யாமல் போய், தனது தந்தைக்காக அடுக்கப்பட்டிருந்த காஷ்டத்தை யடைந்தான். அதன்மேல் கிடத்தப்பட்டிருந்த சவத்தை அந்த வேங்கைப்புலி எடுத்துக் கிழித்துத் தாறுமாறாக எறிந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தவனாதலால், அவன், அங்கே இருந்த நெருப்புத் தணலின் பிரகாசத்தினால் அவரது கைகள், கால்கள், தலை, உடம்பு முதலிய சகலமான அங்கங்களையும் தேடி எடுத்துக் காஷ்டத்தின் மீது வைத்து, அவற்றின்மேல் நெருப்பைப்போட்டு, மேலும் கட்டைகளை வைத்தடுக்கி, கட்டைகளின்மீது சேற்றை அப்பிவிட்டு, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, ஊரை நோக்கி நடந்தான். இருளில் நரிகள் ஊளையிடுவதும், பட்சிகள் இறகுகளை அடித்துக் கொள்வதும், காட்டுவிலங்குகள் அங்குமிங்கும் ஓடுவதும் மகாபயங்கரமாக விருந்தனவானாலும், அந்தச் சிறியோனது நினைவு முழுதும் விசனத்திலேயே ஆழ்ந்து கிடந்ததாகையால், அவன் மெய்ம்மறந்து, எதையும் கவனியாமல் விசையாக நடந்து, ஊரை யடைந்து தனது அரண்மனை போய்ச் சேர்ந்தான்.

அன்றைய இரவு கழிந்தது. மறுநாட்பொழுது விடியுமுன் முதல் நாளிரவில் நடந்த பயங்கரமான சம்பவத்தைப்பற்றிய செய்தி எங்கும் பரவிவிட்டது. ஒவ்வொரு மனிதரும் பெருத்த வியப்பும் திகைப்பும், அச்சமு மடைந்தவராய், அந்த வரலாற்றையே பேசிக் கொண்டிருந்தனர். முதல்நா ளிரவில் வேங்கைப் புலியால் கொல்லப்பட்டவர்கள் இன்னார் என்பதும் தெரிந்து போய் விடவே, அதனால் எண்ணிறந்த குடும்பத்தினர் விசனக்கடலில் ஆழ்த்தப்பட்டனர். அவ்வளவு துக்ககரமான சம்பவத்தில், சுந்தரபாண்டியன் மிகுந்த

துணிபோடு கடைசிவரையில் சுடலையில் தங்கி இருந்து தனது தந்தையின் பிரேதத்தைத் தகனம்செய்து விட்டு வந்தது ஜனங்களுக்கு நிரம்பவும் ஆறுதலாக இருந்ததனால் அந்த யௌவனப் புருஷனது நற்குணங்களைப் பற்றியும் வீரச்செய்கையைப் பற்றியும் எல்லோரும், அவனை ஓயாமல் புகழத் தலைப்பட்டனர். சங்கரபாண்டிய தேவரது ஆசைநாயகியான யௌவனச் சிறுமியை வேங்கைப் புலி எடுத்துக்கொண்டு போனதுபற்றி பலர் விசனித்தனர்; சிலர் சந்தோஷ மடைந்தனர். ஆனால் யாவரும் அவளது உடம்பைத் தேடிக் கண்டு பிடிக்கவேண்டுமென்ற ஆவலும் விருப்பமும் கொண்டவராய், அந்தக் காட்டிற்குள் புகுந்து அன்றைய பகல் முழுதும் வீணில் தேடியலைந்து திரும்பினர். ஜெமீந்தாரின் தகனதினத்திற்கு மறுநாள் அவருக்குச் செய்யப்பட வேண்டிய கிருத்தியங்களும் நிறைவேறின. ஜெமீந்தாரது அரண்மனைக்கு வந்திருந்த ஜனங்கள் யாவருக்கும் அன்றையதினம் நல்ல விருந்தளிக்கப்பட்டது. யாவரும் போஜனம் செய்தபின்னர் தத்தம் இருப்பிடம் சென்றனர். அவர்களில் முக்கியமானவர்களும், நெருங்கிய உறவினர்களுமான சிலர் மாத்திரம் தங்கிஇருந்தனர். ஜெமீந்தாரினால் எழுதிவைக்கப் பட்டிருந்த மரணாந்த சாஸனத்தை இரண்டாவது நாள் எடுத்துப் படிக்கவேண்டுமென்பது அந்த சமஸ்தானத்தில் நடைபெற்றுவந்த வழக்கங்களுள் ஒன்றாகையால், சங்கரபாண்டிய தேவர் அபாரமான தமது செல்வத்தை எவ்வாறு விநியோகித் திருக்கிறாரென்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆவல்கொண்டிருந்த உறவினர் அன்றைய பிற்பகலில் ஜெமீந்தாரது அந்தப்புரத்திற்குள் ஒன்று கூடினர். அந்த ஊரின் கிராமமுன்சீப்பான சுப்பாத்தேவர் பெருத்த மிராசுதாராக இருந்ததோடு ஜெமீந்தாருக்கும் நெருங்கிய உறவினராதலால், அவரது முன்பாகவும் வேறு சிலரின் முன்பாகவும் சாஸனம் படிக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. சுந்தரபாண்டியன், சுப்பாத்தேவர், வேறே நான்கு பெரிய மனிதர்கள், கோமளவல்லிநாச்சியார் ஆகிய எல்லோரும் ஜெமீந்தாரது அந்தப்புரத்தில் உட்கார்ந்துகொண்டனர். சுந்தரபாண்டியனும் சுப்பாத்தேவரும் பொக்கிஷ அறையைத் திறந்து, அதற்குள் இரும்புப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த மரணாந்த சாஸ

னத்தை எடுத்துவந்து சேர்ந்தனர்; கோமளவல்லிநாச்சியார் விசனமே வடிவாகத் தோன்றித் தனது கையைத் தலைமேல் வைத்தவளாகக் கீழே குனிந்துகொண்டிருந்தாள். மற்ற ஜனங்கள் யாவரும் சாஸனத்தில் என்ன எழுதப்பட்டிருந்ததென்பதை அறிந்துகொள்ள மிகுந்த ஆவலோடு உட்கார்ந்திருந்தனர்; சுந்தர பாண்டியனும் துயரத்தி லாழ்ந்தவனுய் ஒரு பக்கத்தில் அடக்கமாக உட்கார்ந்திருந்தான். அந்த சமயத்தில் சுப்பாத்தேவர் அந்த சாஸனத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினுர்; கோவில்களுக்கும், சத்திரம் சாவடிகளுக்கும், இன்னும் பலவகையான பொது விஷயங்களுக்கும் இவ்வளவு இவ்வளவு தொகை கொடுக்கப் பட்டிருக்கிறதென்று அந்த சாஸனத்தில் எழுதப்பட்டிருந்த தன்றி, மிகுதியான சொத்துக்களாகிய அந்த விஸ்தாரமான சமஸ்தானத்துக்கும் ஆடையாபரணங்கள் திரவியம் மாடமாளிகை சாமான்கள் முதலிய அபாரமான செல்வங்களுக்கும் சுப்பாத் தேவரும் வேறு இருவரும் தர்மகர்த்தாக்களாக இருந்து அவற்றைப் பரிபாலித்து வரவேண்டு மென்றும், அவற்றிலிருந்து உண்டாகும் வருஷவருமானங்களை மாத்திரம் சுந்தரபாண்டியன் தனது இச்சைப்படி அநுபவித்து வருகிறதென்றும், அவனுக்கு முப்பது வயதாகிற வரையில், அவன் அந்த தர்மகர்த்தாக்களது ஆதீனத்தில் இருந்து வரவேண்டு மென்றும், அதன்பிறகே, சகலமான சொத்துக்களுக்கும் அவன் எஜமானனுக வேண்டுமென்றும் அந்த சாஸனத்தில் நிர்ணயம் செய்யப் பட்டிருந்தது. ஆனால் அந்தப் பத்திரத்தில் இன்னெரு முக்கியமான நிபந்தனையும் இருந்தது. சுந்தரபாண்டியனுக்கு முப்பது வயதாகு முன்னர், கோமளவல்லி நாச்சியார் தெய்வீகமாகவோ, அல்லது, வைத்தியத்தின் மூலமாகவோ தனது ஊமைத்தனத்திலிருந்து நிவர்த்தியடைந்து, நல்ல நிலைமைக்கு வந்தால், சமஸ்தானமும் மற்றுமுள்ள சகலமான செல்வமும் கோமளவல்லி நாச்சியாரையே சேரவேண்டுமென்றும், அவள், அதன் பிறகு அவற்றை வேறே எவருக்கும் கொடுக்க அருகமற்றவளென்றும், ஆனுல், அதன் வருஷவருமானத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய்வீதம் அவள் சுந்தரபாண்டியனுக்கு ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டு மென்றும் இன்னெரு முக்கியமான நிபந்தனை மேற்படி சாஸனத்தில் எழுதப்பட் டிருந்தது.

அவ்வாறு எவரும் எதிர்பாராதபடி அபூர்வமாக எழுதப்பட்டிருந்த அந்த சாஸனத்தைப் படிக்கக் கேட்ட யாவரும் விவரிக்க ஒண்ணுத வியப்பும் திகைப்பு மடைந்தவர்களாய் தாம் என்ன சொல்லுவதென்பதை உணராமல் அரைக்கால் நாழிகை நேரம் வரையில் மௌனம் சாதித்திருந்தனர். ஜெமீந்தாரின் ஒரே புத்திரனுன சுந்தரபாண்டியனுக்கே நியாயமாக சகலமான செல்வமும் சுதந்திரங்களும் சேர வேண்டியவையாக இருக்க, அதைவிட்டு ஜெமீந்தார் யாவற்றையும் ஒரு பெண் குழந்தைக்கு எழுதி வைத்திருந்ததும், அவளது ஊமைத்தனம் விலகாவிடில், சுந்தர பாண்டியன் தனது முப்பதாவது வயதிற்குப் பிறகே யாவற்றையும் அடைவதென்றும், அதுவரையில் ஜீவனும்சம் பெறுவதென்றும் எழுதிவைத்திருந்ததும் எங்கும் காணப்படாத புதுமையாக இருந்தன. அதைப் படித்த சுப்பாத்தேவரே தமது அதிருப்தியை அடக்கிக் கொள்ள மாட்டாதவராய் யாவரையும் நோக்கி "என்ன ஆச்சரியம் இது! ஜெமீந்தார் இப்படியும் செய்வாரா! தங்கமான ஆண் குழந்தை இருக்கிறுன். அவன் உலகத்தா ரெல்லாரும் மெச்சத் தகுந்த மகா சற்புத்திரனுக இருக்கிறுன். அப்படி இருக்க, ஜெமீந்தார் அவனிடத்தில் மதிப்பு வைக்காமல் போனதென்ன! பெண் குழந்தைக்கு ஊமைத்தனமாகிய ஓர் ஊனம் இருப்பதைப் பற்றி, அதற்கு நாம் அதிக அபிமானம் காட்டி அதன் பொருட்டு அபாரமான செல்வத்தைக் கொடுக்க வேண்டியது நியாயமே. ஆனுலும், இப்படி எல்லாவற்றையும் பெண்ணுக்கே கொடுத்து, அதற்கு பாத்தியஸ்தனுன புத்திரனுக்கு எவ்வித யோக்கியதையுமில்லாமல் செய்து வைக்கலாமா? பையனென்ன அக்காளிடத்தில் பிரியமில்லாதவனு? அக்காளை சந்தோஷமாக வைப்பதில் தன்னுடைய எல்லா சொத்துக்களையும் கொடுக்க நேர்ந்தாலும் பின்வாங்காதவனல்லவா. அவள் பொருட்டுத் தன் உயிரையே கொடுக்க வேண்டியதாக இருந்தாலும் கொடுக்கக் கூடியவன். அப்படி இருக்க, ஜெமீந்தார் இம்மாதிரி எழுதினது என் மனசுக்கு அவ்வளவு திருப்திகரமாகவும் நியாயமானதாகவும் இருக்கவில்லை" என்ருர்.

அதைக் கேட்ட சுந்தர பாண்டியன் "அத்தான்! அப்பாவுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. அவர்கள் எல்லாவிஷயங்களையும்

நன்றாக யோசனை செய்துதான் இப்படி எழுதி இருப்பார்கள். சொத்தெல்லாம் என்பேரி லிருந்தாலென்ன, அக்காள்பேரி லிருந்தாலென்ன? அதைப்பற்றி வித்தியாசமே இல்லை. எனக்கு இந்த விஷயத்தில் கொஞ்சமும் வருத்தமே உண்டாகவில்லை. சந்தோஷந் தான் ஏற்படுகிறது. அக்காள் அப்பா விடத்தில் ஒவ்வொரு சமயத்தில் கோபமாகப் பேசியதை நினைத்து அப்பா அக்காள் விஷயத்தில் அதிருப்தியடைந்திருப்பாரோ என்று நான் ஒருவாறு சந்தேகமடைந்திருந்தேன். அவர்கள் அக்காளிடத்தில் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறா ரென்பது இதனால் தெளிவாக விளங்குகிறது. இனி மேல்நாமெல்லோரும் சேர்ந்து முக்கியமாக ஒரு காரியம் செய்ய வேண்டும். மந்திரத்தின் மூலமாகவோ, வைத்தியத்தின் மூலமாகவோ தெய்வப் பிரார்த்தனையின் மூலமாகவோ எப்படியாவது அக்காளுடைய பிணி நீங்கி, அவள் அதிசீக்கிரத்தில் தன்னுடைய பதவியை வகிக்கும்படியான முயற்சிகளை நாமெல்லோரும் செய்ய வேண்டும். நாம் வாசித்ததும் பேசிக்கொண்டிருப்பதும் இன்னதென்பதை அக்காள் உணரவில்லை. அவள் துயரமாகக் கீழே குனிந்துகொண்டிருக்கிறாள். நாம் இந்த சாஸனத்தைக் கொடுத்தால் அவளே படித்து விஷயத்தை அறிந்துகொண்டு சந்தோஷப்படட்டும். அதை அக்காளிடத்தில் கொடுங்கள்." என்றான்.

அவனது மேன்மைக் குணத்தையும் கம்பீர புத்தியையும் தயாள மனதையும் கண்ட யாவரும் அப்படியே இளகிப் போனதன்றி "ஆகா! பிள்ளை இருந்தாலும் இப்படியல்லவா இருக்க வேண்டும்! இவன் விஷயத்தில் தகப்பனார் எவ்வளவு வருமம் பாராட்டி இவனுக்கு விரோதமான காரியங்களைச் செய்திருந்தாலும் இவன் அதை அப்படியே நிறைவேற்றி வைக்கப் பார்க்கிறானே!" என்று தமக்குள் நினைத்து ஒருவருக் கொருவர் வியப்போடு பேசிக்கொண்டனர்.

உடனே சுப்பாத்தேவர் மரணசாஸனத்தை எடுத்து சுந்தர பாண்டியனிடத்தில் நீட்ட, அவன் அதை வாங்கிக் கொண்டுபோய், கீழேகுனிந்த வண்ணம் உட்கார்ந்திருந்த தனது அக்காளிடத்தில் அதைக் கொடுத்தான்; விசனத்தையன்றி வேறெதையு மறியாதவள் போலக் காணப்பட்ட கோமளவல்லி நாச்சியார் திடுக்கிட்டு ஒருவாறு

வியப்படைந்தவளாய், சாஸனத்தைத் தனது கையில் வாங்கி, அதை மிகவும் அலட்சியமாகப் படிக்கத் தொடங்கினாள். ஆனால், அவள் சிறிதுதூரம் படித்தபிறகு அதில் தனது கவனம் முழுதையும் செலுத்தி நன்றாக வாசிப்பவள்போலக் காணப்பட்டாள். அவள் அந்தப் பத்திரத்தைப் படித்து முடிப்பதற்குள், அவளது முகம் கோபத்தினால் கருத்தது; கண்கள் சிவந்தன; சாஸனத்தைப் பிடித்திருந்த கைகள் நடுநடுங்கின; அவள் மிகுந்த ஆத்திரத்தோடு அந்தப் பத்திரத்தைத் தூக்கிச் சிறிது தூரத்திற்கப்பால் விட்டெறிந்தவளாகப் பக்கத்திலிருந்த ஓர் ஓலையையும் எழுத்தாணியையும் எடுத்து "இந்த சமஸ்தானத்தை ஆளத்தகுந்த ஓர் ஆண்சிங்கமிருக்கையில் எனக்கென்ன எஜமானத்துவம்? தெய்வச்செயலாக என்னுடைய பிணி நீங்கினாலும், இவைகளையெல்லாம் நான் தம்பியின்பேரிலேயே மாற்றி வைத்து விடுவேனேயன்றி நான் எதையும் வைத்துக்கொள்ளவேமாட்டேன்" என்று எழுதி அதையும் அந்தப் பத்திரத்திற் கருகில் போட்டாள். இரண்டையும் தனது கையிலெடுத்த சுந்தரபாண்டியன் ஓலைத் துண்டிலெழுதப்பட்டிருந்த விஷயத்தைப் படித்துப் பார்த்துத் தனது அக்காள் தன்மீது வைத்திருந்த அளவிலடங்காத வாத்சல்யத்தைக் கண்டு பூரித்துப் புளகாங்கித மடைந்து ஆநந்த சாகரத்தில் மூழ்கினவனாக அன்பும் நன்றியறிதலும் கண்களில் ஜ்வலிக்கத் தனது அக்காளை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அந்த சாஸனத்தையும் ஓலைத் துண்டையும் சுப்பாத் தேவரிடத்தில் கொடுத்தான். அவரும் அதை வாங்கிப் படித்தவுடனே மிகுந்த வியப்பும் ஆநந்தமுமடைந்து புன்னகை செய்தவராய், அந்த ஓலையினடியில் எழுதத் தொடங்கி "இந்த சமஸ்தானமும் சொத்துக்களும் உனக்கு வந்த பிறகு இவைகளை யார்பேரிலும் மாற்ற உனக்கு அதிகாரமில்லையென்று உன்னுடைய தகப்பனார் எழுதிவைத்திருக்கிறதை நீ படிக்கவில்லையா?" என்று எழுதி அதை சுந்தரபாண்டியத் தேவனிடத்தில் நீட்ட, அவன் அதை வாங்கிப் படித்துப் பார்த்தபின், தனது அக்காளிடம் கொடுத்தான். அதை வாங்கிப் படித்த கோமளவல்லிநாச்சியார் மிகுந்த கோபமும் ஆத்திரமு மடைந்தவளாய் "அப்படியானால் நான் எப்போதும் ஊமையாகவே இருந்து விடுகிறேன். எனக்கு எவ்வித வைத்தியமும் செய்ய நான் இடங்கொடுக்க மாட்டேன்; தெய்

வச் செயலாக இந்தப் பிணி நீங்கினாலும், நான் ஊமைபோலவே இருந்து விடுகிறேன்; அப்போது, இந்த சாஸனம் என்ன செய்கிற தென்று பார்க்கிறேன்" என்று பிணக்கமாகக் கூறியவண்ணம் திடீரென்று எழுந்து கோபமாகவும் முறுக்காகவும் நடந்து தனது அந்தப்புரத்திற்குப் போய்விட்டாள்.

---

## 5-வது அதிகாரம்.

### கனவோ, நினைவோ! கண்கட்டு வித்தையோ!

வேங்கைப்புலியினால் எடுத்துப்போகப் பட்ட சங்கர பாண்டியதேவரது ஆசைநாயகியான யௌவனப் பெண்பாவை மூர்ச்சை தெளிந்து, சுய உணர்வு பெற்றுத், தனது கண்களை விழித்த போது, அன்றைய இரவு கழிந்து மறுநாளைய சூரியன் எழுந்து ஒரு நாழிகை நேரமாகி யிருந்தது. மகா உன்னதமான ஒரு மாளிகையில் சகலமான அலங்காரங்களும் சுகபோகங்களும் அபரிமிதமாக நிரம்பி இருந்த சொகுஸான ஒரு சயனக்கிரகத்தில் வெல்வெட்டு மெத்தை திண்டு தலையணைகள் நிறைந்த ஒரு சப்பிர மஞ்சத்தின்மீது, தான் சயனித்திருந்ததை அவள் கண்டாள். அவள் கண்வளரச் செய்யப் பட்டிருந்த இடத்தின் சுகம் மண்டலேசுவரனது அரண்மனைகளிலும் காணக் கிடைக்காத தெய்வ போகமாகக் காணப்பட்டது. அந்த அந்தப்புரம் முழுதும் அதற்குள் காணப்பட்ட சகலமான பொருட்களும் நவரத்ன மயமாகத் தோன்றிக் காண்போரைப் பிரமிக்கச் செய்தன. ரோஜா, மல்லிகை, ஜாஜி முதலிய மலர்களின் நறுமணமும் கலவை கஸ்தூரி புனுகு ஜவ்வாது முதலியவற்றின் பரிமள கந்தமும் அந்த சயன மாளிகையில் சாசுவதமாக வீசி அதிலிருந்தோரை ஆநந்த பரவசப்படுத்திக் கொண்டிருந்தன. மண்ணுலகத்தில் காணக்கிடைக்காத அலங்காரப் பொருட்கள் யாவும் நவராத்திரிக்கொலுவோ வென அந்த இடத்தில் பொருத்தி அலங்கரிக்கப் பெற்றிருந்தன. மகா சுவை பொருந்திய தின்பண்டங்களும் கனிவர்க்கங்களும் கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கொள்ளை கொள்ளையாகக் குவிந்து கிடந்தன. அந்த இடத்தினழகை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தால், எவ்வளவு காலமானாலும் பசி தாகம் தூக்கம் முதலிய எவ்விதமான தேகபாதைகளும் உண்டாகா தென்பது நிச்சயம்.

அப்படிப்பட்ட தேவேந்திர மாளிகைக்குள் சயனித்திருந்து கண்விழித்த சங்கரபாண்டிய தேவரது வைப்பாட்டியான அழகிய மங்கை தான் மிகவும் இனிமையான ஒரு கனவு கண்டுகொண்டிருப்பதாக நினைத்தாளேயன்றி, தான் கண்டவையெல்லாம் உண்மையான பொருட்களென்று உணராமலே இருந்தாள். அவ்வாறு அரை நாழிகைநேரம் கழிந்தது. தனது ஆசை நாயகரது சவத்தைச் சுடலையில் காஷ்டத்தின்மீது கிடத்தி அவரது புத்திரன் கொள்ளிவைக்க முயன்ற தருணத்தில், தான் ஓடிவந்து சவத்தின்மீது விழுந்தழுததும், சிறிது நேரத்திற்குப்பிறகு ஒரு வேங்கைப் புலி வந்து அநர்த்தம் விளைவித்துத் தன்னைத் தூக்கி முதுகின்மேல் போட்டுக்கொண்டு ஓடியதும் அவளது மனதில் முதலில் கனவுபோலத் தோன்றிக் கடைசியில் உண்மையாகத் தோன்றின. அப்படி இருக்க, தான் அந்தப் புலியால் கொல்லப்படாமல் உயிர் தப்பிய வகையென்ன, அப்படித் தப்பினாலும், அந்த தெய்வமாளிகைக்குள் கொண்டுவந்து சயனிக்க விடப்பட்ட வகையென்ன என்ற கேள்விகளே அவளது மனதில் எழுந்து வதைக்கத் தொடங்கின. முதல் நாளைய இரவில் மகாபயங்கரமான விபத்திலிருந்த தான் கண்மூடித் திறந்த போது, அப்படிப்பட்ட கந்தருவ மாளிகையில் சகலவித சுக போகங்களுக்கு மிடையில் ஒரு சக்கரவர்த்தினிபோல இருந்த தான அந்த அற்புத மாறுதல் கனவின் மாறுதல் போலவும் கண் கட்டுவித்தை போலவு மிருந்தது. தான் உயிர் நிலையாக மதித்திருந்த தனது ஆசைநாயகன் இறந்ததனால் ஏற்பட்ட பெருந் துயரமும் தளர்வும் அப்போதும் அவளை வதைத்துக் கொண்டிருந்தன வானாலும், அந்த மகா அற்புதமான மாறுபாட்டினால் தனது பழைய நினைவுகளையும் உணர்ச்சிகளையும் ஒருவாறு மறந்தவளாய்த் தாங்கொணாத திகைப்பும் பிரமிப்பும் ஆச்சரியமு மடைந்தவளாய், அந்த இடத்தில் தன்னைக் கொணர்ந்து வைத்த மனிதர் யாராக இருக்கக் கூடுமென நினைத்து உண்மையான வாலாற்றை அறிந்துகொள்ள மிகுந்த ஆசையும் ஆவலும் கொண்டவளாய், சடக்கென்று தனது சயனத்தை விட்டெழுந்து உட்கார்ந்து தனது கண்களை இரண்டு மூன்று முறை கசக்கிவிட்டு முகத்தைத் துடைத்துக் கொண்டவளாய், நாற்புறங்களிலும் திருமபித்திரும்பிப் பார்த்த

வண்ணம், யாராகிலும் மனிதர் அங்கே இருக்கமாட்டார்களா என்று உற்றுநோக்கினாள். அதே சமயத்தில், அந்த சயனக்கிரகத்தின் ஒரு பக்கத்திலிருந்த கதவு திறந்து கொண்டது. இருபது, அல்லது, இருபத்திரண்டு வயதடைந்த ஒரு யௌவனப் புருஷன் அந்தச் சயனமாளிகைக்குள் நுழைந்தான். அவன் தத்ரூபம் மன்மதன்போல மகா அற்புதமான கட்டழகும் கவர்ச்சியும் பொருந்திய அதிசுந்தர மனோகர ரூபமுடைய இருந்தமையால், அவனது ஜோதியும் அழகும் பளிச்சென மின்னிக் கண்ணைப் பறித்தன. அவனைக் கண்ட பெண்பாவை பிரமித்து ஸ்தம்பித்து வாய் திறக்கமாட்டாமல் அசைவற்று அப்படியே மயங்கினவளாய், அந்த இடத்தின் புதுமைக்குத் தகுந்தபடி, அந்த மனிதனும் கந்தருவன்போல இருக்கக் கண்டதனால், தான் காண்பது உண்மையில் கனவுதானோ, அல்லது, அது ஒரு நாடகக் காட்சியோ என்ற சந்தேகத்தை மறுபடியும் கொண்டவளாய் அவனைப் பார்த்தவண்ணம் சயனத்தை விட்டு எழுந்து நின்றாள். அவளது மனோசஞ்சலத்தைக் கண்ட அந்த யௌவனப் புருஷன் சந்தோஷத்தினாலும் இனிமையான புன்னகையாலும் மலர்ந்த வதனத்தினனாய், அவளை நோக்கி "ஜானகி! பயப்படாதே; இது அன்னியருடைய மாளிகையல்ல. இவ்விடத்தில் உனக்கு எதாகிலும் துன்பம் சம்பவிக்குமோ என்று நீ அஞ்சவே வேண்டாம்," என்று மிகவும் குளிர்ச்சியான இனிய குரலில் அன்பாக மொழிந்தான்.

அவன் "ஜானகி" என்று தனது பெயரைச் சொல்லி அழைத்ததைக் கேட்டு, முன்னிலும் ஆயிரமடங்கு அதிகரித்த வியப்பும் திகைப்புமடைந்து தனது செவிகளையே நம்பாதவளாய் அவனை நோக்கி "ஐயா! நான் யாரென்பதைத் தாங்கள் நன்றாக அறிந்து கொண்டவர்களாகக் காணப்படுகிறீர்கள்! ஆனால், தாங்கள் யாரென்பது எனக்குத் தெரியவில்லை. என்னுடைய பெயர் இன்னதென்பது ஒன்றரை வருஷங்களுக்கு முன் இறந்துபோன என்னுடைய பாட்டனாருக்குத் தெரியும். நேற்றைய தினம் தகனம் செய்யப்பட்ட என்னுடைய பிராணநாயகருக்குத் தெரியும். மற்றவர்கள் என்னுடைய பெயர் யோகாம்பாள் என்றே இதுவரையில் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்க, என்னுடைய உண்மை

யான பெயர் தங்களுக்கு எப்படித் தெரிந்தது? அதுவும் தவிர, நேற்று என்னை வேங்கைப்புலியல்லவா தூக்கிக்கொண்டு போயிற்று. அதனிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு நான் இந்த இடத்துக்கு எப்படி வந்தேன்? இது எந்த ஊர்? தாங்கள் யார்? தயவு செய்து எல்லா விவரங்களையும் எனக்குத் தெரிவிக்கவேண்டும்'' என்று நய மாகப் பணிந்து வினவ, அதைக் கேட்ட அந்த மன்மத புருஷன் ''பெண்ணே! இந்த மாளிகை காளிங்கராயன்கோட்டையிலுள்ள என்னுடைய சொந்த மாளிகை. நேற்றையதினம் நடந்த தகனத் துக்கு நானும் வந்திருந்தேன். அப்போது காட்டிலிருந்து புலி வந்து அநர்த்தம் செய்துவிட்டு, உன்னை எடுத்துக்கொண்டு போன தைக் கண்ட நானும் இன்னம் சில நண்பர்களும் ஆயுதங்களையும் பந்தங்களையும் எடுத்துக்கொண்டு நேற்றிரவு முழுதும் காட்டுக்குள் நுழைந்து தேடிப் பார்த்தோம். அந்தப் புலி தெய்வச் செயலாக உன்னை ஒரு மரத்தடியில் போட்டுவிட்டுப் போயிருந்தது. அதற்குள் நாங்கள் வந்து உன்னைக் கண்டு எடுத்துக்கொண்டு வந்து இங்கே சேர்த்தோம். காட்டில் நான் உன்னை நெருங்கிப் பார்த்தபோது நீ இன்னாளென்பதை நான் தெரிந்துகொண்டேன். ஒன்றரை வரு ஷத்துக்குமுன் இறந்துபோய் விட்டதாக நீ நினைத்துக் கொண்டிருக் கும் உன்னுடைய பாட்டனார் உயிரோடுதா னிருக்கிறார். அவரிடத் தில் உன்னை நான் சேர்த்து வைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு தான் நான் உன்னை இந்த மாளிகைக்குக் கொண்டு வந்திருக் கிறேன்'' என்றான்.

அதைக் கேட்ட அந்த யௌவன வடிவழகி கரைகடந்த ஆச் சரியமும், ஆநந்தமும், ஆவலும், பதைபதைப்புமடைந்தவளாய் ''ஆ! அப்படியா! என்னுடைய பாட்டனார் இன்னமும் ஜீவித்திருக்கிறாரா? நான் அவரிடத்திலிருந்து சொல்லாமல் புறப்பட்டு வந்த ஒருவார காலத்துக்குப் பிறகு அவரைப்பற்றி நான் இரக்கங்கொண்டு அவரை அழைத்துவரும்படி ஒரு மனிதனை அனுப்பினேன். அவர் காணப் படவில்லை யென்று அந்த மனிதன் வந்து தெரிவித்தான். அது முதல் அவர் இறந்துபோய் விட்டதாக நினைத்து நான் மிகவும் துய ரப்பட்டுக் கொண்டிருந்தேன். அவர் உயிரோடிருக்கிறாரா? இப் போது எங்கே இருக்கிறார்? மிகவும் கேவலமான நிலைமையிலிருந்த

அவரைத் தனியாக விட்டுவந்த பரமசண்டாளியான என்னை அவர் திரும்பவும் ஏற்றுக்கொள்வாரா? நான்தான் இனி அவருடைய முகத்தில் எப்படி விழிப்பேன்?" என்று மிகவும் உருக்கமாகவும் இறைஞ்சிய குரலாகவும் கூறினள்.

உடனே அந்த மன்மத புருஷன் அவளை நோக்கி "பெண்ணே! உன்னைத் தம்முடைய உயிரிலும் மேலாக மதித்துக் கரை கடந்த வாத்சல்யத்தோடு பாராட்டி வந்த அந்த மனிதர் நீ இருக்கும் பரிதாபகரமான நிலைமையைக் கண்டு உன் விஷயத்தில் இரங்காவிட்டால், வேறு யார் இரங்கப் போகிறார்கள். தன் கையே தன் கண்ணில் படுமானல், அந்தக் கையை யாராவது வெட்டி எறிந்து விடுவார்களா? நீ ஏதோ அறியாமையினலும், பக்குவகாலத்துக் கோளாறினலும் ஒரு புருஷனுடைய மோக வலையிற்பட்டு மயங்கி ஒரு தவறு செய்து அங்கே இருந்து வந்து விட்டாயானலும், சர்வரக்ஷகனன ஈசுவரன் அவருக்குத் துணையிருந்து அவரை எப்படியும் காப்பாற்றி விட்டார். நீ இந்த ஒன்றரை வருஷகாலமாக அவரை எப்படி மறந்திருந்தாயோ, அது போல, அவரும் இந்த ஒன்றரை வருஷகாலமாக உன்னைவிட்டு, இந்த உலகம் முழுதும் சுற்றியலைந்து, கண்டது காட்சி கொண்டது கோலமாக இருந்து வந்திருக்கிறார். ஆகையால் குற்றம் உன்மேல் மாத்திரமில்லை" என்றார்.

அதைக் கேட்ட ஜானகியின் கண்களும் மனதும் கலங்கின. அவள் மிகுந்த விசனமடைந்தவளாய் "ஐயா! தாங்கள் இப்போது சொன்ன விஷயத்திலிருந்து தாங்கள் குறிக்கும் மனிதர் என்னுடைய பாட்டனு ரல்லவெனத் தோன்றுகிறது. அவர் எண்பது வயதான குடுகுடு கிழவர். அவருக்குக் கண்ணும் அவ்வளவாகத் தெரியாது; அவரால் கொஞ்சதூரம்கூட நடக்க முடியாது. இன்றைக்கோ நாளைக்கோ என்ற மிகவும் கேவலமான நிலைமையில் அவர் இருந்தார். அவர் உலகம் முழுதும் சுற்றித் திரிகிறதெப்படி! கண்டது காட்சி கொண்டது கோலமாக இருக்கிறதெப்படி! அது ஒரு நாளும் சாத்தியமானதல்ல. அவர் இவ்வளவு காலமா உயிரோடிருக்கப் போகிறார்! அவர் பட்டினி கிடந்து என்னைத் தூற்றிக் கொண்டே இறந்திருப்பார்; அல்லது, ஏதாவது கொடிய காட்டு

மிருகங்களுக்கு இரையாகி இருப்பார். அவரைக் கொன்ற மகா பாதகத்துக்கு நானே உத்தரவாதியானவள். அதனால் நான் இனி என்னென்ன கதிக்கு ஆளாகப் போகிறேனோ தெரியவில்லை" என்று கூறியவளாய் சகிக்கமாட்டாத துக்கத்தினால் வாய்விட்டுக் கோவெனக் கதறி யழுதாள்.

அதைக் கண்டு பெரிதும் இரக்கங் கொண்டதாகத் தோன்றிய அந்தச் சுந்தர புருஷன் "ஜானகி! உன் பாட்டனாரும் நீயும் மலையாள தேசத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையடி வாரத்திலுள்ள ஒரு பெருத்த ஆரணியத்தின் பக்கத்திலிருந்த ஒரு சிறிய குடிசையிலிருந்தீர்கள்; அவர் எண்பது வயதடைந்த குடுகுடு கிழவரென்பதும் எனக்குத் தெரியும்; அதே கிழவரைப்பற்றித்தான் நான் பேசுகிறேன் நீ அன்று காலையில் வழக்கம்போலக் கனி கிழங்குகள் சேகரித்துக் கொண்டு திரும்பி வருவதாகச் சொல்லிவிட்டுப் போனவள் அதன் பிறகு திரும்பி வாராமலே போய்விட்டாய்; நீ குடிசையை விட்டுப் போனபோது அவர் கணப்புச் சட்டியி னண்டையில் ஒரு கம்பளியைப் போர்த்திக்கொண்டு உட்கார்ந்து குளிர் காய்ந்துகொண்டிருந்தார். இப்போது நான் சொல்லும் அடையாளம் சரியானதுதானா? அதே கிழவர்தான் உலகம் முழுதும் சுற்றித் திரிந்து வந்திருக்கிறார்; அவர் இப்போதும் உயிரோடிருக்கிறார்." என்று அழுத்தமாகக் கூறினான்.

அதைக்கேட்ட பெண்பாவை பெருத்த வியப்பும் சிறிதளவு நம்பிக்கையும் அடைந்து "அப்படியா! உயிரோடிருக்கிறாரா? எங்கே இருக்கிறார்?" என்று மிகுந்த ஆவலோடு கேட்டாள்.

அந்த யௌவனப் புருஷன் "உன்னுடைய பாட்டனார் இதே ஊரில் இருக்கிறார். நீ இப்போது அவருடைய மாளிகையிலேதான் இருக்கிறாய்" என்று மெதுவாகக் கூறி அவளது முக மாறுதலை மிகுந்த ஆவலோடு கவனித்தான்.

ஜானகி அளவிலடங்கா வியப்பும் திகைப்பும் அடைந்தவளாய் "என்ன ஆச்சரியம்! தேவேந்திரனுடைய மாளிகைபோலக் காணப்படும் இந்த இடம் எப்படி அவருடையதாயிற்று! எண்பது வயதடைந்து எழுந்திருக்கவும் மாட்டாமல் கோவணத்தோடு கிடந்த அந்தக் கிழவர் உலகம் முழுதும் சுற்றுவதும், இப்படிப்பட்ட பெருத்த

செல்வத்துக்கு எஜமானராவதும் நம்பக்கூடாத சம்பவங்களாக இருக்கின்றன! இவற்றில் ஏதோ மர்மம் இருக்கிறது. இல்லா விட்டால், இப்படிப்பட்ட அபரிமிதமான குபேரசெல்வமும் ஜெகஜ் ஜோதியான மாடமாளிகையும் எப்படி ஏற்பட்டிருக்கும்'' என்றாள்.

அந்த சுந்தரரூபன் "நான் சொல்வதில் கொஞ்சமும் பிசகே இல்லை. இவ்வளவு பிரமாதமான செல்வமும் அவருடையதுதான். இவைகளெல்லாம் உன்னைத்தான் சேரப்போகின்றன;'' என்றார்.

ஜானகி அப்போதும் நம்பிக்கை கொள்ளாமல் "இந்த சொற்ப காலத்துக்குள் இவ்வளவு பிரமாதமான மாறுதல் உண்டானதென் றால், அது தெய்வத்தின் அநுக்கிரகத்தினாலே உண்டாயிருக்க வேண்டுமன்றி மனிதனுடைய சக்தியினால் சாதிக்கக் கூடியதாகவே இல்லை. இந்தக் கலிகாலத்தில் தெய்வம் பிரத்தியக்ஷமாக ஒருவ னுக்கு நேரில் வந்து காட்சி கொடுத்து இப்படிப்பட்ட மேம்பாடு களை உண்டாக்கியதாக நாம் எங்கும் கேட்டதுமில்லை; கண்டது மில்லை. ஆகையால், இதில் எனக்கு மாத்திரம் இன்னமும் நம்பிக்கை ஏற்படவில்லை'' என்றாள்.

யௌவனப் புருஷன் "நீ நம்பாவிட்டால், நீ நம்பும்படியாக நான் செய்கிறேன்: என்னோடுகூட கொஞ்சதூரம் வா'' என்று அவளை அழைக்க, அவள் மிகவும் துடியாக நடந்து அவனுக்குப் பின்னால் செல்ல, அவன் முன்னாக நடந்து அந்த விடுதியின் ஒரு மூலைக்குப் போய் அங்கே இருந்த ஒரு படத்தைக் காட்டினான்.

ஜானகி மிகுந்த் ஆவலோடு அதை உற்று நோக்கினாள்; ஆகா! என்ன ஆச்சரியம்! அவளும் கிழவனும் இருந்த குடிசையும் அதன் நாற்புறங்களிலும் இருந்த மாட்டுப்பட்டி, திண்ணைக்கொல்லை, காய்கறித் தோட்டம், நீரோடை முதலிய ஸ்தலங்கள் யாவும் அப்படி யப் படியே சித்திரித்துக் காட்டப் பட்டிருந்தன. அவள் கடைசியாக அவனை விட்டு வந்த நாட்காலையில் அவன் எந்த இடத்தில் எப்படி உட்கார்ந்திருந்தானோ அப்படியே அவனது வடிவம் அந்தப் படத் தில் சித்திரித்துக் காட்டப் பட்டிருந்தது. அந்தப் படத்தில் காட் டப்பட்டிருந்த வடிவம் தனது பாட்டனாது வடிவமென்பதை சந் தேகமறக் கண்ட ஜானகியின் கண்களில் கண்ணீர் பொங்கி இரு கன்னங்களிலும் வழிந்தது. அவள் மிகுந்த ஆவலோடும் ஆசை

யோடும் பாய்ந்து அந்தப் படத்தைத் தனது கையில் எடுத்து வைத்துக்கொண்டவளாய் "ஆகா! உலகில் என்னைப்போல ஈவிரக்கமற்ற சண்டாளி எவளிருப்பாள்! இப்படிப்பட்ட திக்கற்ற நிலைமையில் இந்தக் கிழவரை விட்டு, அழகான ஒரு புருஷனைப் பிடித்துக்கொண்டு வேறே எவளாகிலும் இப்படி ஓடுவாளா! ஆகா! இவருடைய வதை தான் என்னை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டது. நான் யாரை நம்பி வந்தேனோ அவரையும் கொஞ்சகாலத்துக்குள் வாயில் போட்டுக் கொண்டு, நானும் ஒரு திக்கற்ற பாவியாகத் தவித்து நிற்கிறேன். ஐயா! நீங்கள் சொன்ன சங்கதியின் கருத்தை நான் இப்போதுதான் உணர்ந்தேன். என் பாட்டனார் இந்த மாளிகையி லிருக்கிறாரென்று நீங்கள் சொன்னது, அவருடைய இந்தப் படம் இங்கே இருக்கிறது என்று சொல்வதற்குப் பதிலாக அப்படி மாற்றிச்சொன்னதுபோ லிருக்கிறது. இனி நான் எவ்வளவுதான் அழுதாலும், எவ்வளவுதான் துயரப்பட்டாலும், நான் அவரை உயிரோடு காணப்போகிறேனா; அது ஒருகாலுமில்லை" என்று கூறி மிகவும் தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

அவ்வாறு அவள் சிறிதுநேரம் அழுது தனது மனதின் புண்ணை ஆற்றிக் கொள்ளட்டுமென்று சிறிது பொறுத்துக் கொண்டிருந்த அந்த மன்மதரூபன் "ஜானகி! நீ மனத்தளர்வடைய வேண்டாம். இந்தப் படம் இங்கே இருக்கிறதென்று சொல்வதற்குப் பதிலாக, அவரே இங்கே இருக்கிறாரென்று நான் மாற்றிச் சொன்னதாக நீ நினைப்பது தவறு. நான் குறித்த கிழவர் உன்னுடைய பாட்டனாராக இருக்கமாட்டாரென்று நீ சந்தேகித்தாயல்லவா. அந்த சந்தேகத்தை விலக்குவதற்காகவே நான் உனக்கு இந்தப் படத்தை முதலில் காட்டினேன். இவ்வளவோடு உன்னை நான் ஏமாற்றி விடுவேனென்று எண்ணாதே. உன் பாட்டனார் இப்போதும் உயிரோடிருக்கிறார்," என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் கூறினான்.

அதைக் கேட்ட ஜானகி ஒன்றுந் தோன்றப்பெறாத பைத்தியக்காரி போல விழித்து "ஐயா! நம்பத்தகாத வார்த்தைகளையெல்லாம் சொல்லி நீங்கள் ஏன் என்னை இப்படி வதைக்கிறீர்கள்? நீங்கள் யார்? நீங்கள் என்னை என்ன செய்ய நினைத்திருக்கிறீர்கள்? இந்தப்

படம் இந்த இடத்துக்கு எப்படி வந்தது? தயவு செய்து உண்மையைச் சொல்லுங்கள்" என்றாள்.

அந்தச் சிறியோன் "பெண்ணே! ஜானகி! ஏன் இப்படி உன் மனசை வதைத்துக் கொள்ளுகிறாய்? உன் மனசை சாந்தப் படுத்திக் கொள். நான் சொன்னதில் எள்ளளவும் பொய்யே இல்லை. மாதவன் என்று பெயர் கொண்ட உன் பாட்டனார் சத்தியமாக உயிரோடிருக்கிறார். அவர் இதே வீட்டிலிருக்கிறார். நீ அதிசீக்கிரத்தில் அவரைப் பார்க்கப் போகிறாய். அதற்குள் நான் சொல்லப் போகும் சங்கதியைக் கவனித்துக் கேள்" என்றான்.

ஜானகி "அப்படியானால், சொல்லுங்கள். நான் கேட்க ஆயத்தமாகவே இருக்கிறேன்" என்று மிகுந்த ஆவலோடு கூறினாள்.

யௌவனப் புருஷன்:—ஜானகி! நீ உன் பாட்டனாருடைய ஏழைக் குடிசையிலிருந்து, அவருடைய பணிவிடைகளைச் செய்து அவர் மனம்போல நடந்து, அவருடைய அரும்பெருஞ் செல்வமாக நீ இருந்தபோது அது எவ்வளவு சுகமான வாழ்க்கையாக இருந்ததென்பது உனக்குத் தெரியும். சில வருஷங்களுக்கு முன், மிகவும் பெரிதாக இருந்த அவருடைய குடும்பத்து ஜனங்கள் யாவரும் ஒருவர்பின் ஒருவராக இறந்த பிறகு நீ யொருத்தியே அவருடைய உயிர்நிலைபோல மிஞ்சியிருந்தாய். அந்தத் தனியான ஆரணியத்தில் வஸந்த காலத்தில் மாம் செடி கொடிகளெல்லாம் தளிர்த்துச் செழித்துப் புஷ்பித்திருக்கும் போது நீ நல்ல மலர்களை யெல்லாம் சேகரித்து வந்து அந்தக் குடிசையை ஒரு சயன மாளிகைபோல எவ்வளவு உன்னதமாக அலங்கரித்து வைத்து அந்தப் பாட்டனாரை மகிழ்விக்க முயலுவாய்! மகா நிபுணர்களான பெருத்த பெருத்த சிற்பிகளும் சித்திரக்காரர்களும் நவரத்னங்களாலும் பதுமைகளாலும் மற்ற சாதனங்களாலும் அழகு படுத்தி அலங்கரிக்கும் அரசர்களின் மாளிகையைவிட, நீ புஷ்பங்களைக் கொண்டு அலங்கரித்து வைக்கும் குடிசையே இயற்கை மேன்மையும் அதிகச் சிறப்பும் வாய்ந்ததாக இருந்ததல்லவா! உன் அழகிய மெல்லிய கரங்களால் பயிரிடப்பட்ட தினையைக் கொண்டும் காய் கறிகளைக்கொண்டும் நீ அப்போது சமைத்திட்ட உணவுகளைக் காட்டிலும் அதிமாதுரியமான போஜனத்தை எப்படிப்பட்ட செல்வவந்தனும் உட்கொண்

டிருப்பானு! அப்படிப்பட்ட அரிய பணிவிடைகளை யெல்லாம் செய்து, உன் பாட்டனருக்கு ஒவ்வொரு நாளிலும் வென்னீரால் ஸ்நானம் செய்துவைத்து உபசாரத்தோடு அவரை உண்பித்து, அவருக்கு எப்போதும் தவருமல் கணப்புப்போட்டு வைத்து, மாலை வேளைகளில் சூரியன் உலகையெல்லாம் செம்பொன் மய மாக்கி மேற்றிசையில் மறையுந் தருணத்தில் குயில்கள் கூவுதலைக் கண்டு, நீயும் இனிமையாகப் பாடி அவரை ஆநந்த சாகரத்தில் மூழ்குவித்து வந்தாயே. அப்படி, ஒரு குழந்தையைப் பாதுகாக் கும் தாய்போல உன் பாட்டனருக்கு சகலமான பணிவிடைகளை யும் சலிப்பின்றிச் செய்து அவரைக் காப்பாற்றி வந்த அருங் குண மணியான நீ திடீரென்று ஒரு நாட் காலையில் எங்கேயோ போய்விட்டாய். அப்படி நீ அவரைத் தனியாகவிட்டுவந்த காலமோ மழைகாலம். எண்பது வயதடைந்து நடக்கமாட்டாமல் தவித் துக் கிடந்த அவருக்கு இன்னமும் அதிகமான பணிவிடைகளைச் செய்ய வேண்டிய குளிர்காலத்தில் நீ அவரைப் புறக்கணித்து விட்டுப் போய்விட்டாய். அவர் என்ன செய்வார்! அன்று முழு தும் பசியினாலும் தாகத்தினாலும் வதைபட்டிருந்த நிலைமையில், அவர் உன்னை அந்தக் கொடிய ஆரணியம் முழுதும் தேடி, உனக்கு எப்படிப்பட்ட விபத்து நேர்ந்ததோ, நீ ஏதாவது இட ரில் பட்டு அகாலமாண மடைந்தாயோ, அல்லது, எவராவது துஷ்டருடைய கையிலகப் பட்டுத் தவிக்கிருயோ என்ற பலவகை யான நினைவுகளும், சந்தேகங்களும், பேரச்சமும், ஆவலும் கொண்டு தவித்த தவிப்பை எவரேனும் நாவால் வருணித்துச் சொல்ல முடியுமா! ஜானகி ஜானகி ஜானகி என்று கூவியழைத்த படியே அவர் அன்று முழுதும் உன்னைத் தேடியலைந்து, எங் கும் காணுமல் நம்பிக்கையற்று மனத்தளர்வடைந்து, நெருப்பின் மேல் வீழ்ந்த புழுப்போலத் துடித்திருந்த அந்த மகாபரிதாப காமான காட்சியைக் கண்டு கல்லும் கரைந்துருகும். அன்றைப இரவு நெடுநேரம் வரையில் நீ திரும்பி வாராமையிலிருந்து அவர் நீ மனதார, அவரை விலக்கிவிட்டுப் போய்விட்டாய் என்ற நினைவைக் கொண்டார். அப்படிப்பட்ட பரமசங்கடமான நிலை மையிலிருந்து நரகவேதனை யநுபவித்திருப்பதை விட, பக்கத்தி

விருந்த மடுவில் வீழ்ந்து தமது உயிரை விலக்கிக் கொள்வதே உசிதமானதெனத் தீர்மானித்து மெல்ல எழுந்து நகர்ந்து நகர்ந்து மடுவை நோக்கி வந்தார். அப்போது புயற்காற்றும், மழையும், ஊதலும், சாரலும் உலகத்தையே அழித்து அநர்த்தம்செய்து கொண்டிருந்தன. அந்த மகாபயங்கரமான நிலைமையில் அவர் தற்கொலை செய்து கொள்வதற்காகக் காட்டிலும் மேட்டிலும் செடிகளிலும் கொடிகளிலும் கல்லிலும் முள்ளிலும் விழுந்து நகர்ந்து போய்க் கொண்டிருந்தார்.

ஜானகி:—(நடுநடுங்கிக் கண்ணீர் விடுத்தழுதவளாய்) ஐயோ! இந்தப் பாமசண்டாளியா லல்லவா அவருக்கு அப்படிப்பட்ட கதி நேர்ந்தது. ஐயா! இந்த விவரங்களை யெல்லாம் இவ்வளவு நன்றாக அறிந்துகொண் டிருப்பவர்களான தாங்கள் யாரென்பதே எனக்குப் பெருத்த ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்குகிறது. தயவுசெய்து விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்லுங்கள். என் பாட்டனாருடைய முடிவை அறிந்துகொள்ள என்மனம் படும்பாடு இவ்வளவு அவ்வளவல்ல. தயவுசெய்து சீக்கிரமாகச் சொல்லுங்கள்.

யௌவனப்புருஷன்:—பெண்ணே! கொஞ்சம் பொறுத்துக் கொள். எல்லா விவரங்களையும் மறைக்காமல் சொல்லிவிடுகிறேன். அதிலிருந்து நான் யாரென்பதை நீயே உணர்ந்து கொள்வாய். உன்னுடைய பாட்டனார், நீ பிரிந்துபோன தினத்தின் இரவில் தற்கொலை செய்து கொள்ளும்பொருட்டு மடுவை நோக்கி நகர்ந்து போனபோது, மழையின் உக்கிரத்தை சகிக்கமாட்டால், வழியில் காணப்பட்ட ஒரு பெருத்த ஆலமாத்தினடியில் ஒதுங்கினார். அந்த ஆலமாத்தில் காட்டேறி இருப்பதாக ஜனங்கள் வந்து அடிக்கடி பூஜை போட்டு விட்டுப் போனார்களென்று நீகூட அவரிடத்தில் பலமுறை சொல்லியிருக்கிறா யல்லவா. அந்த மாத்தினடியில், அவர் கண் தெரியாமையால், போய் மறைந்துகொண்டு உன்னை நினைத்து வருந்தி வாய்விட்டுப் புலம்பி தெய்வத்தை வேண்டிக்கொண்டிருந்த சமயத்தில் அந்தக் காட்டேறி அவருக்கு முன்னால் பிரசன்னமாயிற்று.

ஜானகி:—(குலைநடுக்க மடைந்து கிடுகிடுத்துப்போய்) ஆ! அப்படியா! அதை நினைக்கும்போதே மயிர் சிலிர்க்கிறதே. அடாடா! ராத்திரியில் அந்த இடத்துக்கு எவரும் போகிறதில்லையே! தவறிப் போனால், அவர்கள் வாயாலும் மூக்காலும் இரத்தம் கக்கிக்கொண்டு மறுநாள் பிணமாக அல்லவா கிடப்பது வழக்கம். ஐயையோ! அப்புறம் அது என்ன செய்தது? என் பாட்டனாருக்கு ஏதாவது துன்பம் செய்ததா?

யௌவனப்புருஷன்:—இல்லை. இல்லை. அது தனக்கு ஒன்றரை வருஷ காலத்துக்கு அடிமையாக இருக்க இணங்கினால், அவருக்கு யௌவனப் பருவமும், மன்மத ரூபமும், அளவிலடங்காத செல்வமும் கொடுப்பதாகச் சொன்னதோடு, அந்த ஒன்றரை வருஷ காலத்துக்குப் பிறகு, அவர் உன்னையும் காணலாம் என்றும் சொன்னது. அவர் மற்ற விஷயங்களைப்பற்றி அதை ஒப்புக்கொள்ளா விட்டாலும், முக்கியமாக உன்னை மறுபடியும் பார்க்க வேண்டுமென்ற அவாவினால் தூண்டப் பட்டவராய் அந்த நிபந்தனைக்கு இணங்கினார்.—என்றான்.

அந்த வாலாற்றைக் கேட்ட ஜானகி கரைகடந்த ஆச்சரியமும் ஆநந்தமுமடைந்தவளாய் "ஆ! அப்படியா! இப்போது எல்லாம் நன்றாக விளங்குகிறது! நீங்கள்தான் என்பாட்டனாரோ?" என்று மிகுந்த ஆவலோடு கேட்க, அந்த சுந்தரரூபன் "ஆம்! என் கண்மணியே! நான்தான் உன் பாட்டன்." என்று கூறிய வண்ணம், ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அந்த அணங்கை மிகுந்த ஆவலோடு கட்டியணைத்துஆலிங்கனம்செய்து உச்சிமுகந்து ஆநந்தக்கண்ணீர்சொரிய, அவள் அப்போதும் தனது செவிகளை நம்பாதிருந்தாளானாலும், அவன் அன்னியனல்லனென்ற ஓர் எண்ணம் மாத்திரம் அவளது மனதில் எப்படியோ வேரூன்றி விட்டதாகையால், அவள் அவனது ஆலிங்கனத்திலிருந்து விலகாமல் நின்றவளாய் "நீங்கள் சொன்ன வாலாறு மிகவும் அபூர்வமானதாகவும் எவரும் நம்பத்தகாத புராணக் கதைபோலவு மிருக்கிறேயன்றி வேறல்ல. அப்படியானால், இனி நீங்கள் விரும்பினால்கூட அந்தப் பழையரூபம் உங்களுக்கு ஒரு நிமிஷத்துக்குக்கூட வாராதோ?" என்றாள்.

மாதவன்;—இந்த யௌவனப் பருவம் இருப்பதற்காக நான் மாசமொரு முறை ஒரு மருந்தை உண்டு வருகிறேன். அதை நான் நிறுத்தினால், உடனே முன்போலக் கிழவனாகி விடுவேன்; நான் அந்த மருந்தை நேற்றிரவுதான் உண்டேனாகையால், இன்னம் ஒரு மாசகாலம் வரையில் நான் விரும்பினாலும் இந்த ரூபம் மாறாது. நான் இந்த ரூபத்தோடிருந்தாலும் கிழவனாக இருந்தாலும் இந்தப் பெருத்த செல்வம்மாத்திரம் என்றைக்கும் அழியாது.

ஜானகி:—இந்தச் செல்வம் அழிந்தாலும் அழியட்டும்; அதைப் பற்றி இனிக் கவலை இல்லை; என்னிடத்தில் இருக்கும் பொருளே நமக்குப் போதுமானது; ஆனால் நீங்கள் இந்த யௌவனப் பருவம் மாத்திரம் விலகாமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

மாதவன்:—பெண்ணே! நான் இனி உன் விருப்பம்போல நடந்து கொள்ளாமல் வேறு என்ன செய்யப்போகிறேன். இனி நீ இந்தச் செல்வத்துக்கெல்லாம் எஜமானியாக இங்கேயே இருந்து விடவேண்டும். உனக்கு எங்கேயோ சொத்திருப்பதாகச் சொல்லுகிறாயே; அதை வேண்டுமானால் இவ்விடத்துக்கே எடுத்துக்கொண்டு வந்துவிடு; ஆனால், சில விஷயங்களை மாத்திரம் நீ கவனித்து நடக்கவேண்டும். நீ இனிமேல் என்னை தாத்தாவென்று அழைக்காமல் அண்ணாவென்று கூப்பிடவேண்டும். யாராவது கேட்டால்கூட, நான் அண்ணன் நீ தங்கை என்ற முறைமையையே நாம் சொல்லவேண்டும். இன்னொரு விஷயம் என்னவென்றால், நாம் இப்போது பேசிக்கொண்டிருந்த இந்த ரகசிய விஷயங்களைப் பற்றியாவது, இதைக் குறித்து இன்னம் எவ்விதமான சந்தேகத்தைப்பற்றியாவது நீ இனி என்றைக்கும் பேசவே கூடாது. இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இதோ சுவரில் கருப்புத்துணியால் மறைத்துவைக்கப் பட்டிருக்கும் வஸ்து என்னவென்பதைமாத்திரம் நீ பார்ப்பதும் பார்க்க ஆசைப் படுவதும் கூடாது. இதைத் தவிர, மற்ற சகலமான பொருட்களையும் நீ சுயேச்சையாக ஆண்டு அநுபவித்துக் கொள்ளலாம். இந்த மூன்று விஷயங்களையும் நீ கவனமாக வைத்து நான் சொன்னபடி நடந்துகொள்ள வேண்டும்.

ஜானகி:—உங்களுடைய பிரியப்படியே நடந்து கொள்ளுகிறேன்; நான் என்னுடைய தலைவிதியினால் இந்த ஒன்றரை வருஷ

காலம் உங்களைவிட்டுப் பிரிந்திருக்க நேர்ந்ததானாலும் ஈசுவரனுடைய கிருபையினால், உங்களுக்கு எவ்வித துன்பமும் நேராமல், கடைசியில் எல்லாம் நன்மையாகவே முடிந்ததைப்பற்றி நான் ஆநந்தமடைகிறேன். என்மேல் அளவிலடங்காத அன்பும் அபிமானமும் வைத்துள்ளவர்களான உங்கள் விஷயத்தில் நான் பெருத்த தவறுசெய்துவிட்டேன்; அந்த விஷயத்தில் நீங்கள் என்மேல் வருத்தம் பாராட்டக் கூடாது; நான் சொற்பத்தில் ஏமாறி அந்த இடத்தை விட்டு வந்துவிட்டேன். அப்போது நடந்த வர்த்தமானங்களை யெல்லாம் நீங்கள் விவரமாகக் கேட்பீர்களானால், நான் செய்த தவறை அவ்வளவாகப் பாராட்ட மாட்டீர்களென்பது நிச்சயம். நான் கடைசியாக உங்களை விட்டுவந்த தினத்துக்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னர், ஒருநாள் பகலில் நான் அந்த ஆரணியத்துக்குள் விறகு பொறுக்கிக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு மிகவும் உற்சாகமாக இருந்ததாகையால், என்னுடைய வாயிலிருந்து பாட்டுகள் தாமாகவே வந்து கொண்டிருந்தன; அப்படி நான் குதூகலமாகப் பாடியபடி விறகு பொறுக்கிக் கொண்டிருந்த காலத்தில், எனக்குப் பின்னால் தடதடவென்ற ஓசை யுண்டாயிற்று. அதைக் கேட்டு நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். மிகவும் அழகான ஒரு மனிதர் குதிரையின்மேலேறிக்கொண்டு அங்கே இருந்த ஒற்றையடிப் பாதையின் வழியாக வந்து, எனக்கு சமீபத்தில் குதிரையை நிறுத்தினார். அவருக்கு உண்மையில் வயது நாற்பத்தெட்டென்று பின்னால் நான் தெரிந்து கொண்டேனானாலும், அவர் அப்போது வெளிப் பார்வைக்கு முப்பது முப்பத்தைந்து வயதே ஆனவர் போல மிகவும் கட்டாகவும் சிவப்பாகவும் அழகாகவும் இருந்தார். அடி முதல் முடி வரையில் அவர் பல நிறங்களுள்ள பளபளப்பான பட்டு உடைகளை அணிந்திருந்தார். அவைகளில் நிறைந்திருந்த ஜரிகைகளும், அவருடைய உடம்பிலிருந்த வைரக் கடுக்கன்கள் மோதிரங்கள் முதலிய நகைகளும் ஜெகஜ்ஜோதியாக மின்னிக் கண்ணைப் பறித்தன. பார்வைக்கு அவர் ஒரு மகாராஜாபோல மகா கம்பீரமாகவும் வசீகரமாகவும் காணப்பட்டார். நான் பிறந்தது முதல் உங்களையும், வேடர்களையும், காட்டு மிருகங்களையும் தவிர, வேறே மனிதரைப் பார்க்காதிருந்தவளாகையால், அந்த அலங்கார புருஷரைக் கண்டவுடனே நான் பிர

மித்து மயங்கி அப்படியே நின்றுவிட்டேன். சகிக்க முடியாத நாணத்தினால் நான் கீழே குனிந்து கொண்டேனானாலும் இன்னதென்று சொல்லமுடியாத ஒருவகையான சஞ்சலம் என் மனசில் தோன்றி, அவரை மேன்மேலும் பார்க்கும்படியாகத் தூண்டியது. இன்பமோ துன்பமோ என்பது தெரியாத ஒருவித உணர்ச்சியினால் வதைக்கப்பட்டு, அவ்விடத்தைவிட்டுப் போகவும் மனமற்று, அங்கே இருக்கவும் வெட்கி நான் தத்தளித்து நின்ற சமயத்தில், அந்தப் புருஷர் என்னை அன்பாகப் பார்த்துப் புன்னகை செய்து மிகவும் குளிர்ந்த மிருதுவான வார்த்தைகளால் பேசத்தொடங்கினார். அவர் காளிங்கராயன் கோட்டை ஜெமீந்தாரென்றும், அவருடைய சமஸ்தானத்து கிராமங்களைச் சுற்றிப் பார்ப்பதற்காக வந்து பத்துமயில் தூரத்துக்கப்பாலுள்ள கந்தருவ கோட்டைக்கு வந்து அங்கே இருக்கும் அவருடைய மாளிகையில் இறங்கி இருப்பதாகவும், அந்த ஆணியத்துக்குள் நுழைந்து வேடிக்கை பார்த்து விட்டுப் போக வந்ததாகவும், வந்த இடத்தில் வழி தவறிப் போய் சுற்றிச் சுற்றி அலைந்துகொண்டிருந்ததாகவும் சொல்லி, எந்தத் திக்கை நோக்கிப் போனால் கந்தருவ கோட்டைக்குப் போகலாமென்று கேட்டார். நான் உடனே அவருக்கு, எந்த திக்கில் போனால் கந்தருவ கோட்டைக்குப் போகலாமென்று, விவரித்துச் சொன்னேன். அவர் உடனே பெருத்த சந்தோஷமடைந்தவராய்த் தம்முடைய சுண்டு விரலிலிருந்த ஒரு வைரமோதிரத்தைக் கழற்றி என்னிடத்தில் நீட்டி "பெண்ணே! நீ மிகவும் நற்குணவதியாக இருக்கிறாய்! உன்னைக் காணும்போதே என் மனசில் நிரம்பவும் ஆநந்தமுண்டாகிறது. எங்களுடைய அரண்மனைகளிலுள்ள ஸ்திரீகள்கூட இவ்வளவு அழகும் நற்குணமுமுடையவர்களாக இருக்கமாட்டார்கள். எவ்வித ஆபரணங்களும் நல்ல ஆடையும் இல்லாமலிருக்கும்போதே இவ்வளவு வசீகரமாக இருக்கும் நீ, நல்ல இடத்தில் சகல செல்வங்களோடும் இருந்தால், அடாடா! எப்படி இருக்கும் தெரியுமா? நீ ஒரு ராஜாத்தி போலவே இருப்பாய்; இதோ இந்த ஒரு மோதிரத்தை விரலில் போட்டுக்கொண்டு உன்னுடைய கையின் அழகைப் பார்" என்று நயந்து வற்புறுத்திக் கூறினார். அவரால் விரிக்கப்பட்ட இன்பவலையில் நான் அகப்பட்டுத் தத்தளித்திருந்தாலும், அந்த மோதிரத்தை

நான் வாங்காமல் வேண்டாமென்று சொல்லிவிட்டேன். அவர் அதற்குமேலும் வற்புறுத்தாமல் என்னுடைய கண்ணிய புத்தியைப் பற்றிப் புகழ்ந்து பேசத்தொடங்கி, நம்முடைய குடும்ப வரலாறுகளையெல்லாம் கேட்டார். நான் நம்முடைய வரலாறுகளையெல்லாம் தெரிவித்ததன்றி ஒவ்வொருநாளும் அதே வேளைக்கு விறகு பொறுக்க அந்த இடத்துக்கு வருகிற வழக்கமென்றும் சொன்னேன். அவர் கடைசிவரையில் என்னிடத்தில் மிகுந்த அன்பும் மரியாதையும் வைத்து நயமாகப் பேசிக்கொண்டிருந்தபின் விடை பெற்றுக்கொண்டு போய்விட்டார். அவரை விட்டுப் பிரிந்தமுதல் என் மனம் சகிக்க முடியாத துன்பத்தினாலும் சஞ்சலத்தினாலும் தவித்துக்கொண்டிருந்தது. அவருடைய பிரகாசமான வடிவம் என் மனசை விட்டு விலகாமல் என் அகக்கண்ணில் அப்படியே பதிந்து நின்று விட்டது.

அன்று முழுதும் நான் பைத்தியம் கொண்டவள்போல இருந்தேன். என் மனம் எந்த வேலையிலும் செல்லவில்லை. என்னுடைய நினைவெல்லாம் அந்த மனிதரின் மேலேயே போய் லயித்துப் போயிருந்தது. என் உடம்பு ஜுரநோய் கொண்டதுபோல சகிக்க முடியாத வெப்பமடைந்து நெருப்பின்மேல் வைத்த வெண்ணெய் போல உருகிக்கொண்டே இருந்தது. அன்று முழுதும் எனக்குப் பசியாவது தாகமாவது உண்டாகவே இல்லை. நான் சாப்பிடவில்லையென்பதை நீங்கள் கண்டு கோபித்துக் கொள்வீர்களோ என்ற பயத்தினால், நான் ஒரு கவளம் வாயில்போட முயன்றேன்; அது வேப்பங்காய்போலக் கசந்து குமட்டியது; அன்றிரவு முழுதும் எனக்குத் தூக்கமே உண்டாகவில்லை. படுத்திருக்கவும் மாட்டாமல், உட்கார்ந்திருக்கவும் மாட்டாமல் நான் வேதனைப் பட்டபடியே அன்றைய இரவைப் போக்கினேன். என் மனமெல்லாம் அந்தப் புருஷன்மேலேயே போயிருந்ததாகையால், எனக்கு அந்தக் குடிசையிலேயே இருக்கை கொள்ளவில்லை. மறுநாட் காலையில் உங்களுக்கு ஆகவேண்டிய பணிவிடைகளையெல்லாம் விரைவாகச் செய்து வைத்துவிட்டு, முதல்நாள் விறகு பொறுக்கிக்கொண்டிருந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்; அவர் அந்த இடத்துக்கு மறுபடியும் வருவதாகச் சொல்லவில்லையானாலும், அந்த

இடத்தில் இருந்தால், அவரை மறுபடியும் காணலாமோ என்ற ஒரு பைத்தியக்கார நினைவு என் மனசில் உண்டாகி அங்கேயே இருக்கும் படி தூண்டிக்கொண் டிருந்தது. அவர் முதல் நாள் எந்த வழியாக வந்தாரோ அந்த வழியிலேயே என்னுடைய விழியை வைத்தவளாய், நான் அப்படியே உட்கார்ந்துகொண் டிருந்தேன். அவருடைய அழகிய வடிவம் வருவது போலவும், மரத்தில் மறைவது போலவும், எனக்கருகில் வருவது போலவும், என்னோடு சந்தோஷமாகப் பேசுவது போலவும் எனக்குத் தோன்றிக்கொண் டிருந்தது. அப்படி நான் சித்தப்பிரமை கொண்டு தவித்திருந்த சமயத்தில், அவர் உண்மையிலேயே அங்கே வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் என்னைக் கண்டவுடனே மிகுந்த மகிழ்ச்சி யடைந்தவராய்ப் புன்னகை செய்தார். அவரைக் கண்டதில் எனக்கு எவ்வளவு அதிகமான ஆநந்தம் உண்டாயிற்றோ அதற்குமேல் அதிகமான ஆநந்தத்தை அவரும் என்னைக் கண்டதில் அடைந்ததாகத் தோன்றியது. என்னுடைய அழகையும் நற்குணத்தையும் கண்ட முதல் மறுபடியும் என்னைப் பார்க்க வேண்டுமென்ற விலக்க முடியாத அவா அவருடைய மனசிலும் எழுந்து வதைத்ததாகவும் அதனாலேதான் அவர் அன்றைய தினம் திரும்பவும் அங்கே வந்ததாகவும் கூறினார். நான் என்னுடைய உண்மையான மனநிலைமையை அவருக்கு வெளிப்படுத்த வெட்கி, ஒன்றையு மறியாதவள்போல நாணத்தினால் கீழே குனிந்து கொண்டு நின்றேன்; ஆனால், அவர் அன்றைய தினம் குதிரையைவிட்டுக் கீழே இறங்காமலேயே எனக்கருகில் வந்து நின்றவராய் "பெண்ணே! நேற்று நான் உன்னைக் கண்டது முதல், உன்னைத் திரும்பவும் ஒரு முறை பார்க்க வேண்டுமென்ற ஆசையினால் நான் நேற்று ராத்திரி முழுதும் தூங்கவே இல்லை. ஆனால், எனக்கு இன்றைய தினம் ஒரு அவசரமான ஜோலி இருக்கிறது. அதற்கு நான் இப்போது அங்கே போய்விட்டு நாளைய தினம் இதே நாழிகைக்கு இங்கே வருகிறேன். அப்போது நான் உன்னிடத்தில் கொஞ்ச நேரம் பேசிக் கொண் டிருக்கிறேன். நீ எனக்கு நேற்றைய தினம் செய்த உதவிக்கு நான் உனக்கு ஏதாவது சன்மானம் செய்தே தீரவேண்டும். அதை நீ வாங்கியே தீரவேண்டும். இதோ நான் கொண்டு வந்திருக்கும் இந்த

மூட்டைக்குள் இருக்கும் பொருள்களை நான் உனக்காகக் கொண்டு வந்திருக்கிறேன். நீ வேண்டாமென்று சொல்லி மறுத்தால் நான் இந்த இடத்தை விட்டுப் போகவே மாட்டேன். பத்துநாளானு லும், நான் அன்னந் தண்ணீரில்லாமல் இங்கேயே இருந்து விடு வேன். எங்கே! இதை வாங்கிக் கொள்'' என்று கூறி அமிர்தமழை பொழிவது போல இனிமையாகப் பேசி என்னித்தில் அந்த மூட் டையை நீட்ட, என்னுடைய வாய் மாத்திரம், அந்த சன்மானத்தை வாங்க மறுத்ததே யொழிய, என் கை, அவருடைய நன்னய வார்த் தைகளால் மயங்கித் தானுக நீண்டு, அந்த மூட்டையை வாங்கி விட் டது. அடுத்த நிமிஷத்தில் அவர் தம்முடைய குதிரையைத் தட்டி விட்டுக் கொண்டு வந்த வழியாகவே போய் விட்டார். அவர் போன வுடனே என்னுடைய உயிரே போய்விட்டதுபோல இருந்தது. என் கண் முன்னுல் பிரகாசித்துக் கொண்டிருந்த ஒரு பெருத்த ஜோதி மறைந்து என்னை அந்தகாரம் சூழ்ந்து கொண்டதுபோல இருந்தது. அந்த மூட்டையை ஏன் வாங்கினேம் என்ற ஒரு வெட்க மும் விசனமும் எழுந்து ஒரு புறத்தில் வருத்தத் தொடங்கின. அவர் வருவாரோ மாட்டாரோ என்று நினைத்து நான் ஏங்கித் தளர்ந் திருந்த சமயத்தில் தெய்வச் செயலாக வந்தவர் போய்விட்டாரே என்ற பெருத்த விசனம் எழுந்து என்னை வதைக்கத் தொடங்கி யது. நான் அவ்விடத்தில் மரம்போல அசைவற்று நெடுநேரம் நின்றபடியே அவர் போன வழியைப் பார்த்துக் கொண்டிருந்தேன்; குடிசைக்குத் திரும்பி வரவேண்டிய காலம் வந்துவிட்ட தென்பதை உணர்ந்த நான், அவர் அதற்கு மறுநாளும் வருவதாகச் சொல்லி விட்டுப் போனதைக் கருதி ஒருவாறு ஆறுதலடைந்து அவ்விடத்தை விட்டுப் போக எண்ணினேன். என் கையிலிருந்த மூட்டையோடு குடிசைக்கு வந்தால், உண்மை முழுதையும் உங்களிடத்தில் சொல்ல நேருமென நினைத்து, நான் அங்கே உட்கார்ந்து அதை அவிழ்த்துப் பார்த்தேன். அதற்குள் பெரிதாக இருந்த மூன்று மூட்டைகள் இருந் தன. ஒன்றைப் பிரித்துப் பார்த்தேன். அது முழுதும் மாதுரியமான தின்பண்டங்களாக இருந்தன. இன்னொரு மூட்டையைப் பிரித் தேன். அதில் விலை யுயர்ந்த பட்டாடைகள் காணப்பட்டன. மூன்று வது மூட்டையை அவிழ்த்தேன். அதற்குள், ஒரு ஸ்திரீ அடிமுதல்

முடிவரையில் அணிந்துகொள்வதற்குவேண்டிய ஒருஜோடிப்பு ஆபரணங்கள் இருந்தன. அவைகள் யாவும் தங்கமும் வைரக்கற்களும், சிவப்புக்கற்களுமாக ஜ்வலித்துக் கண்களைப் பறித்தன. அவற்றின்விலை ஒரு சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய்க்குமேல் இருக்கலாம். அவ்வளவு பெருத்த திரவியத்தை ஒரு திரணமாக மதித்து அவர் கொண்டுவந்து கொடுத்து விட்டுப் போனதிலிருந்து அவர் ஒரு மகாராஜா வென்றே நான் நினைத்துக்கொண்டதன்றி, அவர் என்னிடத்தில் நிரம்பவும் பிரியம் வைத்திருக்கிறாரென்பதையும் நிச்சயப்படுத்திக் கொண்டேன். அந்த ஆடையாபரணங்களை யெல்லாம் நான் அணிந்து கொண்டால் நீங்கள் கோபித்துக் கொள்வீர்களென்று சொல்லி மறுநாள் அவைகளை யெல்லாம் அவரிடத்திலேயே திருப்பிக்கொடுத்து விடவேண்டு மென்ற ஒரு நினைவு என் மனசில் உண்டாயிற்று. ஆகவே நான் அப்படியே செய்யத் தீர்மானித்துக் கொண்டேன். அவரால் வைக்கப்பட்டிருந்த தின்பண்டங்களை என்ன செய்கிற தென்ற யோசனை உண்டாயிற்று. அவர் அவ்வளவு பட்சத்தோடு கொடுத்ததை உண்ணாமல் வைத்திருப்பது, அவரை அலட்சியம் செய்வதுபோல ஆகு மென்ற ஓர் எண்ணமுதித்தது. ஆனால், உங்களுக்குக் கொடாமல் நான் மாத்திரம் தின்பதற்கும் என் மனம் இடந்தரவில்லை. ஆகவே, நான் கால் நாழிகை நேரம் வரையில் அந்த தருமசங்கடத்தில் இருந்து, கடைசியில், நான் என்னுடைய மோகத்துக்கே அடிமையாகி, அந்தத் தின்பண்டங்களில் சிலவற்றை உண்டுவிட்டு, மிகுதியையும், ஆடையாபரணங்களையும் திரும்பவும் மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டுபோய், நம்முடைய குடிசைக்கு சமீபத்திலுள்ள ஒரு மரத்தின் பொந்தில் மறைத்து வைத்துவிட்டு உங்களிடம் வந்து சேர்ந்தேன். வந்தவள் என்னுடைய மனசையும் உயிரையும் வேறே இடத்தில் வைத்துக்கொண்டு நடைப்பிணம்போல அந்தக் குடிசையிலிருந்து உங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை மாத்திரம் வழக்கப்படி செய்து வைத்துவிட்டு, முதல் நாளைப்போலவே, நான் ஊணுறக்கமின்றி ஜுரநோய்கொண்டு மறுநாளைய பகல் எப்போது வரும் வருமென்று தியானம் செய்து கொண்டிருந்து மிகுந்த பாடு பட்டு அன்றைய பொழுதைப் போக்கினேன். அந்த இரண்டு நாட்களாக என் மனசிலும் உடம்பிலும் ஏற்பட்டிருந்த மாறுபாட்டைப் பற்றி நீங்கள் கொஞ்சமும் சந்தேக மடையாமலே இருந்தீர்கள். அதனால் நான் உங்களிடத்தில் சொல்லாமலே, அந்த நட்பை நான் மறைத்து வைத்திருக்கலாமென்ற ஒரு துணிவைக் கொண்டு, நீங்கள் கொஞ்சமும் சந்தேகப்படாதபடி நடந்து வந்தேன். மறுநாளாகிய மூன்றாவது தினம் உங்களுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளையெல்லாம் அதிசீக்கிரத்தில் நிறைவேற்றி வைத்துவிட்டு, அந்த மனிதரைச் சந்தித்த இடத்துக்குப் போய்க் காத்திருந்தேன்; அவர் முதல் நாள் சொன்னபடி வருவாரோ மாட்டாரோ

என்று அடிக்கடி சந்தேகித்தவளாய் நெருப்பின்மேல் விழுந்த புழுப்போலத் துடித்துக் கொண்டிருந்தேன்; ஒரு நாழிகை நேரத்தில் அவர் வந்து சேர்ந்து, குதிரையை விட்டுக் கீழே இறங்கிப் புன்னகையும் சந்தோஷம் அரும்பிய முகத்தோடு அன்றைக்கும் ஒரு மூட்டையை எடுத்துக்கொண்டு என்னிடம் நெருங்கி வந்து "பெண்ணே! நேற்றையதினம் வந்த நான் இங்கே கொஞ்ச நேரமாவது தங்கி இருந்துபோகாததைப்பற்றி உனக்கு என்மேல் கோப மிருக்கிறதென்பதை உன்னுடைய முகமே காட்டுகிறது; நேற்றைய கணக்கை வட்டியும் முதலுமாக இன்று தீர்த்து வைக்கிறேன். இனிமேல் நான் ஒவ்வொரு நாளும் தவறாமல் இந்த இடத்துக்கு வருவேனென்று நினைக்கிறேன்; ஏனென்றால், நானிருக்கும் கந்தருவ கோட்டையில் எனக்குப் பொழுதுபோவது மிகவும் கடினமாக இருக்கிறது; எனக்கு மனைவி மக்கள் எவருமில்லை; நான் ஏகாங்கி; அன்றையதினம் உன்னைக் கண்ட நிமிஷம்முதல், என் மனசில் உன் விஷயத்தில் ஒருவிதமான பிரியம் ஏற்பட்டுவிட்டது; நீயும் நானும் நெடுங்காலமாகப் பழகினவர்கள்போல என் மனசில், வேறொன்றிய வாத்சல்யம் சுரந்துகொண்டிருக்கிறது; எப்போதும் உன் நினைவே நினைவாக இருக்கிறது; இங்கே நான் இப்போது வருகிறவரையில், அங்கே இருந்தது நெருப்பின் மேல் இருப்பதுபோல சகிக்கமுடியாத வேதனையாக இருந்தது. நான் இங்கே புறப்படுகிறவரையில் அந்தப் பாழும் பொழுதானது போகாமல் வளர்ந்து கொண்டே இருந்தது; என்னுடைய உன்னதமான மாளிகையில் அபாரமான செல்வத்திலிருந்து சகல விதமான சுகபோகங்களை யெல்லாம் அநுபவித்திருப்பதைவிட இங்கே வந்து உன்னைப் பார்த்து உன்னோடு பேசிவிட்டுப் போவது பரமாநந்த சுகமாக இருக்கிறது. என் விஷயத்தில் உனக்கும் ஒருவிதப்பற்றுதலும் பிரியமும் உண்டாகி இருக்கின்றனவென்பது, நீ இங்கே வந்து என் வருகையை எதிர்பார்த்திருப்பதிலிருந்தே நன்றாகத் தெரிகிறது. நிருமானுஷ்யமான இந்தக் காட்டில் நீ இருக்கிறபடியால், உனக்கு நல்ல தின்பண்டங்கள் அகப்படாதென்று நினைத்தே நான் நேற்றுதினம், அந்த மூட்டையைக் கொண்டுவந்தேன்; அதுபோல இன்றைக்கும் கொண்டுவந்திருக்கிறேன்; என் விஷயத்தில் உனக்கு உண்மையான பிரியம் உண்டாகி இருப்பது உண்மையானால், நீ எவ்வித ஆட்சேபனையும் சொல்லாமல் இதையும் வாங்கிக்கொள்ள வேண்டும்" என்று கூறியவண்ணம் அவர் தம்முடைய கையிலிருந்த மூட்டையை என்னிடத்தில் கொடுத்தார்; அதற்கு நான் என்ன மறுமொழி சொல்வதென்பதை உணராமலும், அதை வாங்குவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க மாட்டாமலும் நாணத்தினால் மேற்கொள்ளப்பட்டவளாய்க் கீழே குனிந்து மௌனமாக நின்றேன்.

# உக்ரசக்தி மாத்திரைகள்.

கனவான்களே !

இம்மாத்திரை, ஜன்மேந்திரிய துர்வினியோகத்தாலும், மிதமிஞ்சின ஸ்திரீ சம்போகத்தாலும் நேரிடக்கூடிய சொப்பன, துரித, தரிசன ஸ்கலிதங்களை அடியோடு நிறுத்துவதுடன், மூலசூட்டின் கொதிப்பினால் இளகிப்போன விந்துவை கெட்டிப்படுத்தும். மற்றும் இருமல், பித்தசோகை, வயிறுவலி, உதிரக்கொதிப்பு, வெட்டை, நீர்ச்சுருக்கு, அஜீரணம், மலச்சிக்கல், ஆனந்தவாய்வு, ஹிருதயரோகம், மூலஸ்தானத்திலும் திரேகத்திலெவ்விடத்திலும் கிருமிகளாலும், துர்நீர் சம்பந்தத்தினாலும் நேரிடக்கூடிய அரிப்பு முதலாகிய வியாதிகளைப் போக்கி உயிர்நிலைகளை திடப்படுத்தும். இவ்வுக்ரசக்தி (அபூர்வசக்தி) வாய்ந்த மாத்திரையைப்பற்றி நாங்கள் புகழ்ந்து படாடோபமாக எழுதுவதில் உண்மை விளங்காது. ஒரு தடவை வாங்கி பரிக்ஷைசெய்து பார்த்தால் இதன் சக்தியின் உண்மையை தாங்களே புகழ்வீர்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை.

எவ்வித பத்தியமும் கிடையாது. உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ 1-0-0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்,

எஸ். ஆர். கெ. சுவாமி,

லெக்ஷிமிபுரம், மதுரை, S. I. R.

## பட்டு ரோஜா.

## கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

**சிறந்த வாசனை!** **குறைந்த விலை!**

**சிலர் உபயோகமற்ற எண்ணெய்க்கு பலவிதமான இனாம் கொடுப்பதாக நோட்டீசில் போட்டு ஜனங்களை மயக்குகிறார்கள்; ஆகையால் இதுவும் அதைப்போன்றதைலமென்று நினைக்கவேண்டாம்.**



---

### ரிஜிஸ்டர் செய்தது.

ஸ்திரீகளினுடைய பெருமையானது நீண்ட திரண்ட கூந்தலேயாம். அவர்களினுடைய அதி துக்கமானது கூந்தல் உதிர்ந்து போவதேயாம்; அவர்களின் கஷ்டமானது கூந்தல் சிக்குப்படுவது தான்; சிக்கில்லாமல் வைத்துக்கொள்வது அவர்களின் அதி சந்தோஷமாம்; எங்கள் பட்டு ரோஜா தைலத்தை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்; வாசனையோ அதிகம்; மயிரோ நீளும்; சிக்கடையாது; மயிர்க்கால்களுக்குப் பலம் கொடுப்பதும், மூளையைத் திடப்படுத்துவதும், மயிருக்கு மழமழப்புக் கொடுப்பதும் மயிரை அடர்ந்து வளரும்படி செய்வதும் இந்தத் தைலமே; மூளையைக் குளிரச் செய்யும்; சிறியோர்களும் பெரியோர்களும் ஸ்திரிகளும் புருஷர்களும் சகலமானவர்களும் தாராளமாய் உபயோகிக்கலாம். புட்டி 1-க்கு 0 12 0 புட்டி 3-க்கு 2 0 0

## இரவில் விளக்கு வெளிச்சம் இல்லாமல் மணிபார்க்கும் கையில் கட்டும் ரேடியம் ரிஸ்டுலேட் கேடியாரம்.



இந்த கெடியாரம் இரவில் எவ்வளவு இருட்டாய் இருந்தாலும் விளக்கு வெளிச்சம் இல்லாமல் மணி நன்றாய்தெரியும்; ஆயிரக்கணக்கான கெடியாரங்கள செலவாகிறது; இது சரியான டைம் காட்டுகிற நல்ல கடியாரம்.

சாதாரண லேடிகெடியாரங்களில் இரவில் மணி பார்க்கவேண்டுமானால் விளக்குவெளிச்சம் தேவை; இவைகளுக்கு அவ்விதமான விளக்கு வெளிச்சம் தேவையில்லை; மணிகாட்டும் எண்களிலும் இரண்டு முள்களிலும் ரேடியம் சேர்த்திருப்பதால் இராக்காலத்தில் மணி நன்றாய்த் தெரியும். பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள்; உறுதியான கெடியாரம் வெகுகாலம் நன்றாய்ப் போகக்கூடியது.

நெ. 1. நிக்கல் ரிஸ்டுலெட் கெடியாரம் தோல்பட்டையுடன் 5 0 0

நெ. 2. இரவில் மணிபார்க்கும் ரேடியம் ரிஸ்டுலெட் கெடியாரம் தோல்பட்டையுடன் விலை ரூபா ... 6 0 0

நெ. 3. வெள்ளி ரிஸ்டுலெட் கெடியாரம் நேர்த்தியான தோல் பட்டையுடன் விலை ரூபா ... 7 0 0

நெ. 4. இரவில் மணிகாட்டும் சொக்கவெள்ளி ரேடியம் ரிஸ்டு 8 8 0

**பி. எஸ். நாயுடு அண்டு கம்பனி.**

நெ. 53 மலையப்பெருமாள் தெரு, மதறாஸ்.

எமது கம்பனியின் பெரிய கேட்லாக் வேண்டியவர்கள் ½ அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

Noble Press, Madras S. E.

298 Jagannathan Vol-1, ...
1 OCT 1993



தனது அக்காள் உறுதியாகவும் அழுத்தமாகவும் கூறிய வார்த்தைகளைக் கேட்ட சுந்தரபாண்டிய தேவன் ஒருவாறு வியப்பும் மலைப்பு மடைந்தவனாய் அவள் என்ன விதமான ரகசியத்தை வெளியிடப் போகிறாளென்பதை அறிய ஆவல் கொண்டவனாய் அவளது வாயைப் பார்த்தபடி நிற்க, உடனே கோமளவல்லி நாச்சியார் "அப்பா தம்பீ! நான் சொல்லப்போவதை நன்றாக கவனித்துக் கேள். நம்முடைய தாயார் தஞ்சைமா நகரில் கொலையாளித் தொழில் செய்யும் ஒரு மனிதருடைய மகளென்பதும், அவர்கள் ஜாதியில் குறவர்களென்பதும், உன் மனசில் மிகுந்த அவமானத்தையும் துயரத்தையும் உண்டாக்குவது இயற்கையானாலும், அவர்களுடைய வயிற்றில் பிறந்த நாம் அந்த இழிவைப்பற்றி இப்போது நினைத்து வருந்துவது சரியல்ல. அதை நாம் இனி வெளியிடுவதும் உசிதமானதல்ல. ஆனால் நம்முடைய தாயாரின்மேல் விபசார தோஷம் ஏற்பட்டதும், அதனால் அவர்கள் அகால மரணமடைந்ததும் எவராலும் சகிக்கமுடியாத மகா துக்ககரமான விஷயங்களாகையால், அவைகளைப்பற்றி நீ வருந்துவது நியாயமே. ஆனால் அவர்கள் உண்மையில் விபசாரியல்லவென்பதை மாத்திரம் நீ உணர்ந்து கொண்டால் உன்னுடைய விசனத்தில் பெரும்பாகமும் குறைந்து போகும். அவர்கள்மேல் ஏற்பட்ட அபாண்டமான குற்றமும் அகால மரணமும் இப்போது சிறிதளவு மனதை வதைத்தாலும் காலக்கிரமத்தில் நீங்கிப்போம். ஆகையால், எல்லா விவரத்தையும் நீ அறிந்து கொள்வது அத்யாவசியமான விஷயம். நம்முடைய தகப்பனார் நம் தாயாரை முதலில் தஞ்சையில் கண்டு மோகங்கொண்டு அவர்களை அழைத்துக்கொண்டு வந்தபோது அவர்கள் தங்களுக்குள் ஒரு நிபந்தனை செய்து கொண்டார்களென்பது இந்தச் சுவடியில் எழுதப்பட்டிருக்கிறதல்லவா. அதாவது, நம்முடைய தகப்பனார் தாயைப் பார்த்து "ஆனால் ஒரே ஒரு நிபந்தனை இருக்கிறது. அதற்கு மாத்திரம் நீ இணங்க வேண்டும். என்னவென்றால், நாம் நம்முடைய ஊருக்குப் போன பிறகு, நீ உன்னுடைய ஊரைப்பற்றியாவது, உன்னுடைய தகப்பன் அண்ணன் ஆகிய இருவர்களைப் பற்றியாவது நினைக்கவும் கூடாது; பிரஸ்தாபிக்கவும் கூடாது. உன் தகப்பனும் அண்ணனும் இறந்து போய்



தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

விட்டதாக எண்ணிக்கொண்டு அதற்கிணங்க நடந்து கொள்ள வேண்டும்; நீ உன்னுடைய ஊர் தஞ்சாவூர் என்பதையும் நீ இந்த ஊரில் கொலையாளிக்குப் பிறந்தவளென்பதையும் அடியோடு மறந்து புது மனிஷியாக மாறிவிட வேண்டும்.'' என்று சொல்ல, தாயார் அதை ஒப்புக்கொண்டு பிரமாணம் செய்தார்களல்லவா. அப்படிச் செய்திருந்தாலும், நம்முடைய அம்மாள் நிரம்பவும் இளக்கமான மனசை உடையவர்களாகையால், தகப்பனுரைப்பற்றிய நினைவும், அண்ணனைப்பற்றிய நினைவும் அவர்களுடைய மனசை விட்டு மாறு மலேயே இருந்து வந்தது. அவர்கள் இந்த ஊருக்கு வந்து இந்த சமஸ்தானத்தின் பட்ட மகிஷியான் பிறகு அடிக்கடி தம்முடைய சொந்த மனிதர்களைப்பற்றி நினைத்து நினைத்துத் தமக்குள்ளாகவே துயருற்று வந்தார்கள். தம்மிடத்தில் அபாரமான வாஞ்சை வைத்திருந்த தம்முடைய அண்ணனுடைய நினைவும் வடிவமும் சதா காலமும் அவர்களுடைய அகக்கண்ணில் தோன்றி வதைத்துக் கொண்டிருந்ததானுலும் தாம் செய்து கொடுத்த பிரமாணத்துக்குக் கொஞ்சமும் பங்கம் ஏற்படக் கூடாதென்ற உறுதியை மாத்திரம் காப்பாற்றிக்கொண்டு வந்தார்கள். ஆனுல், கடைசியாக ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இந்த ஊர் கவர்னர் தம்முடைய உத்யான வனத்தில் நிலாச்சாப்பாடு நடத்திய தினத்திலிருந்து அவர்களுடைய துர்ப்பாக்கிய காலம் ஆரம்பமாயிற்று. அந்த விருந்து நடந்த இரவில், ஏராளமான ஜனங்கள் கூடியிருந்த கவர்னருடைய உத்யான வனத்தில் நம்முடைய தாயார் திடீரென்று அவர்களுடைய தமயனுரைச் சந்தித்தார்கள்,'' என்றுள்.

சுந்தரபாண்டிய தேவன் கரைகடந்த வியப்பும் பிரமிப்பும் ஆநந்தமு மடைந்து ''ஆ! என்ன! என்ன! அவர்களுடைய தமயனுரையா சந்தித்தார்கள்! நம்முடைய தாயார் மகா பரிசுத்தமான நடத்தையுடையவர்களாயிற்றே என்றும், அவர்கள் எவ்விதத் தவறையும் செய்திருக்க மாட்டார்களென்றும் என் மனம் உறுதியாக நினைத்தது? அது நிச்சயமாயிற்று,'' என்றுன்.

கோமளவல்லி நாச்சியார் "ஆம்! உண்மையில் அவர்கள் தம்முடைய அண்ணனைத்தான் கண்டு அவரோடுதான் தனிமையில் பேசிக்கொண் டிருந்தது. நம்முடைய தாயார்

12 OCT 1923

தஞ்சையை விட்டு வந்தபிறகு அடுத்த வருஷத்தில் அவர்களுடைய தகப்பனார் இறந்து போய்விட்டாராம். அவர் வகித்து வந்த கொலையாளி உத்தியோகம் உடனே அவருடைய பிள்ளைக்கு வந்து சேர்ந்ததாம். அந்த உத்தியோகத்தை வகிக்க அவருக்குக் கொஞ்சமும் மனமில்லையாம். அந்த ஊரிலிருந்தால் துரைத்தனத்தார் அந்த விஷயத்தில் வற்புறுத்துவார்களென்று பயந்த நம் தாயாருடைய தமயனார் தம்முடைய தகப்பனார் சேர்த்துவைத்திருந்த பொருள்களையெல்லாம் பணமாக்கி எடுத்துக்கொண்டு எவருக்கும் தெரியாமல் இராத்திரியே அந்த ஊரை விட்டுப் புறப்பட்டு ஓடி வந்து விட்டாராம். அப்படி வந்தவர் தஞ்சைராஜ்யத்தின் எல்லையைத் தாண்டி மைசூர் ராஜ்யத்திற்குள் புகுந்து கண்ணியமான ஏதாவதொரு தொழில் செய்து ஜீவிக்கவேண்டுமென்ற கருத்தோடு பற்பல ஊர்களில் அலைந்து அங்கங்கு சிற்சில காலமிருந்து கடைசியில் தற்செயலாக இந்த ஊருக்கு வந்து சேர்ந்தாராம். அப்படி வந்தவர் இந்த ஊர் கவர்னருடைய சேவகனொருவனுடைய வீட்டில் தங்கி அவன் மூலமாக கவர்னரிடத்தில் ஏதேனும் சேவகாவிர்த்தியிலமா நினைத்தாராம். அந்தக் காலத்திலேதான் கவர்னர் எல்லா ஜெமீந்தார்களுக்கும் விருந்து வைத்தது;நம் தாயாருடைய தமயனார் அந்த சேவகனோடு கூட அந்த விருந்தின் வைபவங்களைப் பார்ப்பதற்காக கவர்னருடைய உத்தியானவனத்துக்கு வந்தாராம். ஸ்திரீகள் கூடியிருந்த இடத்திற்குப் பக்கத்தில், அவர் வந்து பார்த்தபோது அவர் தம்முடைய தங்கை இருந்ததைக் கண்டுகொண்டாராம். அதே க்ஷணத்தில் நம்முடைய தாயாரும் அவர் இன்னாரென்பதைக் கண்டுகொண்டார்களாம். உடனே நம்முடைய தாயார் திடுக்கிட்டு பெருத்த திகிலும் கலவரமுமடைந்து தாம் அவரோடு பேசுவதா அல்லவா என்பதைப் பற்றி சிறிதுநேரம் யோசித்துக் கலங்கி நின்றார்களாம். புருஷருக்குச் செய்து கொடுத்துள்ள பிரமாணப்படி தாம் அவரிடம் உறவு முறைமை பாராட்டக் கூடாதென்ற எண்ணம் உண்டானதாலும், அந்த விஷயத்தைத் தாம் தமது தமயனாருக்கும் தெரிவித்து வைத்தாலன்றி அவர் சும்மா விருக்கமாட்டாரென்ற நினைவுண்டாயிற்று. தாம் அப்போது அவரோடு பேசாவிட்டாலும், அவர் அங்கிருந்த மற்ற மனிதர்களிடத்தில் கேட்டு, தமது தங்கை எங்கிருக்கி

ருளென்பதை அறிந்து கொண்டு மறுநாள் எப்படியும் அந்த இடத்துக்கு வந்து தம்மைக் காணுவாரென்ற எண்ணமும், அவர் ஒருகால், அந்த அம்மாள் தம்முடைய தங்கை என்பதை எல்லோரிடத்திலும் வெளியிட்டு விடுவாரோ என்ற எண்ணமும் எழுந்து வதைத்தனவாகையால் நம்முடைய தாயார் தமது தமயனுரை உடனே எச்சரித்து வைத்து நம் தகப்பனருக்குச் செய்துகொடுத்திருந்த வாக்குறுதிக்கு பங்கம் வராமல் காப்பாற்றும் கருத்தோடு உடனே தனியாகப் பிரிந்து தம்முடைய தமயனுரை அழைத்துக்கொண்டு மறைவான ஓரிடத்துக்குப் போய், தாம் தஞ்சையை விட்டுவந்த வரலாற்றையும், தம்முடைய அப்போதைய நிலைமையையும் விவரித்துச் சொன்னதன்றி, இந்த ஊரை விட்டு அவர் உடனே புறப்பட்டு வேறே எந்த ஊருக்காவது போய் விடும்படி வேண்டிக் கொண்டார்கள். அதோடு, நம் தாயார் தம்முடைய உடம்பிலிருந்த விலையுயர்ந்த ஓர் ஆபரணத்தையும் கழற்றி அவருக்குக் கொடுத்து அதை முதலாக வைத்துக்கொண்டு ஏதாவது ஒரு தொழில் செய்து பிழைத்துப்போகும்படி அவருக்குப் புத்திமதி சொல்லி அவரை அனுப்பிவிட்டு வந்து சேர்ந்தார்கள். அதன் பிறகு சில வருஷகாலம் வரையில் தம்முடைய தமயனுர் எங்கே இருக்கிருரென்கிற விவரமே தெரியாமலிருந்தது. அதன்பிறகு ஒரு நாள் திடீரென்று நம்முடைய அம்மாளுக்கு ஒரு கடிதம் வந்து சேர்ந்தது. அதற்கு முன் நம் அம்மாள் கொடுத்த ஆபரணத்தை விற்று அவர்களுடைய தமயனுர் செய்து வந்த வர்த்தகத்தில் எதிர்பாராத பெருத்த நஷ்டம் வந்து விட்டதென்றும், வேறே எவ்வித மார்க்கமுமில்லாமையால், அவர் நம் அம்மாளுடைய உதவியை நாடி இந்த ஊருக்கு வந்திருப்பதாகவும், மறுநாள் சாயுங்காலம் அம்மாள் நேரில் வந்தாவது ஆள் மூலமாகவாவது ஏதேனும் பண உதவிசெய்தால், அதைப் பெற்றுக்கொண்டு தாம் உடனே ரகசியமாக ஊரைவிட்டுப் போய் விடுவதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் எழுதி இருந்தார். மற்ற வேலைக்காரரை அனுப்பினல், அவர்கள் அதைப் பற்றித் தாறுமாருன அர்த்தங்கள் செய்துகொண்டு பொய் வதந்திகளைப் பரப்பி விடுவார்களாகையால், தாமே நேரில் போய் பணத்தைக் கொடுத்து அவரை அனுப்பிவிட்டு வந்துவிடுவது உசிதமென்று அம்மாள் னைத்து அப்படியே போய் விட்டு வந்தார்கள். நம்முடைய

தகப்பனர் தம்மேல் சந்தேகப்பட்டு வேலைக்காரியை உள்ளாளாக வைத்து எல்லாவற்றையும் கவனிக்கிறரென்பது நம்முடைய அம்மா ளுக்குத் தெரிந்திருந்தால், உண்மையான சங்கதிகளை யெல்லாம் அம்மாள் நம்முடைய தகப்பனரிடம் வெளியிட்டு கடிதத்தையும் காட்டி அவருடைய சந்தேகத்தை உடனே தீர்த்திருப்பார்கள். அதைப்பற்றி அம்மாள் கொஞ்சமும் சந்தேகிக்கவே இல்லை. அம் மாளுக்கு வந்த கடிதத்தை யாராவது பார்த்துவிடப் போகிறர்களே யென்று பயந்து, அவர்கள் அதைத் தம்முடைய பெட்டியில் ரகசிய மாக மறைத்து வைத்தார்கள். அதன் பிறகு அவர்கள் அதைப் பற்றிய நினைவையே மறந்துவிட்டார்கள். அவர்களிறந்த பிறகு அதை நான் கண்டெடுத்து பத்திரமாக வைத்திருக்கிறேன். அதை வேண்டுமானலும், நீ பார்க்கலாம். அந்த இரண்டாவது சம்பவம் நடந்த பிறகு சிலவருஷகாலம் கழிந்தது. நம் தாயாருடைய அண் ணன் ஏதோ ஒரு துறையில் இறங்கி வியாபாரம் செய்து அபிவிருத்தி யடைந்துவந்தார். ஒருநாள் இரவில் கொள்ளைக்காரர்கள் அவருடைய வீட்டுக்குள் புகுந்து அவரை அடித்துக் கட்டிப்போட்டுவிட்டு, அவ ருடைய சகலமான சொத்துகளையும் அபகரித்துக்கொண்டு அவரை இடுப்புத் துணியோடு விட்டுப்போய் விட்டார்களாம். ஒரே இரவில் தாம் பிச்சைக்கார நிலைமைக்கு வந்துவிட்டதைக்கண்ட அவர் நிலைகல ங்கி சித்தப்பிரமை கொண்டவர்போல மாறிப்போய்விட்டார். அவரு டைய நல்ல அறிவு முழுதும் போய்விட்டது. அந்த மகாபரிதாப கரமான நிலைமையில் அவர் ஏதோ வெறிகொண்டவர்போல இந்த ஊருக்கு ஓடிவந்து, தோட்டத்திற்குள் புகுந்து, நம் தாயாரிருந்த அந்தப்புரத்துக்குள் திடீரென்று நுழைந்துவிட்டார். முதல் தடவை யில் நம் தாயார் அவருக்குச் சொல்லியிருந்த நிபந்தனை விஷயத்தை யெல்லாம் மறந்து, அவர் பைத்தியங் கொண்டவர்போல, அப்படி வந்து நின்றதைக் கண்ட நம் தாயார் பதறிப்போய் நம் தகப்பனரா வது,மற்றவராவது அவரைக் கண்டுகொள்ளப் போகிறர்களே என்ற திகில்கொண்டு, அவர் அப்படித் திடீரென்று வந்த காரணமென்ன வென்று விசாரிக்க,அவர் தாறுமாருகப் பிதற்றித் தம்முடைய சொத் துகளெல்லாம் களவாடப்பட்டுப் போனதையும், அதன்பொருட்டு அவர்களைப் பார்க்க வந்ததாகவும் ஒருவாறு தெரிவிக்க, அந்த வர

லாற்றைக் கேட்ட நம்முடைய அம்மாள் மிகுந்த கலக்கமும் சங்கடமுமடைந்து, விலையுயர்ந்த ஓர் ஆபரணத்தை எடுத்து அவரிடம் கொடுத்து மறுபடியும் அவர் தம்மிடம் வரக்கூடாதென்று கண்டிப்புச்செய்து, அவரைத் தோட்டத்தின் வழியாக வெளியில் அனுப்பிவிடும் கருத்தோடு அவரை அழைத்துக்கொண்டு மேன் மாடப்படிகளின் வழியாகத் தோட்டத்துக்குள் இறங்கிய காலத்திலேதான், நம்முடைய தகப்பனுரால் அமர்த்தப்பட்ட முரட்டுமனிதர்கள் வழி மறித்துக் கொஞ்சமும் ஜீவகாருண்யமில்லாமல், மகாகொடுமையான படுகொலையைச் செய்தார்கள். அதை நினைக்கும்போதே என் தலை மயங்கிக் கிறுகிறென்று சுழலுகிறது. குடல் நடுக்கம் கொள்கிறது. அந்தப் பரம விபரீதமான கோரக்காட்சியை நேரில் பார்த்துக்கொண்டிருந்த நம் தாயாருடைய மனம் என்ன பாடுபட்டிருக்கும். எவ்வித சம்பந்தமுமில்லாத அன்னியனொருவன் அப்படி அநியாயமாகச் சித்திரவதை செய்யப்படுவதைப் பார்ப்பதே கொஞ்சமும் சகிக்கமுடியாத காரியமாயிற்றே. அப்படி இருக்க யாதொரு பாவத்தையு மறியாத தம்முடைய சொந்தத் தமயன் பலவிதமான இடுக்கண்களை யடைந்து பொருள்களையெல்லாம் பறிகொடுத்து சித்தப்பிரமை கொண்டு மகா பரிதாபகரமான நிலைமையிலிருந்த சமயத்தில் நிஷ்காரணமாகக் கொல்லப்பட்டு அணுவணுவாகத் துண்டிக்கப் படுவதென்றால், அந்த மகா சங்கடமான காட்சியைக் கண்டு நம்முடைய அம்மாள் உடனே மூர்ச்சித்து ஸ்மாரணைதப்பிக் கீழே விழுந்துவிட்டது ஆச்சரியமா!" என்று கூற அதற்குமேல் பேசமாட்டாமல் அவளது வாய் குழறிப்போய் விட்டது. தேகம் பதறியது. மனதும் கண்களும் கலங்கின.

அந்த வாலாற்றைக் கேட்ட சுந்தர பாண்டிய தேவனும் குமுதவல்லி யம்மாளும் மட்டுக்கடங்காத் துயரமும் மன இளக்கமுமடைந்து அந்த மகாபரிதாபகரமான துக்க சங்கதியைக் கேட்க சகியாமல் தத்தளித்தனர். சுந்தரபாண்டிய தேவன் வாய்விட்டுக் கோவென அலறி "ஐயோ! அம்மா! உங்களுக்கும் உங்கள் தமயனுருக்கும் எப்படிப்பட்ட அபாண்டப்பழி வந்து சேர்ந்தது! அடாடா! தெய்வமே! இப்படிப்பட்ட அட்டூழியம் நடக்க உன் திருவுளமும் இடங்கொடுத்ததா! ஆகா! என்னுடைய மனம் கட்டிலடங்காமல்

கொதிக்கிறதே! என்ன செய்வேன்" என்று தனது கைகளை ஓங்கி மார்பில் அறைந்துகொண்டான்.

உடனே கோமளவல்லி நாச்சியார் தனது தம்பியை நோக்கி நிரம்பவும் அன்பாகவும் உருக்கமாகவும் பேசத்தொடங்கி "அப்பா தம்பீ! நம்முடைய தாயார் இறந்து மண்ணுக்கிரையாகி எத்தனையோ வருஷகால மாகிவிட்டது. ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் திரும்பி வருவரோ என்று ஜனங்கள்சொல்லு கிறபடி, நாம் எப்பாடுபட்டாலும், இனி நம்முடைய அம்மாளை உயிரோடு காணமுடியாது. நீ விசனப்படாதே அப்பா! நீ கல்யாணம் செய்துகொண்ட இன்றையதினம் நிகரற்ற ஆநந்த மநுபவிப்பதற்குப் பதிலாக இப்படிப்பட்ட துயரத்துக்கு ஆளாவதைக் காண சகிக்கவில்லை. இன்னம் சில விவரங்கள் மிகுதி இருக்கின்றன. அதையும் நான் சொல்லி விடுகிறேன். தோட்டத்தில் இந்தப் படுகொலை நடந்த காலத்தில் நம் தாயார் மூர்ச்சித்துப் பிணம்போல விழுந்து விட்டார்கள். அப்படி விழாமலிருந்தால் கூட அந்த சமயத்தில், அவர்களுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தை கூட வெளிப்பட்டிருக்காது. அதன் பிறகு அவர்கள் கடுநோய் கொண்டு விபரீதமான காயலாவில் விழுந்து இறக்கும் தருணத்திலிருந்த போது, தம்மிடம் வந்து தாம் சொல்லும் சில வார்த்தைகளைக் கேட்கும்படி நம்முடைய தகப்பனுருக்குச் செய்தி சொல்லி யனுப்பினார்கள். அவர் தம்மைப் பார்க்க வந்தால், தாம் எவ்விதக் குற்றமும் செய்யவில்லை யென்றும், தம்மிடம் வந்தவர் தம் தமயனுரென்றும், அவர் வந்ததன் காரணம் இன்னதென்றும் கூறித் தனது கற்பை மெய்ப்பிக்க எண்ணியே நம்முடைய அம்மாள் அவருக்குச் செய்தி சொல்லியனுப்பியது. அவர் அதற்கு இணங்காமல் ஒரே மூர்க்கமாக இருந்துவிட்டார். அதன்பிறகு நான் நேரில் போய், அப்பாவிடத்தில் எவ்வளவோ கெஞ்சி மன்றாடி நயந்து வேண்டிக் கொண்டதெல்லாம் வீணாயிற்று. தாம் கொஞ்சமும் மாசற்ற பதிவிரதை என்பதைத் தம்முடைய புருஷருக்கு மெய்ப்பிக்காமலும் அதனால் மனத்திருப்தி யடையாமலும், தாம் இறக்கவேண்டியதுதான் முடிவென்றெண்ணிக் கொண்ட அம்மாள் அதன்பிறகுதான் என்னைத் தனியாக வைத்துக் கொண்டு எனக்குமாத்திரம் இந்த ரகசியத்தை வெளியிட்டார்கள்;

இந்த பயங்கரமான விவரங்களைக் கேட்க, நான் திடுக்கிட்டு பிரமிப்ப டைந்தேன். நான் நம்முடைய அம்மாளிடத்தில் எல்லையற்ற வாஞ் சைவைத்தவளாகையால், அவர்கள் சொன்ன வரலாறுகளை யெல் லாம் நான் வேதவாக்கியமாக நம்பியதன்றி, நம்முடைய தகப்பனாரை நான் விஷம் போல வெறுத்தேன். நம்முடைய அம்மாள் இறக்கு முன் கடைசியாக என்னைப் பார்த்து "அம்மா! கோமளவல்லீ! நான் வெளியிட்ட இந்த ரகசியங்களைக் கேட்க, உன் மனம் நிரம்பவும் பதறுமென்பது நிச்சயம். ஆனாலும் நீ உன்னுடைய ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளவேண்டும். ஏனென்றால், இந்த விஷயங்களெல் லாம் நம்முடைய வேலைக்காரர்களுக்குத் தெரிந்தால், அதனால், உங் களுக்கும் உங்கள் தகப்பனாருக்கும் அவமானம் ஏற்படும். நான் இந்த ரகசியத்தை உன்னிடத்தில் வெளியிட்டு உன்னுடைய பரி சுத்தமான மனசைக் களங்கப்படுத்த இஷ்டப்படவில்லையானாலும், மகா முக்கியமான ஒரு கருத்தோடு நான் இதை உன்னிடம் வெளி யிடுகிறேன். உன் தம்பி ஒன்றையு மறியாத பையன். அவன் பிறந்ததுமுதல் உன் தகப்பனார் அவனிடத்தில் கொஞ்சமும் பிரிய மில்லாமல் அவனை விஷம்போல வெறுத்துக்கொண்டு வருகிறார். அதன் காரணம் இன்னதென்பது எனக்கு இதுவரையில் தெரி யாமலிருந்தது. இப்போது அன்றையதினம் நடந்த படுகொலைக் குப் பிறகு, அவருடைய அருவருப்புக்கும் பிரியமில்லாமைக்கும் காரணம் இன்னதாகத்தா னிருக்கவேண்டுமென்ற ஒரு சந்தேகம் என் மனசிலுண்டாகிறது. நான் அவர் விஷயத்தில் ஏதோ துரோ கம் செய்துவிட்டதுபோலவும், உன் தம்பி அவருக்குப் பிறக்கவில்லை யென்றும், அவர் எண்ணி அவனிடத்தில் இப்படிப் பகைமை பாரா ட்டி வருவதாக நினைக்கிறேன். நான் இறக்கு முன் அவரைக் கண்டு அவரிடத்தில் உண்மையை வெளியிடலாமென்று நினைத் தேன். அதுவும் பலிக்காமல் போய்விட்டது. நம்முடைய குழந்தை சுந்தரபாண்டியன் தம்முடைய பிள்ளையல்லவென்ற தப்பான எண் ணம் மாறாமலே இருந்து பெருகுமானால், அவர் அவனை என்னென்ன விதமான துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாக்குவாரோ தெரியவில்லை. அவர் தம்முடைய சமஸ்தானமும் சகலமான செல் வங்களும் இவனுக்கில்லாமல் போகும்படி செய்தாலும் செய்து

விடுவார்; இவனுடைய உயிருக்கே தீங்கு நினைத்தாலும் நினைப்பார். என்னுடைய உயிரோ முக்கால் பாகமும் போய்விட்டது. என்னுடைய அறிவு இருளடைந்துகொண்டிருக்கிறது; அடுத்த நிமிஷத்தில் நான் இந்த உலகைத் துறந்து விடுவேன். இனிமேல் நம்முடைய பையனுக்கு அக்காள் தாய் தகப்பன் ஆகிய எல்லாரும் நீ ஒருத்திதான். ஆகையால் நீ பிரமாண பூர்வமாக எனக்கு வாக்குறுதி செய்து கொடுக்கவேண்டும். இரவு பகல் ஓயாமல் எப்போதும் நீ எச்சரிப்பாக நடந்து, உன் தம்பியின் நன்மையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வரவேண்டும். உனக்கு எவ்விதமான அபாயமோ, கஷ்டமோ, நஷ்டமோ, சங்கடமோ நேருவதானாலும், அதையெல்லாம் நீ பொருட்படுத்தக்கூடாது. உன் தகப்பனார் நம் பையன்மேல் வைத்துள்ள பகைமையைத் தீர்த்துக்கொள்ள, அவனுக்கு ஏதேனும் தீங்கு செய்ய முயற்சித்தால், அது பலிக்காமல்' நீ தடுத்துவிடவேண்டும். இந்த சமஸ்தானமும், பட்டமும், நம்முடைய சகலமான ஆஸ்திகளும் அவனுக்கே சேரும்படியான முயற்சிகளை நீ செய்யவேண்டும். கடைசியான இன்னொரு விஷயமென்னவென்றால், என் தமயனுக்கு நேர்ந்த கதியையும், உன் தகப்பனார் செய்த பெருங் குற்றத்தையும் நீ எவரிடத்திலும் வெளியிடலாகாது. தெரிகிறதா? இவைகளின்படி நடப்பதாகப் பிரமாணம் செய்'' என்றார்கள். நான் அப்படியே நடந்துகொள்வதாக ஒப்புக்கொண்டு பிரமாணம் செய்தபின் அவர்களைப் பார்த்து ''உங்களுடைய பிரியப்படியே நான் நடந்துகொள்ளத் தடையில்லை. இருந்தாலும் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அப்படிச் செய்தாலென்ன? நம்முடைய தகப்பனார் எப்போதும் கதவை முடிக்கொண்டு அந்தப்புரத்துக்குள்ளேயே இருக்கப்போகிறதில்லை; எப்படியும் அவர் வெளியில் வரத்தான் போகிறார். நான் அவரைக் கண்டு அவரோடு பேசும்படியான சந்தர்ப்பம் ஏற்படத்தான் போகிறது. நீங்கள் எவ்விதத் தவறும் செய்யவில்லையென்பதை நான் அவரிடத்தில் என் தெரிவிக்கக் கூடாது? தோட்டத்தில் கொல்லப்பட்ட மனிதர் உங்களுடைய தமயனார் என்பதை அவரிடம் வெளியிட்டால், அதன்பிறகு, நம்முடைய சுந்தரபாண்டியனிடத்தில் அவருக்கிருக்கும் குரோதம் மாறிப்போகும். என்னிடத்தில் அவர் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறாரோ அவ்வளவு பிரியம் அவனிடத்திலும்

வைக்கலாம். அவனுக்கு ஏதாவது கெடுதல் உண்டாகுமோவென்று நாம் கொஞ்சமும் கவலைப்படவே வேண்டியதில்லை,'' என்றேன். உடனே நம்முடைய அம்மாள் என்னைப் பார்த்து "குழந்தாய்! நீ சொல்லுகிறபடி செய்வது உசிதமாகத் தோன்றவில்லை. தாம் அக்கிரமமான ஒரு கொலையை நடத்தி விட்டதாக உன்னுடைய தகப்பனார் அறிந்து கொள்வாரானால் அவர் தம்முடைய ஆயிசுகாலம் முடிய தீராவிசனத்துக்கும் மனோவேதனைக்கும் ஆளாகி மன நிம்மதியின்றி மகா துன்பகரமான ஜீவியம் நடத்தவேண்டி வரும். அப்படி ஆயிசு கால பரியந்தம் அவருடைய மனசைப் புண்படுத்தி நரகவேதனைக்காளாக்க எனக்கு இஷ்டமில்லை. அவர் அக்கிரமமான படுகொலை நடத்தினவரென்ற ரகசியம் உனக்குத் தெரிந்திருக்கிறதென்பதை அவர் அறிந்துகொண்டால், அவர் உனக்கு முன் தம்முடைய தவறை ஒப்புக்கொள்ளமாட்டார்; கொல்லப்பட்டது என்னுடைய அண்ணன் என்று நான் சொன்னது பொய்யான சங்கதியென்று சொல்லி உன்னை அதட்டி அனுப்பி விடுவார். அதன்பிறகு அவர் உன்மேல் பகைமையும் அருவருப்பும் கொண்டாலும் கொள்வார். ஆகையால் உண்மையை நீ அவரிடம் சொல்வதைவிட அதை வெளியிடாமலிருந்தே நீ நான் சொன்னபடி செய்வது நல்லது. அது மாத்திரமல்ல. நான் மேலே சொன்ன விஷயங்களை யெல்லாம் விட, நிரம்பவும் முக்கியமான விஷயம் ஒன்றிருக்கிறது. அதையும் நீ கவனித்துக் கொள்ளவேண்டும். எப்போதும் சமமான இடங்களில் கலியாணம் செய்யாமல், ஏற்றத் தாழ்வான இடங்களில் கலியாணம் நடப்பதனால் உண்டாகும் கெடுதல்களும் துயரங்களும் எப்படிப்பட்டவை என்பதை மெய்ப்பிக்க என்னுடைய சொந்த உதாரணமே நிதரிசனமானதாக இருக்கிறது. எனக்கு நேரிட்ட பொல்லாங்குகளுக்கும் துயரங்களுக்கும் அடிப்படையான காரணம் என்னவென்றால் இந்தக் காளிங்கராயன் கோட்டை சமஸ்தானாதிபதியானவர் மிகவும் கேவலமான ஒரு குடும்பத்தில் ஜனித்த பெண்ணான என்னைக் கட்டிக்கொண்டதே காரணமாகும். அதனால் எப்படிப்பட்ட மகாபயங்கரமான படுகொலை முதலிய சம்பவங்கள் நிகழ்ந்தனவென்பதைப் பார்த்தாயல்லவா! ஆகையால் நம்முடைய சுந்தரபாண்டியன் கலியாண விஷயத்திலும் நீ நிரம்பவும் எச்சரிப்பாக நடந்துகொள்ள வேண்டும். அவனுடைய அந்தஸ்துக்குக் கீழான

இடத்தில் அவன் கலியாணம் செய்துகொள்ளக் கூடாது. அவன் பெண்கொள்ள நினைக்கும் யாதாமொரு குடும்பத்தில் எவராகில் ஒருவர் துன்மார்க்கராகவாவது, மானபங்கமடைந்தவராகவாவது, இழிவான நடத்தையில் இறங்கியவராகவாவது இருந்தால் அந்தக் குடும்பத்தில்அவன் கலியாணம் செய்து கொள்வதற்கு நீ இடங்கொடாதே. யௌவனப் பிராயத்தில் மனிதர்கள் இந்த விஷயத்தில் தலைகால் தெரியாமல் தகாத இடத்திலெல்லாம் பெண்கொள்ளத் துணிவது மனித இயற்கையாக இருந்து வருவதால், உன் தம்பியும் அப்படிப் பட்ட தகாத காரியத்தில் இறங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது உன்னைச் சேர்ந்த பொறுப்பு. அவனுடைய இச்சைக்கு இடையூறாக நீ நின்று தடுப்பதால், அவன் அந்த சமயத்தில் கொஞ்சம் மன வருத்தமடைந்தாலும், அதைப்பற்றி நீ கவலைப்படாமல், அவனுடைய நிரந்தரமான நன்மைக்கு ஒத்த காரியம் எதுவோ, அதை நீ செய்துவை. அவனுக்கு வயசு முதிர்ச்சியடைந்த பிறகு, நீ நன்மை செய்தாயென்பதை அவனே உணர்ந்து கொள்வான். இந்த விஷயத்தையும் நீ உன் மனசில் எப்போதும் வைத்துக்கொண்டு அவன் விஷயத்தில் அதிக விழிப்பாக நடந்துகொள்'' என்று சொன்னார்கள். இவைகள்தான் அவர்களுடைய மரணாந்த காலத்து வார்த்தைகள். இவைகளை நிறைவேற்றி வைப்பதாக நான் பிரமாணம் செய்தேன். சிலமாத காலத்துக்குமுன் நீயும் குமுதவல்லியம்மாளும் தனியாக இருந்து கலியாண விஷயமாகப் பேசியதை நான் கேட்டுக்கொண்டிருந்தேனாகையால், இந்த விஷயத்தில் என் மனசில் பெருத்த கவலையும் சங்கடமும் கோபமும் உண்டாயின. குமுதவல்லியம்மாளைப் பிரித்துக் கொண்டுபோய் கண்காணாத எவ்விடத்திலாவது விடாதவரையில், நீ எப்படியும் அவளையே கட்டிக்கொள்வாயென்ற ஓர் எண்ணம் என் மனசில் எழுந்து வதைத்ததாகையால், நான் மாகாளியம்மாளிடம் போய்ப் பேசி, மெதுவாகத் தந்திரம் செய்து குமுதவல்லியம்மாளை அந்த மடத்துக்கு அனுப்பிவிட்டேன். அதன் பிறகு நானே தெய்வச்செயலாகஇந்தவூரைவிட்டுப்போய் பயங்கரமான ஒரு தீவில் இருக்க நேர்ந்தது. அங்கிருந்து திரும்பிவந்த காலத்தில், நான் இந்தக் குமுதவல்லியம்மாளுடைய தகப்பனார் ஏறிவந்த கப்பலில் வந்தேன். அப்போது சில விஷயங்களை நான் தெரிந்து கொண்

டேன். இவளுடைய தமயனர் நம்முடைய மதத்தை விட்டுத் துருக்க மதத்தில் சேர்ந்துகொண் டிருக்கிருரென்பதையும், அவர் குமுத வல்லியம்மாளே மரண தண்டனையிலிருந்து தப்பவைத்து உனக்கே கட்டிக்கொடுக்கப் போகிருரென்பதையும் அறிந்து கொண்டேன். அப்படிப்பட்ட குடும்பத்தில் நீ சம்பந்தம் செய்ய இடங்கொடுக்கக் கூடாதென்று நம்முடைய தாயார் கட்டளை இட்டிருந்தார்களாகை யால், எப்படியாவது முயன்று இந்தக் கலியாணம் நிறைவேருமல் தடுக்க வேண்டுமென்று நான் என்னுலேன்ற வரையில் பாடுபட் டேன். கடைசியில் என்னுடைய எண்ணம் நிறைவேருமலே போய் விட்டது. அதைப்பற்றி நான் இனி விசனப்படுவது ஒழுங்கல்ல. உனக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நான் இதுவரையில் இவ் வளவு பாடுபட்டேனே யொழிய, உன்னே அநாவசியமாக வதைத்து விசனத்துக்காளாக்க வேண்டுமென்ற எண்ணத்தை நான் கனவிலும் கொண்டவளல்ல. ஆகையால் தெய்வச்செயலாக நிறைவேறிப் போன இந்தக் கலியாணத்தைப்பற்றி நான் இனி குரோதம் பாராட்டு வேனென்று நீங்கள் நினைக்க வேண்டாம். உங்களிருவருக்கும் ஈசு வரன் முடிபோட்டிருக்கிருனென்பது நிச்சயமாகத் தெரிந்து போய் விட்டதாகையால், இனி இதைக் கொண்டு நீ சந்தோஷப்படத்தக்க படி நான் நடந்து கொள்வேனென்பதை நீ நிச்சயமாக எண்ணிக் கொள்ளலாம். நான் குமுதவல்லியம்மாளிடத்தில் இதற்கு முன் கொடுமையாக நடந்து கொண்டது போல இனியும் நடப்பேனென்று அவள் கொஞ்சமும் சந்தேகமே கொள்ள வேண்டியதில்லை. நீங்க ளிருவரும் ரதியும் மன்மதனும் போல சந்தோஷமா யிருந்து சகல மான செல்வங்களையும் சுயேச்சையாக அநுபவித்துக் கொண்டு ஆயிரங்காலம் வாழ ஈசுவரன் அநுக்கிரகிக்க வேண்டும். நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய விஷயம் இன்னம் ஒன்று மிகுதி யிருக்கிறது. அதாவது நான் செவிட்டூமைபோல நடந்த விஷயம். மனிதர் இயற்கைக்கு விரோதமாக ஊமைபோல நடப்பது மகா கடின மான காரியமானலும், அப்படிப்பட்ட துர்லபமான காரியத்தை நான் எதற்காகச் செய்து வந்தேனென்பது நான் சொல்லிவந்த வர லாற்றிலிருந்து உனக்கு ஒருவாறு விளங்கி இருக்கலாம். நம்முடைய தாயாருடைய பரிதாபகரமான வார்த்தைகளைக்கேட்டு, அவர்களு

ளுடைய துக்ககரமான முடிவைக் கண்ட நான் பைத்தியங் கொண்டவள்போல மாறி மனநோய் கொண்டு பல மாத காலம் வரையில் படுத்த படுக்கையாக இருந்துவிட்டேன். நம்முடைய தாயார் இறக்கும்போது இட்ட கட்டளையை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்ற ஒரு கொதிப்பும் ஆவேசமும் என் மனதில் சதா காலமும் மும்முரமாக இருந்து தூண்டிக்கொண்டே இருந்தன. நானோ உலக அநுபவம் இல்லாத அபலைப்பெண். அம்மாள் கோரிய பெரிய காரியங்களை நான் நடத்திவைப்ப தெப்படியென்று நினைத்து நினைத்து சதாகாலமும் அதே கவலையி லாழ்ந்து ஆயிரக்கணக்கான யோசனைகள் செய்தேன். நம்முடைய தகப்பனர் உன்னிடத்தில் கொண்டிருந்த பகைமையில் உன்னைக் கொன்று விடுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்வாரோ என்ற எண்ணமே முக்கியமாக என் மனசிலிருந்து வதைத்துக் கொண்டிருந்தது. ஆகையால், அவர் என்னென்ன செய்கிறாரென்பதையும், எங்கெங்கே போகிறாரென்பதையும், யாராரிடத்தில் என்னென்ன பேசுகிறாரென்பதையும் கவனித்து அறிந்துகொள்வது அத்தியாவசியமாகத் தோன்றியது. என்மேல் பிறர் சந்தேகப்படாதபடி நான் எல்லா இடங்களிலும் இருந்து மற்றவருடைய செய்கைகளையும், சம்பாஷணைகளையும் கவனிப்பதற்கு அநுகூலமான வழி எதுவென்று யோசித்துப் பார்த்தேன். நம் தகப்பனர் செய்யும் காரியங்களைத் தடுப்பதற்கு நான் வழிதேடுகிறேனென்பது அவருக்குத் தெரிந்தால், அவர் உன்னோடு என்னையும் தண்டிக்க முயன்றாலும் முயலுவாரென்ற அச்சம் தோன்றியது; அம்மாதிரி நான் எண்ணமிட்ட காலத்தில், இந்த யோசனை சடேரென்று என் மனசில் உதித்தது. முதலில், இது என்னால் சாதிக்கக்கூடாத காரியமாகத் தோன்றியது. இந்த விஷயத்தில் நான் எவ்வெவ்விதமான பாடுகள் படவேண்டுமென்பதை நினைக்க நினைக்க, மிகுந்த மலைப்பும், திகைப்பும் உண்டாயின. இப்படிப்பட்ட அருமையான காரியத்தை நான் எப்படி சாதிக்கப்போகிறேனென்ற பெருத்த பீதியுண்டாயிற்று. இது என்னால் செய்ய சாத்தியமற்றது என்ற நினைவோடு நான் இதை விலக்கி வேறே வழி ஏதாவது இருக்கிறதாவென்று பல நாட்கள் வரையில் சிந்தித்துப் பார்த்தேன். இந்த ஒரு தந்திரந்தான் சர்வசிலாக்கியமாகவும், மற்ற எல்லா

வற்றிலும் சிரேஷ்டமாகவும் தோன்றியது. ஆகையால் கடைசியில் நான் செவிட்டூமையாக நடிப்பதுதான் சரியான முடிவென்று தீர்மானித்துக் கொண்டேன்; நான் அப்படி நடிப்பதால் நான் எவ்விதமான தியாகங்களுக்கெல்லாம் ஆளாகவேண்டுமென்பது அப்போதே என் மனசுக்கு நன்ருகப்பட்டது. அப்படி இருந்தாலும் நான் பின்வாங்கவில்லை. என்னுடைய எப்படிப்பட்ட சொந்த நன்மைகளையும், சுகங்களையும், இன்பங்களையும் இழந்தாகிலும் உன்னைப் பாதுகாக்க வேண்டுமென்ற ஒருவித வீராவேசத்தினல் தூண்டப்பட்டிருந்தேனுகையால் நான் அப்படியே நடிக்க ஆரம்பித்து விட்டேன். நான் அப்படி நடிப்பதில் இன்னொரு மகா முக்கியமான அநுகூலமும் ஏற்படுமென்பது என்னுடைய எண்ணம். நம்முடைய தகப்பனுர் நான்மாத்திரம் அவருடைய சொந்த மகளென்றும் நீ அவருக்குப் பிறக்காதவனென்றும் நினைத்திருப்பதால், அவர் கடைசிக்காலத்தில் இந்த சமஸ்தானத்தையும் சொத்துகளையும் உனக்குக் கொடுக்காமல் எனக்கே கொடுத்து விட நினைத்தாலும் நினைப்பாரென்ற ஒரு பயமுண்டானதாகையால், நான் செவிடாகவும் ஊமையாகவும் நடித்தால், இவ்வளவு பெரிய சமஸ்தானத்தை என் வசம் ஒப்புவிக்க அஞ்சுவாரென்றும், உன்னை அவர் உள்ளாக எவ்வளவுதான் வெறுத்தாலும், என்னுடைய பரிதாபகரமான நிலைமையை உத்தேசித்து அவர் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், எல்லாவற்றையும் உன்பேரிலேயே எழுதி வைப்பாரென்ற நினைவும் தோன்றியது. இப்படிப்பட்ட பல உத்தேசங்களோடு நான் செவிட்டூமையாக மாறி நிரம்பவும் திறமையோடு நடித்து வந்தேன். இருந்தாலும், அப்படி நடிப்பது ஒவ்வொரு சமயத்தில் எவ்வளவு தூர்லபமாக இருந்தது தெரியுமா? மனிதர் எனக்கெதிரிலேயே என்னைப்பற்றி இழிவாகவும் புரளியாகவும் பேசுவதை நான் அடியோடு கேட்காதவள் போல இருப்பதென்ருல், அது சாதாரணமாக எல்லோராலும் செய்யக்கூடிய காரியமா? எங்கேயாவது ஒரு விநோதமான சம்பவமோ, அல்லது, கொலையோ, மற்ற விபரீதமான காரியமோ நடந்து விட்டதாக எனக்குப் பக்கத்திலிருக்கும் மனிதர் பேசிக்கொள்வதாக வைத்துக் கொள்வோம். அல்லது, நமக்கு அருமையான மனிதர் யாராவது

இறந்து விட்டதாகவோ, அல்லது, அப்படிப் பட்டவர்களுக்கு ஏதாவது அபாயம் நேர்ந்து விட்டதாகவோ யாராவது பேசிக்கொண்டதாக வைத்துக் கொள்வோம். அப்படிப்பட்ட சங்கதிகளைக் கேட்டும், முகத்தில் எவ்வித மாறுபாடும் காட்டாமல் பைத்தியக்காரி போல உட்கார்ந்திருப்ப தென்றால் இது யாராலாகிலும் நீடித்துச் செய்யக் கூடிய காரியமா? உன்னுடைய நன்மை யொன்றை உத்தேசித்து நான் இவ்வளவு நீண்ட காலமாக இப்படிச் செவிட்டூமையாக நடிக்க எவ்வளவு பாடுபட்டிருப்பேன் தெரியுமா? அடாடா! நான் அநுபவித்த துன்பங்கள் எத்தனை யென்பது தெய்வத்துக்குத் தான் தெரிய வேண்டும்'' என்றாள்.

தனது அக்காளினது மகா உருக்கமான சொற்களைக் கேட்ட சுந்தரபாண்டிய தேவனது மனம் கட்டிலடங்காமல் இளகி உருகிப் பாகாய் ஓடியது. கண்களில் ஆநந்தக் கண்ணீர் பொங்கி தாரை தாரையாக வழிகிறது; அவன் தழுதழுத்த குரலில் பேசத்தொடங்கி "அக்கா! எனக்குத் தெரியாமல் எத்தனை விஷயங்கள் நடந்திருக்கின்றன. என் பொருட்டு நீ எப்படிப்பட்ட மகா அசாத்தியமானகாரியத்தையெல்லாம் சாதித்திருக்கிறாய்! அடாடா! வேறு எப்படிப் பட்டவர்களானாலும் இந்த அரிய தந்திரத்தை ஒரு நிமிஷ நேரமாவது செய்கையில் நடத்தி யிருக்க முடியுமா? ஆகா! உன்னை தெய்வமென்று மதிக்க வேண்டுமே யன்றி, மனித வகுப்பில் சேர்ப்பது கொஞ்சமும் தகாது'' என்று கூறித் தனது நன்றியறிதலின் பெருக்கையும் அளவற்ற வாத்சல்யத்தையும் வெளியிட்டான்.

உடனே கோமளவல்லி நாச்சியார் "ஆமப்பா! என்ன செய்கிறது. நம்முடைய தாயாருக்கு நேர்ந்த அபாண்டமான பழியைப் போல உலகில் யாருக்காவது நேர்ந்திருக்குமா! நான் மாத்திரம் இம்மாதிரி தந்திரம் செய்யாவிட்டால் நம்முடைய தகப்பனார் உன்னை எப்படிப்பட்ட நிலைமைக்குக் கொண்டுவந்திருப்பாரென்பது அவரால் எழுதப்பட்ட மரணாந்த சாசனத்திலிருந்தே தெரியவில்லையா? ஆனால் நான் ஊமையாக நடித்த ஒவ்வொரு விநாடியும் ஒவ்வொரு யுகமாக வளர்ந்து நரகவேதனையைக் கொடுத்துவந்தது. நான் ஊமையாக மாறிப் பலவருஷங்களுக்குப் பிறகு நம்முடைய தகப்பனார் க்ஷய ரோகத்துக்கு இரையாகி இறக்கும் நிலைமைக்கு வந்துவிட்டார்.

அந்த சமயத்தில் என் மனம் அவர் இறப்பதைப்பற்றி ஒருவாறு துயரமடைந்ததானாலும், அவர்போன பிறகு என் ஊமைத்தனமும் விலகிவிடுமென்ற பேராவலும்]ஆநந்தமும்।எழுந்துஎன் மனசைப் பத றச்செய்து கொண்டிருந்தன.

இந்த அறைக்குள் அவர் இப்படிப்பட்ட ரகசியங்களை மறைத்து வைத்திருக்கிறாரென்பது எனக்கு அதுவரையில் தெரியாது. அவர் இறக்குமுன் கடைசியாக நாமிருவரும் அவருக்குப் பக்கத்திலிருந்த போது, நான் ஊமையென்று நினைத்து அவர் உன்னிடம் இந்த அறையைப்பற்றிய ரகசியத்தைச் சொன்னாரல்லவா. முந்திய ரகசியங்களை யெல்லாம் நான் அறிந்தவளாதலால், இந்தப் பெட்டிக்குள் என்ன விதமான ரகசியமிருக்கிற தென்பதைப் பார்த்து அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை என்னைத் தூண்டியது. இந்த ரகசியம் எனக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்று நம்முடைய தகப்பனார் உனக்குச் சொன்னது என்னுடைய ஆவலை முன்னிலும் அதிகமாகப் பெருக்கியது. ஆகையால், நான் அன்றைய தினம் நடு இரவில் ரகசியமாக உன்னுடைய சயன அறைக்குள் நுழைந்து, நீ அணிந்திருந்த சட்டைப் பைக்குள்ளிருந்த திறவுகோலை உனக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டு வந்து இந்த ரகசிய அறையைத் திறந்து உள்ளே புகுந்து பெட்டிக்குள்ளிருந்த எலும்புக் கூண்டுகளையும், சுவடியையும் கண்டு அளவற்ற பிரமிப்பும், திகைப்பும், திகிலுமடைந்தேன்; இந்தச் சுவடியை எடுத்துக்கொண்டு என்னுடைய அந்தப்புரத்துக்குப் போய்ப் படித்துவிட்டு மறுபடியும் கொண்டுவந்து வைத்துக் கதவைப் பூட்டித் திறவுகோலை உன்னுடைய சட்டைப்பைக்குள் வைத்துவிட்டேன். அப்போது இந்தச் சுவடியிலிருந்து ஓர் எடு தவறி என் அந்தப்புரத்தில் விழுந்து விட்டதை நான் கவனிக்கவில்லை. மறுநாள் காலையில் குமுதவல்லியம்மாள் அதைக் கண்டெடுத்து என்னிடம் கொடுத்தாள். அவள் அதில் சில வரிகள் படித்ததாகவும் சொன்னாள். அந்த ஏட்டை நான் வாங்கிவைத்திருந்து மறுநாளிரவில் முதல்நாள் செய்ததுபோலத் திறவுகோலை எடுத்துவந்து இதன் கதவைத்திறந்து அந்த ஏட்டை சுவடிக்குள் அதனிடத்தில் வைத்துவிட்டு வெளியில் போய்ப் பூட்டி அரக்கு முத்திரைகள் வைத்து மறுபடியும் திறவு

கோலே உன்னிடம் சேர்த்துவிட்டேன். அதன் பிறகு இந்த அறையின் கதவு திறக்கப்படவே இல்லே. திறவுகோலும் உன்னிடத்திலேயே இருந்துவந்தது. நான் நெடுங்காலமாக ஊமைபோல நடித்து இவ்வளவுதூரம் பாடுபட்டதில் முக்கியமாக ஒரு விஷயம் பலித்தது. நம் தகப்பனர் உயிரோடிருந்து இறந்துபோகும் வரையில், அவர் உன் விஷயத்தில் எவ்வித சதியாலோசனேயும் செய்யாமலும் உனக்கு எவ்விதத் தீங்குமிழைக்காமலு மிருக்கும்படி நான் அவ்வளவு எச்சரிப்பாகவும், அவருக்கு இடங்கொடுக்காமலும் பார்த்து வந்தேன். என்னுடைய ஊமைத்தனம் நீங்கிவிட்டதென்பது இனி எல்லோருக்கும் தெரிந்து போகுமாகையால், நம்முடைய போஷகர்களான சுப்பாத்தேவரும் மற்றவர்களும் இந்த சமஸ்தானம் முதலிய சகலமான பொருள்களேயும் நம்முடைய தகப்பனரின் மரணசாசனப்படி என்னிடம் ஒப்புவித்து விடுவார்கள். அதன் பிறகு அந்த போஷகர்களுக்கும் இந்த சொத்துகளுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. நான் எல்லாவற்றையும் உனக்கே கொடுத்து விடுகிறேன். நான் இவைகளே யாருக்கும் கொடுக்கக்கூடாதென்று நம் தகப்பனர் எழுதி வைத்திருந்தாலும், அது அநியாயமான ஏற்பாடாகையால், அதன்படி நடக்க எனக்கு இஷ்டமுமில்லே; பொருள்களே எனக்குக் கொடுத்த பிறகு என்னே அப்படிக் கட்டுப்படுத்த அவருக்கு அதிகாரமுமில்லே. இந்த விஷயங்களே நாளேயதினமே ஒழுங்குப் படுத்திவிட நான் உத்தேசித்து விட்டேன்'' என்ருள்.

அவள் அந்தரங்கமான வாஞ்சையோடும், உருக்கமாகவும் பேசிய சொற்களேக் கேட்ட சுந்தரபாண்டிய தேவன் மாறிமாறி இன்பமும் துன்பமும் அடைந்து விம்மிவிம்மி யழுது பூரிப்படைந்தது தான் என்ன பேசுவதென்பதை அறியாமல் தடுமாறி நின்ருன். கோமளவல்லி நாச்சியாரது உண்மையான நற்குணங்களேயும் நற்செய்கைகளே தீரச்செயல்களேயும் உணர்ந்த குமுதவல்லியம்மாள் அவளிடத்தில் மிகுந்த மதிப்பும் அன்பும் கொண்டவளாய் அவளால் இனி தனக்கு எவ்வித தீங்கும் நேராதென்ற ஒருவித மனேதிடமடைந்தவளாய் அவளிடம் நெருங்கி அடக்கவொடுக்கமாக நின்ருள்.

உடனே சுந்தரபாண்டிய தேவன் தனது சகோதரியை நோக்கி ''அக்கா! தனது தம்பியிடத்தில், பெற்ற தாயைவிட அதிகமான



[library stamp]

வாத்சல்யம் வைத்து அவனைக் காப்பாற்றும் பொருட்டு எப்படிப்பட்ட பெருத்த அபாயத்தையும் லட்சியம் செய்யாமல் எத்தனையோ துன்பங்களை அநுபவிக்கக் கூடிய இப்படிப்பட்ட மகா அருமையான அக்காள் இந்த உலகத்தில் வேறே எவனுக்கும் வாய்த்திருக்க மாட்டாளென்று நான் துணிந்து சொல்லுவேன்; நீ என்னுடைய நன்மையைத் தவிர வேறே எதையும் நாடாமல், எனக்காகவே உயிர் சுமந்துவந்த மகா பேருபகாரியாக இருக்க, அதை நான் கொஞ்சமும் உணராமல் இருந்ததன்றி, கடைசியில் உனக்குத் தெரியாமலும் நீ இல்லாமலும், என்னுடைய கலியாணம் நடப்பதற்கு நான் ஒப்புக்கொண்ட விஷயம் என் மனதை ஆயிரம் வாள்கள் கொண்டு அறுப்பதுபோல அறுக்கிறது. அந்த விஷயத்தில் மாத்திரம் நீ என் பிழையைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்'' என்று கூறியவண்ணம் தனது அக்காளினது பாதத்தடியில் விழுந்து வணங்க, அப்போது பக்கத்தில் நின்ற குமுதவல்லி யம்மாளும் கோமளவல்லி நாச்சியாரது காலில் விழுந்து கும்பிட்டு "அம்மா! தாயே! எவ்வளவோ உத்தமமான குணங்களை யெல்லாம் மனசிற்குள் மறைத்து வைத்துக்கொண்டு வெளிக்குமாத்திரம் முன்கோபமும் கொடுமையும் நிறைந்தவர்கள் போல நடித்து, எவராலும் சாதிக்க முடியாத எப்படிப்பட்ட அரிய காரியங்களை யெல்லாம் நீங்கள் சாதித்திருக்கிறீர்கள்; எனக்கு இப்போது உயிரோடிருக்கும் மாமியார் நீங்கள்தான்; உங்கள் தம்பியாரும் நானும் உங்கள் விஷயத்தில் எவ்வித தவறுசெய்திருந்தாலும், அதை க்ஷமித்து எங்களை ஆசீர்வதிக்கவேண்டும்'' என்று நிரம்பவும் உருக்கமாகவும் வணக்கமாகவும் கூறி வேண்டிக்கொண்டாள்.

அவ்வாறு அவர்களிருவரும் வணங்கிய காட்சி நிரம்பவும் பரிதாபகரமான காட்சியாக இருந்ததாகையால் கோமளவல்லி நாச்சியார் உருகிப்போய் ஆநந்தக் கண்ணீர் விடுத்து, அவர்களிருவரையும் தூக்கி எடுத்து நிற்கச்செய்து "அப்பா! தம்பீ! அம்மா! குமுதவல்லீ! உங்கள் இருவர் பேரிலும் இனி எனக்கு எள்ளளவும் அருவருப்பாவது வருத்தமாவது கிடையாது. மனிதருடைய முயற்சிக்கு மீறி, அவர்களால் தடுக்கமுடியாதபடி நேரும் காரியமெல்லாம் தெய்வத்தினால் ஆகும் காரியமாகையால் அதை

நாம் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். தம்பீ! இந்தக் கலியாணத்தை நான் இல்லாமல் நீ நடத்தியது உன்மேல் குற்றமென்று சொல்வதைவிட, அது நான் செய்த ஒரு குற்றத்துக்கு எனக்கு தண்டனையாக ஏற்பட்ட காரியமென்று சொல்லுவது பொருத்தமான சொல்லாகும். எப்படி யென்றால், நான் முன்னே சொன்னபடி ஒரு பயங்கரமான தீவிலிருந்த காலத்தில் என்னால் காதலிக்கப்பட்ட ஒரு மனிதரும் தற்செயலாக அங்கே வந்து சேர்ந்தார். நாங்கள் இருவரும் அவ்விடத்திலே நெடுங்காலம் இருக்கும்படி நேர்ந்ததைக் கருதி, இருவரும் ஒருவரை யொருவர் கலியாணம் செய்து கொண்டோம். மந்திரமில்லாமல், சடங்குகளில்லாமல், தாலிகட்டாமல், ஜனங்களில்லாமல், நாங்களிருவரும் புருஷன் பெண்சாதி ஆகிவிட்டோம். அப்போது என் தம்பியில்லாமல் நான் கலியாணம் செய்து கொண்ட குற்றத்துக்கு எனக்குத் தண்டனை செய்துவைக்க வேண்டுமென்று கடவுள் இந்தக் கலியாணத்தை நானில்லாமல் நடத்தி வைத்திருக்கிறார். ஆகையால், இதைப்பற்றி நீங்கள் இனி கவலைப்பட வேண்டியதில்லை. என்னைக் கட்டிக்கொண்ட புருஷர் யாரென்பதை அறிந்துகொள்ள என் தம்பியின் மனசில் ஆவல் அதிகமாக உண்டாகலாம். அவர் இதோ என்னுடைய அந்தப்புரத்திலேதான் இருக்கிறார். இப்போதே நாம் போய் அவரைப் பார்க்கலாம்; இதற்கு முன் தம்பி அவரை எத்தனையோ தடவை பார்த்து அவரோடு பழகி இருக்கிறான். இருந்தாலும், அவர் ஆறுமாச காலமாக அந்தத் தீவிலிருந்து பழங்களையே ஆகாரமாகச் சாப்பிட்டதால், அடியோடு உருமாறிப் போய்விட்டார். இப்போது அவர் இன்னாரென்ற அடையாளம் தெரிந்து கொள்வதுகூடக் கஷ்டமாக இருக்கும்,'' என்றாள்.

அதைக் கேட்ட சுந்தரபாண்டிய தேவன் மகிழ்ச்சியாகப் புன்னகை செய்து "அக்கா! அந்த மனிதர் இன்னார் என்பது எனக்குத் தெரியும். அவருடைய பெயர் மாதவ பாண்டியர். அவருக்கும் உனக்கும் கலியாணம் ஆனதுகூட எனக்குத் தெரியும்'' என்றான். கோமளவல்லி நாச்சியார் திடுக்கிட்டுத் திகைத்து ''என்ன ஆச்சரியம்! அவர்தான் என்னுடைய புருஷரென்பதை இதற்கு முன்

அவருக்கும் எனக்குமிருந்த அன்னியோன்னியமான சிநேகத்தி லிருந்து நீ ஒருவேளை யூகித்துக் கொண்டிருக்கலாம். அவருக்கும் எனக்கும் நச்சுத்தீவில் கலியாணம் ஆன விஷயம் உனக்கெப்படித் தெரிந்தது? நீ திருடருடைய குகையிலிருந்து இன்றைக்கோ நேற் றைக்கோதானே வெளியில் வந்திருக்கிறாய்,'' என்றாள். சுந்தர பாண்டிய தேவன் "ஆம் அக்கா! நான் இது வரையில் திருடரு டைய குகைக்குள்ளேதான் அடைபட்டிருந்தேன். திருடர்கள் நேற்றைய தினம் விடியற்காலையிலேதான் என்னைக் குகையி லிருந்து வெளியில் அழைத்துக் கொண்டுவந்தார்கள். அப்படி இருந் தாலும், எனக்கு உன்னுடைய சங்கதி முழுதும் உடனே தெரிந்து போய்விட்டது. முதலில் நம்முடைய அரண்மனையில் கொள்ளைக் காரர்கள் வந்த காலத்தில் நீ மாத்திரம் தனியாகப் போய் மாயாண் டித் தேவனுடன் பேசி மாதவ பாண்டியரை சிறைச்சாலையிலிருந்து தப்புவிக்கும்படி அவனிடம் ஏற்பாடு செய்து கொண்டது, அதன் பிறகு நீ தனியாக அங்காளம்மன் கோவிலண்டை போய் அவனைச் சந்தித்தது, அவன் உன்னை பலாத்காரமாகக் குதிரையில் வைத்துக் கொண்டு போனது, நீ தந்திரமாக அவனிடமிருந்து தப்பித்து நச்சுத்தீவுக்குப் போனது முதலிய சகலமான விவரங்களும் எனக் குத் தெரியும். அவ்விடத்தில் நீயும் மாதவ பாண்டியரும் சந்தித்துக் கலியாணம் செய்து கொண்டு அங்கேயே இருந்தது, பிறகு நீ பாக்ஷாவின் கப்பலில் ஏறிவந்தது, தூத்துக்குடியிலிருந்து நீ இந்த ஊருக்கு வந்தபிறகு நேற்றைக்கு முந்திய நாளிரவு முருகனை வர வழைத்து அவனிடத்தில் ரகசியமாகப் பேசிக்கொண் டிருந்தது, நேற்று காலையில் என்னைக் கொண்டுவந்து அரண்மனையில் சேர்க்கும் படியும், பள்ளித் தெருவிலுள்ள வீடுகளுக்கு நெருப்பு வைத்து விட்டு பாக்ஷாவை அபகரித்துச் சிறைப்படுத்தும்படியும், அவர் எழுதியதுபோல ஓர் உத்தரவு தயாரித்து கவர்னருக்கு அனுப்பி குமுதவல்லி முதலியோருக்கு மரணதண்டனை நிறைவேற்றி விட வேண்டுமென்றும் நீ அவனிடம் ஒப்பந்தம் செய்து கொண்டது முதலிய சகலமான விஷயங்களும் எனக்குத் தெரியும்'' என்றான். அவனது சொற்களைக் கேட்ட கோமளவல்லி நாச்சியார் மிகுந்த திகிலும் பிரமிப்புமடைந்து, தான் என்ன பேசுவதென்பதை அறி

யாமல் சிறிது நேரம் தத்தளித்த பிறகு தனது தம்பியை நோக்கி "என்ன ஆச்சரியம் இது! ரகசியமாக நடந்த இந்த விஷயமெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது? ஒருவேளை அந்த முருகன் சொல்லி இருப்பானோ? அவனுக்கு அவளிடம் நான் பேசிய விஷயங்கள் மாத்திரந்தானே தெரியும். நச்சுத்தீவில் நடந்த விஷயமெல்லாம் அவனுக்குத் தெரியாதே!'' என்றாள். உடனே சுந்தர பாண்டிய தேவன் நயமாகவும் அன்பாகவும் பேசத்தொடங்கி ''அக்கா! நான் முருகனைப் பார்க்கவே இல்லை. இந்த விவரத்தையெல்லாம் எனக்குச் சொன்னது யாரென்பதை நான் உன்னிடம் வெளியிடாமலிருக்கப் போகிறதில்லை. இதோ சொல்லி விடுகிறேன். ஆனால் இதில் ஒரு விஷயந்தான் என் மனசில் பெருத்த சந்தோஷத்தை உண்டாக்குகிறது. பாகூஷாவின் விஷயத்திலும் குமுதவல்லி முதலியோர் விஷயத்திலும் நீ செய்ய இருந்த பெருத்த பாவச் செயலைத் தடுத்து உன்னை நல்வழிப் படுத்துவதற்கு தெய்வமே நேரில் வந்து உதவி செய்ததென்றால், அப்படிப்பட்ட பெருத்த அதிர்ஷ்டம் வேறே யாருக்காவது வந்து வாய்க்குமா!'' என்றான்.

அவன் சொன்னதைக் கேட்ட கோமளவல்லி நாச்சியார் முன்னிலும் அதிகம் குழம்பித் திகைத்து "என்ன இது! நீ சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லையே! எல்லா விவரத்தையும் நன்றாகச் சொல். நான் செய்ய நினைத்த பெருத்த பாவச் செய்கை தடைப்பட்டுப் போனதென்பது உண்மைதான். ஆனால், எந்த தெய்வம் அதைத் தடுத்தது? இந்த விவரங்களெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தன? நன்றாக விவரித்துச் சொல்.'' என்றாள்.

சுந்தரபாண்டிய தேவன் "நீ நச்சுத்தீவை விட்டு வந்தபின் மாதவ பாண்டியர் உன்னை விட்டுப் பிரிந்ததைப்பற்றி விசனித்துத் தற்கொலை செய்து கொள்ளப் போனாராம். அப்போது அவருடைய குலதெய்வமான காட்டேறி பிரசன்னமாகி, அப்படிச் செய்வதிலிருந்து அவரைத் தடுத்துக் காப்பாற்றியதாம். அது மாத்திரமல்ல. அவருக்கு ஏற்பட்ட ஆயிசுகாலத்தில் இன்னும் ஆறுமாச காலந்தான் மிச்சமிருக்கிறதாம். அதன் முடிவில் அவருடைய உயிர் போய்விடுமாம். பொதிய மலையினுச்சியில் ஓர் அரசமாத்தினடியில்

நித்தியாநந்த சாகர யோகீசுவரரென்று பெயர்கொண்ட ஒரு தபசி யோகாப்பியாசம் செய்து கொண்டிருக்கிருராம். அவருக்கு ஏதோ ஓர் இடையூறு நேரப்போகிறதாம். இவர் உடனே அங்கே போய் அதைத்தடுத்து அவருடைய அருளுக்குப் பாத்திரரானல், இவ ருடைய ஆயுள் வளருவதற்கு அவர் வழி காட்டுவாரென்றும், ஆகையால் உடனே அங்கே போகவேண்டுமென்றும் சொல்லி, இவ ருடைய குலதெய்வம் இவரை அனுப்பியதாம். அதுமாத்திரமல்ல. நீ இதற்கு முன் ஏதோ ஒரு பெரிய குற்றம் செய்திருக்கிருயாம். இப்போது மறுபடியும் நீ இன்னொரு பெரிய பாவச்செயலை நடத்தப் போகிருயென்று அந்த தெய்வம் அவரிடம் சொன்னதன்றி அவர் இங்கே உடனே வந்து உனக்குத் தெரியாமல் மறைந்திருந்து நீ செய்யும் அக்கிரமச் செய்கை நிறைவேருமல் தடுத்து உன்னையும் அழைத்துக் கொண்டு உடனே பொதிய மலைக்குப் போகும்படி கட்டளையிட்டதாம். நீயும் கூடப்போனல், உன்னுடைய பாவ மெல்லாம் தீர்ந்து போவதன்றி அவருடைய ஆயிசு வளருவதற் காக அவர் செய்யும் தொண்டுக்கு நீ கூட இருப்பதும் ஒரு பக்க பலமாக இருக்குமென்று அந்தத் தெய்வம் அபிப்பிராயப்பட்டு இப்படிக் கட்டளை இட்டதாம். அதுபோலவே மாதவ பாண்டியர் சில தினங்களுக்கு முன் இந்த ஊருக்கு வந்து யாருக்கும் தெரியா மல் நம்முடைய அரண்மனைக்குள் வந்து ஒளிந்து கொண்டிருந்தா ராம். நேற்றைக்கு முன்தினம் ராத்திரி, நீ இருந்த இடங்களுக்குப் பக்கத்தில் ஒளிந்திருந்து நீ என்னென்ன செய்தாயென்பதை யெல் லாம் கவனித்துக் கொண்டே இருந்தாராம். நீ இந்த ரகசிய அறை யின் வாசற்கதவு சரியாக இருக்கிறதாவென்று பார்த்தாயாம். அப் போது அவரும் இருளில் மறைந்து வந்தாராம். நீ அவரைப் பார்த்து பயந்து விட்டாயாம். அவர் விரைவாக அப்பால் போய் விட்டாராம், அதன்பிறகு அவர் உன்னுடைய அந்தப்புர ஜன்ன லுக்கு வெளியில் நின்று கவனித்துக் கொண்டிருந்தாராம். அவரை நீ பார்த்து விட்டாயென்பதை அறிந்து நிரம்பவும் வேகமாக அப் பால் போய்விட்டாராம். நீ முருகனை அழைத்துவரும்படி, வேலைக் காரனை அனுப்பியதையும், அவன் திரும்பி வந்து சொன்ன சங்க தியையும் அவர் கவனித்துக்கொண்டே இருந்தாராம். கடைசியாக

நீயும் முருகனும் தோட்டத்துக்கு வெளியில் பேசிக்கொண்டிருந்த போது, அவர் உங்களுக்கு முன்னாகவே அங்கே வந்திருந்து, நீங்களிருவரும் பேசிக்கொண்டிருந்த விவரங்களையெல்லாம் நன்றாக அறிந்துகொண்டாராம். நீ செய்யப்போகும்பாவச்செய்கை இன்னதென்பதை அவர் அப்போதுதான் தெரிந்துகொண்டாராம். காட்டேறி சொன்னது நிஜமென்று அவர் நிச்சயித்துக் கொண்டு, உடனே புறப்பட்டு இந்த ஊரில் அவருக்குத் தெரிந்த ஒரு வண்டிக்காரனிடம் போய், வாடகைக்கு ஒரு குதிரை வண்டி யமர்த்திக்கொண்டு உடனே பாக்ஷாவிடம் போய், கோதண்டராம பாண்டியரைக் கண்டு, அவரிடம் இவர் எவ்வளவு தூரம் விஷயங்களை வெளியிடலாமோ அவ்வளவு தூரம் வெளியிட்டாராம். அந்தக் கோதண்டராம பாண்டியருக்கு இந்தத் திருடருடைய குகையின் வாசலிலிருந்து வரும் வழி கொஞ்சம் தெரியுமாம். ஆகையால், அவர், ஏராளமான போர் வீரர்களுடன் புறப்பட்டு வந்து வழியில் காத்திருந்தார். திருடர்கள் விடியற்காலையில் என்னை அழைத்துக்கொண்டுவந்தபோது, கோதண்டராம பாண்டியரும் அவருடைய போர்வீரர்களும் வந்து எதிர்த்துத் திருடர்களை யெல்லாம் பிடித்துக் கைதியாக்கி குதிரைகளின்மேல் வைத்துக் கட்டி, என்னையும் விடுவித்துக்கொண்டு, பாக்ஷா இருந்த இடத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அதன்பிறகு திருடர்களெல்லோரும் இந்த ஊர்ச் சிறைச்சாலைக்குக் கொண்டு வந்து அடைக்கப்பட்டிருக்கிறார்கள். நேற்றைக்கு முந்திய நாட்பகலில் பாக்ஷா முதலியோர் புறப்பட்டு சாயுங்காலம் இந்த ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் என்னையும், மறைவான ஒரு பெட்டி வண்டிக்குள் வைத்துத் தங்களோடு அழைத்து வந்தார்கள். நேற்றைக்கு முந்திய நாள் இரவில் தம்மிடம் என்னை அழைத்து வரும்படிபாக்ஷா உத்தரவு பிறப்பித்தார். நான் அவருடைய கூடாரத்துக்குள் போனபோது, இந்தக் குமுதவல்லியம்மாளும், இவளுடைய அத்தையும் அவ்விடத்திலிருக்கக் கண்டேன்; இந்தக் குமுதவல்லியின் தமயனாரான கருணாகர பாண்டியர் முகம்மதிய மதத்தில் சேர்ந்து திப்பு சுல்தானுடைய பெண்ணைக் கட்டிக்கொண்டு முதல் மந்திரி வேலை பார்த்து வருவதாகவும், அவர்தான் குமுதவல்லியம்மாள் முதலியோருடைய உயிரைக் காப்பாற்றியதாகவும் நான் அப்போதுதான் கேள்வியுற்றேன்

அதன் பிறகு நான் அவ்விடத்தை விட்டுத் தனியாகப் போன சமயத்தில், மாதவ பாண்டியர் என்னைக் கண்டு தம்முடைய விருத்தாந்தங்களையும், உன்னுடைய விருத்தாந்தங்களையும் கடைசி வரையில் தெரிவித்தார். அவர் சமயத்தில் செய்த உதவியால், எவ்வளவு நன்மைகள் ஏற்பட்டன தெரியுமா? பள்ளித் தெருவிலுள்ள வீடுகள் நெருப்பு வைக்கப்படாமல் காப்பாற்றப்பட்டன. அதிலிருந்த ஜனங்கள் இறக்காமல் உயிர் தப்பிப் பிழைத்தனர். அவர்களுடைய சொத்துகளும் அழிந்துபோகாமல் மிஞ்சின. பாக்ஷா திருடரிடம் கைதியாகாமல் பத்திரமாக இருக்கிறார்; ஊரையெல்லாம் கொள்ளையடித்து சகிக்கமுடியாத அட்டூழியம் செய்து வந்த திருடர்களெல்லாரும் பிடிபட்டு சிறைச்சாலையில் அடைபட்டுக் கிடக்கிறார்கள். நிரபராதிகளான குமுதவல்லியம்மாள் முதலிய ஐவருடைய உயிர்களும் காப்பாற்றப்பட்டன. எங்களுடைய கலியாணமும் நிர்விக்கினமாக இன்றையதினம் நிறைவேறியது. எல்லோரிலும் அயோக்கியனான முருகன் அந்தத் திருடரோடு வரவில்லையாம். நேற்றைக்கு முந்திய நாள் பாக்ஷா இந்த ஊரில் வந்து இறங்கியபோது சாயுங்காலம் ஜனங்கள் கும்பலாக நின்று வேடிக்கை பார்த்த சமயத்தில் அந்தக் கும்பலில் முருகனும் மறைந்து நின்று அச்சை பார்த்துக்கொண் டிருந்தானாம். மாதவ பாண்டியர் அவன் நின்றதைத் தற்செயலாகக் கண்டு அவனைப் பின்தொடர்ந்துபோய், அவனைப் பிடித்து பாக்ஷாவின் சிப்பாயிகளிடம் ஒப்புவித்து அவனையும் சிறைப்படுத்தும்படி செய்துவிட்டாராம்; இத்தனை நன்மைகளையும் அந்தக் காட்டேறி மாதவபாண்டியரைத் தூண்டிச் செய்துவைத்தது. நாங்கள் புறப்பட்டு இங்கே வருவதாகச் சொல்லிவிட்டு இப்போது வந்தபோதுதான் மாதவ பாண்டியரும் புறப்பட்டு உன்னிடம் வந்தார்; நீ குமுதவல்லியம்மாளுக்கு மறுபடியும் ஏதாவது கெடுதல் செய்வாயோ வென்ற கவலையோடு அவர் வந்தார். அவர் இப்போதும் எங்கேயாவது நமக்கு சமீபத்திலேதான் இருந்து உன்னைக் கவனித்துக்கொண்டிருப்பாரென்று நினைக்கிறேன். எல்லா சங்கதிகளும் உன்னுடைய விருப்பத்துக்கு மாறாக நடந்துபோய் விட்டதைப்பற்றி நீ வெட்கமாவது, அவமானமாவது, விசனமாவது கொள்ளக்கூடாது. தெய்வாநுகூலத்தினால் நமக்கு எவ்வளவோ பெருத்த நன்மைகள் ஏற்பட்ட

னவாகையால், நாமெல்லோரும் அதைப்பற்றி சந்தோஷமடைவதே உரிய காரியம். நாம் இங்கே வந்து நேரமாகிறது. மாதவ பாண்டியர் வெளியில் காத்திருப்பார். நாமெல்லோரும் வெளியில் போய், மாதவபாண்டியரை அழைத்துக்கொண்டு நம்முடைய அந்தப்புரத்துக்குப் போய் சந்தோஷமாக இருப்போம் வா" என்று கூறி அக்காளை அழைக்க, அவள் அவன் சொன்ன வரலாற்றைக் கேட்டு அப்படியே பிரமித்து ஸ்தம்பித்து வாய் திறந்து பேசமாட்டாமல் மௌனமாகவே வாசலை நோக்கி நடக்கலானாள். உடனே சுந்தர பாண்டியதேவன் குமுதவல்லி யம்மாளையும் அழைத்துக்கொண்டு, வெளியில்போய் அந்த அறையின் கதவை மூடிப் பூட்டிக்கொண்டு எல்லோரும் தொடர்ந்துவரத் தனது அந்தப்புரம் சென்றான்.

---

## 33-வது அதிகாரம்.

### முடிவுரை.

சுந்தரபாண்டியதேவனது அரண்மனையில் முன் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில், இப்ராஹீம் பாக்ஷா இறங்கி இருந்த கூடாரத்தில் என்ன நடந்த தென்பதைக் கவனிப்போம். சுந்தரபாண்டிய தேவனுக்கும் குமுத வல்லியம்மாளுக்கும் மாதவனது மாளிகையில் கலியாணம் நடந்த தென்பது முன்னரே சொல்லப்பட்டதல்லவா. இப்ராஹீம் பாக்ஷா அந்தவூர்க் கவர்னர் அப்பாஜி ராயர் முதலிய பெரிய மனிதர்களெல்லோரும் நேரில் வந்திருந்து அந்தக் கலியாணத்தை நிரம்பவும் விமரிசையாக நடத்தி வைத்ததன்றி முடிவுச் சடங்குகளையும் அன்றைய தினம் சாயுங்காலத்தோடு பூர்த்தி செய்து சதிபதிகளிருவரையும் அவர்களது அரண்மனைக்கு அனுப்பிவைத்தார்கள். அதன்பிறகு இப்ராஹீம் பாக்ஷா கோதண்டராமபாண்டியனை யழைத்துக்கொண்டு தமது கூடாரத்துக்கு வந்து சேர்ந்தார். சேர்ந்தவர் கோதண்டராம பாண்டியனைத் தனது போஜனத்தை முடித்துக்கொண்டு வரும்படி அவனது கூடாரத்துக்கு அனுப்பிவிட்டுத் தாமும் தமது உடைகளை மாற்றிக் கொண்டு போஜனத்தை முடித்துக்கொண்டு திரும்பிவந்து உன்னதமான ஒரு ஸோபாவின்மீது சிறிதுநேரம் உட்கார்ந்திருக்க, உடனே கோதண்டராம பாண்டியனும் வந்துசேர, இருவரும் ஒருவர் பக்கத்

திலொருவர் உட்கார்ந்து தாம்பூலமணிந்துகொண்டு அன்றையதினம் நடந்த கலியாணத்தைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் சந்தோஷமாகவும், வேடிக்கையாகவும் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். அப்போது திடீரென்று ஒரு மெய்க்காவலன் உள்ளே நுழைந்து குனிந்து பாக்ஷாவுக்கு சலாம் செய்து "பாக்ஷாவே! மைசூரிலிருந்து ஒரு வேவுகாரன் வந்திருக்கிறான். பாக்ஷாவுக்கு நம்முடைய சுல்தான் ஏதோ ஸ்ரீமுகம் அனுப்பி இருக்கிறாராம். அதை அந்த வேவுகாரன் எடுத்து வந்திருக்கிறான். அவன் இதோ வாசலில் நிற்கிறான்" என்றான். அதைக் கேட்ட பாக்ஷா திடுக்கிட்டு நிமிர்ந்து "ஓ! அப்படியா! அவனை உடனே அழைத்துவா," என்றார். மெய்க்காவலன் உடனே வெளியில் போக, அடுத்த நிமிஷம் அந்த வேவுகாரன் உள்ளே நுழைந்து குனிந்து பாக்ஷாவுக்கு சலாம் செய்து சுல்தானது கடிதத்தை பாக்ஷாவிடம் நீட்ட, அவர் ஆவலோடு அதை வாங்கினார். தாம் மைசூரை விட்டுவந்த சொற்ப தினங்களுக்குள் சுல்தான் தனக்கு அவ்வளவு அவசரமாக எந்த விஷயத்தைப் பற்றி எழுதி இருக்கப் போகிறாரென்ற கவலையும், ஆவலும் எழுந்து பாக்ஷாவினது மனதை வதைத்தன. ஆகையால் அவர் அந்தக் கடிதத்தை வாங்கியவுடனே அவசரமாக அதன் அரக்குமுத்திரைகளையும், மேலே கட்டப்பட்டிருந்த கயிற்றையும் விலக்கி, உரையைக் கிழித்து, உள்ளே இருந்த ஸ்ரீமுகத்தை எடுத்துத் தனக்குள்ளாகவே படிக்கலானார். அது அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

ஆண்டவர் துணை.

நமது அருமையான மாப்பிள்ளையும் அதி பராக்கிரமமும் புத்தி சாதுர்யமும் நிறைந்த பிரதான மந்திரியுமான கனம் தங்கிய இப்ராஹீம்பாக்ஷா அவர்களுக்கு அல்லாஹுத்தாலாவின் கிருபை பரிபூரணமாக உண்டாவதாக. இங்கே எல்லோரும் சுகம். அவ்விடம் உங்களுடைய சுகத்தை அறிய விரும்புகிறோம்.

நீங்கள் கடைசியாக எனக்கு அனுப்பிய கடிதத்தைப் பார்த்து நான் அடைந்த ஆச்சரியத்துக்கும் விசனத்துக்கும் அளவு சொல்ல முடியாது. அதைப் படித்தவுடனே உங்களை அழைத்துவந்து சமாதானப்படுத்தவேண்டுமென்று நினைத்து நான் உடனே ஒரு சேவகனை உங்களுடைய அரண்மனைக்கு அனுப்பினேன். அவன் திரும்பி

வந்து நீங்கள் மேற்கு சமுத்திரக் கரைக்குப் போய்க் கப்பலேறிக் காளிங்கராயன் கோட்டைக்குப் போய்விட்டதாக வந்து மறுமொழி சொன்னான். அதைக் கேட்டவுடனே என்னுடைய மனசிலுண்டான சங்கடமும் விசனமும் பொறுக்க முடியாதனவாகப் பெருகி வதைத்துக் கொண்டிருக்கின்றன. பாஞ்சாலியம்மாள் என்ற பெண்ணும் நீங்களும் தனியாகப் பேசிக்கொண்டிருந்த காலத்தில், நேர்ந்த விகாரமான சம்பவத்தைக் கேட்க, என் மனசில் ஒருவித அருவருப்பும் கொதிப்பும் உண்டாகின்றன. சிப்பாயிகள் அங்கே வந்து தங்களுக்குத் தொந்திரவு செய்ததெல்லாம் என்னுடைய உத்தரவினால் நடந்ததென்று நீங்கள் நினைப்பது சகஜமே. ஆனாலும் நான் அல்லாஹுத்தாலா அறியச் சொல்லுகிறேன். அப்படிப்பட்ட இழிவான காரியத்தில் நான் ஒருநாளும் இறங்கக்கூடியவனேயல்ல. காரியம் அப்படி நடந்ததென்பதை, நான் உங்களுடைய கடிதம் வந்தபிறகு தான் தெரிந்துகொண்டு, அப்படி யார் செய்ததென்று விசாரித்தேன். என்னுடைய தாயாரான பெரியராணியம்மாள் தம்முடைய பேர்த்தியின் மேல் வைத்துள்ள கரைகடந்த வாத்சல்யத்தினால் தூண்டப்பட்டு அப்படிப்பட்ட காரியம் செய்ததாக அறிந்து, நான் அவர்களை நிரம்பவும் கண்டித்தேன். விஷயம் இப்படி நடந்ததென்பது என் மகளுக்குக் கூடத்தெரியாது. நான் அந்த சங்கதியை உணர்ந்தவுடனே, அந்தப் பாஞ்சாலியம்மாளை சௌகரியமான ஓரிடத்தில் வசதியாக வைத்து நிரம்பவும் மரியாதையாக நடத்தும்படி ஏற்பாடு செய்து அவளுடைய உத்தரவுப்படி நடந்துகொள்ள ஏராளமான பணிப்பெண்களையும் அமர்த்தி இருக்கிறேன். அவள் ஒரு ராஜாத்திபோல இருந்து வருகிறாள். அந்தப் பெண்ணைப்பற்றி நீங்கள் கொஞ்சமும் கவலைப்பட வேண்டியதில்லை. அந்தப் பெண்ணுக்கு நாங்கள் ஏதாவது தீங்கிழைத்தால், நீங்கள் இனி ஆயிசுகால பரியந்தம் என்னுடைய புத்திரியின் முகத்தில் விழிக்கிறதே யில்லையென்றும், அவளையும் நீங்கள் கலியாணம் செய்துகொள்ள அநுமதி கொடுக்க வேண்டுமென்றும் நீங்கள் கடிதத்தில் எழுதியிருக்கிறீர்கள்.

அந்தப்பெண்ணுக்கு நாங்கள் எவ்விதமான தீங்கும் இழைக்காமல் முன்னே சொன்னபடி சௌக்கியமாக வைத்திருக்கிறோம். நீங்கள் அந்தப் பெண்ணையும் கலியாணம் செய்துகொள்ள நான் என்

மனப்பூர்வமாக அநுமதிக்கிறேன். என் குமாரத்தியும் முழுமன தோடு அதற்கு இணங்குகிறாள். என் தாயாரான பெரிய ராணியி னால் முன்னே நடந்ததுபோல இனியும் ஏதாவது துன்பம் நேரிடுமோ வென்ற யோசனையும் உங்களுக்கு வேண்டாம். ஆகையால் இது வரையில் நடந்துபோன விஷயங்களையெல்லாம் நீங்கள் மன்னித்து மறந்து, உடனே புறப்பட்டு இங்கே வந்து சேரும்படி நான் நிரம் பவும் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ஊருக்கு நீங்கள் வந்த வுடனே நாங்களே கூட இருந்து பாஞ்சாலியம்மாளுக்கும் உங்க ளுக்கும் அதிக விமரிசையாகக் கலியாணம் நடத்தி வைக்கிறோம். எப்படியாவது, நீங்கள் என்னுடைய குமாரியின் மீது எப்போதும் போல வாஞ்சையும் மதிப்பும் வைத்து அவளைப் பட்சமாக நடத்து வதன்றி அவள் பட்ட மகிஷி என்ற கண்ணியத்துக்குக் கொஞ்சமும் பழுது ஏற்படாமல் அவளை நடத்த வேண்டியது. அது ஒன்றுதான் நான் உங்களிடம் செய்து கொள்ளும் வேண்டுகோள். இந்தக் கடிதத் தைப் பார்த்தும் உங்களுடைய கோபம் தணியாவிட்டால், நானே புறப்பட்டு நேரில் அங்கே வர உத்தேசித்திருக்கிறேன். ஆண்ட வன் துணை செய்ய வேண்டும்.

இங்ஙனம்

உங்களிடம் பிரியம் மாறாத

திப்புசுல்தான்.

என்று எழுதப்பட்டிருந்த கடிதத்தைத் தமக்குள் படித்துப் பார்த்த பாஷா தமது கண்களை நம்பாமல் அதை இன்னொருதரம் படித்துப் பார்த்து ஆநந்த பரவச மடைந்து பூரிப்படைந்தவராய், உடனே அந்தக் கடிதத்தைக் கோதண்டராம பாண்டியனிடம் கொடுக்க, அவனும் அதை ஆவலோடு வாங்கி விரைவாகப் படித்தான். படிக் கவே அவனது மனமும் முகமும் கரைகடந்த மகிழ்ச்சியினால் மலர்ந் தன; அவன் ஆநந்தமாகப் புன்னகை செய்து பாஷாவை நோக்கி "இப்படிப்பட்ட சந்தோஷ சங்கதியை நான் எதிர்பார்க்கவே இல்லை. நீங்கள் பயமுறுத்திக் கடிதம் எழுதியிருந்தாலும், அவர் கள் நம்முடைய பாஞ்சாலியம்மாளை ஒருவேளை கொன்றாலும் கொன்று விடுவார்களென்று நினைத்து நான் இரவு பகல் அதே கவலையாக இருந்து வந்தேன். என்னவோ தெய்வந்தான் துணை

யிருந்து பாஞ்சாலியம்மாளையும் காப்பாற்றி இவர்களுடைய மனசை யும் இவ்வளவு தூரம் நமக்கநுகூலமாக மாற்றியது" என்றான்.

அதைக்கேட்ட பாக்ஷா கட்டிலடங்காக் குதூகலமும் ஆநந்தமு மடைந்து சந்தோஷம் ஜுவலித்த அழகிய முகத்தோடு புன்னகை செய்து "பாஞ்சாலியம்மாளுடைய பதிவிரதா தர்மமல்லவா தலைகாத் தது. அவள் பத்தினிக் கடவுளல்லவா. எப்பேர்ப்பட்ட கொடுங்கோல் மன்னனுடைய கொடிய வாளும், பதிவிரதா ஸ்திரீகளின் முன் மழுங் கிப் போகுமென்று சொல்வது பொய்யாகுமா? சரி; எல்லாம் நம் முடைய இஷ்டம்போலவே நடந்துவிட்டது. இங்கேயும் நாம் வந்த காரியம் திருப்திகரமாக முடிந்துவிட்டது. நாம் இவ்விடத்தில் இன் னம் இரண்டொரு தினம் இருந்துவிட்டுப் புறப்பட்டு மைசூருக்குப் போய்ச் சேருவோம்," என்று கூறிவிட்டுத் தமக்கெதிரிலிருந்த வேவுகாரனை வெளியில் அனுப்பி வைத்தார்.

* * * * *

அதன்பிறகு இப்ராஹீம் பாக்ஷா அந்த ஊரில் இரண்டு நாட்கள் தங்கி இருந்து தனது அத்தை, குமுதவல்லியம்மாள், சுந் தரபாண்டிய தேவன் முதலியோருக்கு ஏராளமான ஆபரணங்களைச் சன்மானம் செய்து, அவர்களோடு ஆநந்தமாக இருந்து, மூன்றும் நாள் அவர்களிடம் செலவு பெற்றுக்கொண்டு கோதண்டராமபாண் டியனோடு புறப்பட்டுத் தூத்துக்குடிக்குப்போய்க்கப்பலேறி சிலதினங் களில் மைசூருக்குப்போய்ச் சேர்ந்தார். திப்பு சுல்தான் அவரை அன்பாக வரவேற்றுத் தமது கடிதத்தில் எழுதிய பிரகாரம் அதிசீக் கிரத்தில் பாஞ்சாலி யம்மாளை பாக்ஷாவிற்குக் கலியாணம் செய்து வைத்தார். பாஞ்சாலியம்மாள் என்ற பதிவிரதா சிரோன்மணி தனது மனோரதம் நிறைவேறப் பெற்றவளாய் பாக்ஷாவின் ஆசைப் பத்தினியாகித் தனியான ஓர் அரண்மனையில் சர்வசுக போகங்க ளுடன் ராஜாத்திபோல இருந்து வருகிறாள். ஆனால் அவளுக்குக் கலியாணம் ஆகுமுன்னர் அவள் முகம்மதியமதத்தில் சேர்ந்துகொண் டாள். தனது அருமைச் சகோதரியும், ஆருயிர் நண்பரான பாக்ஷாவும் முகம்மதிய மதத்திலிருக்கத் தான்மாத்திரம் ஹிந்துவாக இருக்கச் சகியாத கோதண்டராம பாண்டியனும் அதுபோலவே முகம்மதிய மதத்தில் சேர்ந்து கொண்டான்; திப்பு சுல்தான் தமது

நெருங்கிய உறவினரான ஒரு சீமானது செல்வக் குமாரியை அவ னுக்குக் கலியாணம் செய்துவைத்ததன்றி, அவனுக்கு அந்த அரண் மனையில் ஒரு பெருத்த உத்தியோகமும் செய்துவைத்தார்.

இப்ராஹீம் பாக்ஷா தமது முதல் மனைவியான பட்டமகிஷி யிடத்திலும், இரண்டாவது மனைவியான பாஞ்சாலியம்மாளிடத்திலும் சமமான பிரியமும் மதிப்பும் வைத்து உத்தமபுருஷராக இருந்துவந்த தன்றி வருஷத்துக் கொருமுறை தமது தங்கையான குமுதவல்லி யம்மாளுக்கும் அத்தைக்கும் சுந்தரபாண்டிய தேவனுக்கும் விலை யுயர்ந்த பொருட்களை அனுப்பியதோடு அடிக்கடி நேரிலும் போய்ப் பார்த்துத் தாமும் ஆநந்தமடைந்து அவர்களையும் மகிழ்வித்துவந்தார்.

இந்தக் கதையில் நாம் சொல்லவேண்டியதெல்லாம் அநேகமாய் முடிந்துபோய் விட்டதாகையால், இதில் குறிக்கப்பட்ட முக்கியமான சிலரது முடிவை மாத்திரம் தெரிவித்து விட்டு, அவ்வளவோடு நிறு த்துவோம். மைசூர் ராஜ்யத்து முதல் மந்திரியான இப்ராஹீம்பாக்ஷா நேரில் வந்து மரணதண்டனைக் குற்றவாளிகளை யெல்லாம் விடுவித்து விட்டாரென்பதையும், குமுதவல்லி யம்மாள் அவரது சொந்தத் தங்கை யென்பதையும், கேள்வியுற்ற வீரசிங்கன் கோட்டை மகா ராஜா நிரம்பவும் திகில்கொண்டார். தமது பட்டமகிஷியான அழ கிய நங்கை நாச்சியாருக்கு உதவி செய்தார்களென்ற ஆங்காரத்தி னால், குமுதவல்லியம்மாள், அவளது அத்தை முதலியோரைத் தாம் அக்கிரமமாக மரணதண்டனைக்கு ஆளாக்கியதை பாக்ஷா கண்டு கொண்டா ரென்பதும் வீரசிங்கன் கோட்டை மகாராஜாவுக்குத் தெரிந்துபோனதாகையால், அவர், பாக்ஷாவினால் தமக்கு ஏதேனும் பெருத்த அபாயம் நேருமென்ற திகில் கொண்டு, துப்பாக்கியால் தம்மைத் தாமே சுட்டுக்கொண்டு இறந்துபோய்விட்டார். அவருக்குப் புத்திரசந்தான மில்லையாகையால், அவரது சமஸ்தானமெல்லாம் அவ ரது தம்பியின் மகனுக்குப் போய்ச் சேர்ந்தது.

அழகிய நங்கை நாச்சியார், மருங்காபுரி மைனர், பப்புசெட்டி யார் ஆகிய மூவரும், கவர்னரால் விடுதலை யடைந்தனர். குமுத வல்லியும், அத்தையும் இப்ராஹீம் பாக்ஷாவிடம் சிபார்சு செய்தார்க ளாகையால், பாக்ஷா கவர்னரிடம் சொல்ல, அதனால் அவர் முன்

குறித்த மூவரையும் விடுதலைசெய்தார். பப்பு செட்டியார் தமது வழக்கப்படி கொடுக்கல் வாங்கல் தொழிலைச் செய்துவந்தார். அழகிய நங்கை நாச்சியார் தனது புருஷன் இறந்து போனதையும், தங்கள் சமஸ்தானம் பங்காளியைச் சேர்ந்து போனதையும் கேள்வியுற்று நிரம்பவும் விசனமடைந்ததன்றி, தான் மருங்காபுரி மைனரிடத்தில் வைத்த துராசையினால் தனக்கு நேர்ந்த அவமானத்தினாலும், பிராணுபாயத்தினாலும், நிரம்பவும் கலகலத்துப்போன தன்றி குமுதவல்லி யம்மாளினது மாசற்ற பதிவிரதைத் தனத்தைக் கண்டு தானும் திருந்திப் புதுமனிஷியாக மாறித் தனது பங்காளியால் கொடுக்கப்பட்டு வரும் ஜீவனும்சத்தைப் பெற்றுத் தனது தாய்வீட்டில் நன்னடத்தையோடு ஒழுகிவந்தாள். அதுபோலவே மருங்காபுரி மைனரும் திருந்தித் தனது மனைவியோடு அன்னியோன்னியமாக இருந்து பெற்றுப்பெருகி சந்தோஷமாக வாழ்ந்து வந்தான். சுந்தரபாண்டிய தேவனது அரண்மனையில் ரகசிய அறையிலிருந்த எலும்புக் கூண்டுகளிரண்டும் அவ்விடத்தை விட்டு அப்புறப்படுத்தப்பட்டு அரண்மனைத் தோட்டத்தில் புதைக்கப்பட்டன. அவ்வாறு புதைக்கப்பட்ட இடத்தில் சமாதிகள் கட்டி, சுந்தரபாண்டிய தேவன் அடிக்கடி அவற்றிற்குப் பூஜைசெய்து வருகிறான். அவனது தகப்பனால் எழுதிவைக்கப்பட் டிருந்த ஓலைச்சுவடி நெருப்பில் போட்டுக் கொளுத்தப்பட்டுப் போனது. அவனும் குமுதவல்லி யம்மாளும் அந்த சமஸ்தானத்துக்கு அதிபதிகளாகவும் நிகரற்ற தம்பதிகளாகவும் இருந்து அழகான குழந்தைகளைப் பெற்று நித்தியானந்தபோக மநுபவித்து நீடூழிவாழ்ந்து வந்தனர். குமுதவல்லியின் அத்தையும் அவர்களோடு கூடவே நெடுங்காலம் இனிதிருந்தாள். அவ்வூரில் மலைக்குகையி லிருந்து கொள்ளை கொலை முதலியவற்றை நடத்திவந்த மகா துஷ்டர்களான கொள்ளையன் முதலியோர் நியாயாதிபதியால் மாணதண்டனை பெற்று மாண்டுபோயினர். நச்சுத்தீவில் கத்தியால் குத்தப்பட்டு, கட்டுமரத்தில் வைத்து சமுத்திரத்தில் விடப்பட்ட மாயாண்டித்தேவனது முடிவு என்னவாயிற்றென்பது எவருக்கும் தெரியாமலே போயிற்று. அவன் இறந்து மீன்களுக்கு இரையாகிப் போயிருக்க வேண்டுமென்றே கோமளவல்லி நாச்சியாரும் மாதவனும் யூகித்துக் கொண்டனர்.

சுந்தரபாண்டிய தேவனுக்கும் குமுதவல்லிக்கும் கலியாணம் நடந்த தினத்திற்கு மறுநாளே, மாதவனும் கோமளவல்லி நாச்சியாரும் காளிங்கராயன் கோட்டையை விட்டுப் புறப்பட்டுப் பலநாட்கள் பிரயாணம் செய்து வெகு தூரத்துக் கப்பாலிருந்த பொதிய மலையை அடைந்து அதன்மேலேறி உச்சியிலிருந்த அரசமரத்தையும் அதனடியில் தபசு செய்து கொண்டிருந்த நித்யாநந்த சாகர யோகீசுவரரையும் கண்டனர்; மாதவனது குலதெய்வமான காட்டேறி சொன்னது போலவே, அவ்விடத்தில் அந்த யோகீசுவரரைச் சுற்றிலும் தலைவரையில் கறையான் புற்று வளர்ந்திருக்கக் கண்டு அவரது நிஷ்டைக்கு பங்கம் வாராமல் அந்தப் புற்றை மெதுவாக விலக்கிவிட்டு, அந்த இடத்தை சுத்தம் செய்து, அவ்விடத்திலேயே இருந்து தினந்தினம் அவருக்கெதிரில் வந்து அவரை ஒரு தெய்வமாக மதித்துப் பூஜித்துவர, இரண்டு மாசகாலத்துக்குப் பிறகு அந்த மகான் கண்களைத் திறந்து பார்த்து, ஞான திருஷ்டியால் உண்மையை உணர்ந்துகொண்டு, அவர்களை அநுக்கிரகித்தார். மாதவனது ஆயுள் வளருவதற்காகவும், கோமளவல்லி நாச்சியார் செய்த ஸ்திரீ ஹத்திதோஷம் தீருவதற்காகவும், அந்த மகான் அவர்களுக்கு ஏதோ சில மார்க்கங்களை உபதேசிக்க, அவர்களிருவரும் அதன்படியே தாங்களும் நிஷ்டையிலமர்ந்து நெடுங்காலம் கடுந்தவம் புரிந்து, தங்களது கருத்தைப் பலிதமாக்கிக் கொண்டு, இன்னமும் அதே தபசிக்குத் தொண்டுசெய்து அந்த இன்பத்திலேயே ஈடுபட்டிருப்பதாக இப்போதும் அந்தப் பக்கத்து ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

முற்றிற்று

சுபம்! சுபம்!! சுபம்!!!

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182842